# தமிழரசு

ஆகஸ்ட் 1-31, 2000, ரூ10



# தலை வணங்கின பயிர்கள்
# தலை நிமிர்ந்தது தமிழகம்






**கலைஞர் கண்ட கணக்கற்ற திட்டங்கள்**
**விளைந்தன வேளாண் விந்தைகள்**




- நெல் கொள்முதலில் நெல் உற்பத்தி ஊக்கத் தொகை
- யூரியா வரி 4 விழுக்காடு என்பது 2ஆக குறைப்பு
- தரிசு நில மேம்பாட்டிற்கு தனி ஆணையம்
- 1990ல் கலைஞர் அரசு வழங்கிய இலவச மின்சாரம் தொடர்ந்து நீடிப்பு
- 8 இலட்சம் உர அடையாள அட்டைகள்
- கரும்பு பயிர்க்கடன் ரூ. 55 ஆயிரமாக உயர்வு
- இதர பயிர்களுக்கு ரூ. 35 ஆயிரமாக உயர்வு

**இந்திய தொழில் வர்த்தக சபை அறிக்கையிலிருந்து......**

வேளாண்விளைதிறன் வளர்ச்சி விகிதத்தில் தமிழகம் மேலும் மூன்று சாதனைகள்.

- கரும்பு உற்பத்தித்திறனில் அகில உலக அளவில் முதலிடம்
- அரிசி உற்பத்தித்திறனில் இந்தியாவில் முதலிடம்
- நிலக்கடலை, சூரியகாந்தி எண்ணெய்வித்துக்கள் விளைதிறனிலும் இந்தியாவிலேயே முதலிடம்

விதையான திட்டங்கள் — விளைந்த பலன்கள்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆடி – ஆவணி
ஆகஸ்ட் 1–31, 2000
மலர் : 32 இதழ் : 3 & 4
விலை ரூ.10


முதல் பக்க அட்டையில்

சுதந்திரத் திருநாள்

கடைசிப் பக்க அட்டையில்

திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

இந்த இதழில்...


- இந்திய சுதந்திரத் திருநாள் — 2
- ஒரு கிராமத்து நதி — 8
- இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மிகவும் ஏற்ற மாநிலம் தமிழ்நாடு — 10
- சென்னையில் மேலும் இரு மேம்பாலங்கள் — 17
- நாட்டுப்புறவியல் கூறுகள் — 22
- சிதைவு — 28
- செய்திச்சரம் — 33
- நாகை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் — 37
- தன்னிறைவைப் பெற்ற பச்சைமலைப்பகுதி — 41
- ஈரோடு மாவட்ட வளர்ச்சிப் பணிகள் — 44
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடிநீர் வசதி — 47
- திரைப்பட விருதுகள் வழங்கும் விழா — 49
- போதுமான தண்ணீர் பருகாமையால் தோன்றும் நோய்கள் — 55
- ரெட்டைமலை சீனிவாசன் அஞ்சல்தலை — 58
- அரசின் அரும் செயல்களில் தொழிற்சாலைகள் பங்கேற்க வேண்டும் — 62
- இந்தியப் பொருளாதார மையம் தகவல் — 64
- நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் — 66
- சங்க இலக்கிய உத்திகள் — 70
- திருவாரூரில் முதல்வர் கலைஞர் — 73
- இருதயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் — 77


## திருக்குறள்

***தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே***
***வேளாண்மை என்னுஞ் செருக்கு.***

பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடாமுயற்சி மேற்கொள்ளக்கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

பேரன்பு கொண்ட பெரியோர்களே!

அருமைத் தாய்மார்களே!

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே!

இன்று நமது இந்தியத் திருநாட்டின் சுதந்திரத் திருநாள்.

சுதந்திரம் அடைந்த பிறகு, நமது நாடு பல்வேறு துறைகளிலும் பாராட்டத்தக்க வகையில் முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. தமிழகமும் இந்தியாவில் உள்ள இதர மாநிலங்கள் எல்லாம் பாராட்டும் வகையில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது.

உலக நாடுகளும் பாராட்டும் வகையில் மேலும்மேலும் பல முன்னேற்றங்களைக் காண்பதற்கு ஏற்ப, நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து உழைத்திட வேண்டும் என்னும் உணர்வினை நமக்கு அளிக்கின்ற நாள் இந்தச் சுதந்திரத் திருநாள்.

இந்த அரசு 1996 ஆம் ஆண்டில் நான்காவது முறையாகப் பொறுப் பேற்ற பிறகு, உருவாக்கப் பட்ட புதிய திட்டங்கள் பல.

அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்கு அளித்திடும் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்",

ஊர் முன்னேற்றத்தில் ஒவ்வொருவரும் பங்கேற்றிட வேண்டும் எனும் உணர்வை வளர்த்திடும் "நமக்கு நாமே திட்டம்",

மக்கள் மனம் மகிழும் வண்ணம் மக்கள் பிரதிநிதிகள் தொண்டாற்றிட வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத, இந்த மாநிலத்தில் மட்டுமே "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்",

துள்ளித் திரியும் பள்ளி மாணவர்க்கும் அறிவை அள்ளித்தரும் கணினிக்கல்வித் திட்டம்,

கந்துவட்டி கட்டி மனம் வெந்துவிட்ட மகளிர் பயன்பெற சேமிப்புடன் இணைந்த சிறுவணிகக் கடன் திட்டம்,

சிற்றூர் மக்களுக்கும் பயனளிக்கும் "மினி பஸ்" எனும் "சிற்றுந்துத் திட்டம்",

சமத்துவச் சிந்தனையை மக்களிடையே வளர்த்திடும் "பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்",

# இந்திய சுதந்திரத் திருநாள்

## முதலமைச்சர் கலைஞர் உரை

உழுவோரும், நுகர்வோரும் பயனடைய "உழவர் சந்தை திட்டம்",



வந்தபின் தவிப்பதை விட, வருமுன் காப்போம் எனும் சிந்தனையைத் தந்து செயல்பட வைத்திடும் "வருமுன் காப்போம் திட்டம்",

மேழிச் செல்வங்களை மேம்படுத்த "கால்நடை மேம்பாட்டுத் திட்டம்",

மாணவர்களிடம் உடல்நலம் ஓம்பும் உணர்வினை பள்ளிப்பருவம் முதல் வளர்த்திடும் "வாழ்வொளித் திட்டம்",

அடிக்கடி தீ விபத்துகளுக்கு ஆளாகி அல்லல்படும் ஏழைக் குடிசைவாழ் மக்களுக்கு கல்நார் கூரையுடன் வீடுகள் அமைக்கும் திட்டம்,

கிராமப்புறக் கைவினைக் கலை ஞர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வாய்ப்பு களை அதிகரித்திட "பூமாலை விற்பனை மையம்",





கிராமப்புற மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் "மகளிர் திட்டம்" – எனப் புதிய பல திட்டங்கள் நான்காண்டுகளாக நடைமுறைப் படுத்தப்பட்டு தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கப் பட்டுள்ளன.

நிர்வாக வசதிகளை மேம்படுத்திட தேனி, திருவள்ளூர், நாமக்கல், திருவாரூர் என புதிய மாவட்டங்கள் உருவாக்கம். அரியலூரிலும் புது மாவட்டம் அமைத்திட நடவடிக் கைகள்.

திண்டுக்கல், தூத்துக்குடி, சென்னை, விழுப்புரம், திருவண்ணா மலை, நாமக்கல், கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், தேனி ஆகிய 10 மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள்,

உயர்கல்வி வசதிகளை பெருக்கிட "உயர்கல்வித்துறை",

கடுஞ்சாலைகளைக் கால்படும் சாலைகளாக மேம்படுத்திட "நெடுஞ்சாலைத்துறை",

இளைஞர்களின் நலம் வளர்த்திட "இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை",

தமிழ் மொழியின் பயன்பாட்டைப் பெருக்கிட "தமிழ் ஆட்சி மொழித்துறை",

தகவல் தொழில் நுட்பத்தில் தமிழகம் சிகரத்தைத் தொட "தகவல் தொழில் நுட்பவியல் துறை",

1995இல் தொழில் வளர்ச்சியில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழகம் தற்போது இந்தியாவிலேயே முதலிடம்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியுள்ளதில் தமிழகம் முதலிடம்.

உயர்கல்வி வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.

கார்கில் போராட்டத்தின் போது தேசிய பாதுகாப்பு நிதிக்கு அதிக நிதி வழங்கியதில் தமிழகம் முதலிடம்.

தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.




1996 ஏப்ரலில் தமிழகத்தில் 34 மென்பொருள் நிறுவனங்கள்; தற்போது 600க்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள்.

1995–96இல் தமிழகத்தில் தயாரிக்கப் பட்ட மென்பொருள் களின் ஏற்றுமதி மதிப்பு 37 கோடி ரூபாய்; 1999–2000இல் 1914 கோடி ரூபாய்.

மென்பொருள் வல்லு நர்கள் எண்ணிக்கை இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகம்.

சமதர்ம சமுதாயம் உருவாக உழைத்திட வேண்டும் என்னும் உணர்வினை வழங்கி வழிகாட்டிட "சமூகச் சீர்திருத்தத்துறை",

பழங்குடியின மக்களைச் செழுங்குடியின மக்களாக மாற்றிட "பழங்குடியினர் நலத்துறை" எனப் பல்வேறு புதிய துறைகள் உருவாக்கப்பட்டுத் துறைதோறும் தமிழகம் பிறை போல வளர்ந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளன.

தொழில் நட்புறவுக் கொள்கையுடன் கூடிய வெளிப்படையான அணுகுமுறை, திறந்த நிர்வாகம், ஊழலற்ற ஆட்சி என்பதை இந்த அரசு கொள்கையாகக் கொண்டதால்,

மென்பொருள் தயாரிப்பதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையே என "நாஸ்காம்" அமைப்பின் ஆய்வு பறை சாற்றி யுள்ளது.

4.7.2000 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களால் திறக்கப் பட்ட "டைடல் பார்க்" தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குச் சீரிய சான்றாகத் திகழ்கிறது.

குழந்தைகள் நலன்காக்க போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம் முதல் இடம்.

எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதல் இடம்.

மண்ணில் மகிழ்ச்சி நிலைத்திட மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதல் இடம்.

சிசு மரணம் தேசிய சராசரி 72; தமிழகத்திலோ 53 மட்டுமே!

பிறப்பு விகிதம் தேசிய சராசரி 26.5; தமிழகத்தின் சாதனை 19.2.

- அரிசி உற்பத்தித் திறன்
- எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறன் ஆகியவற்றில் தமிழகம் இந்தியாவில் முதலிடம்.
- கரும்பு உற்பத்தித் திறனில் இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே தமிழகம் முதலிடம்.

தமிழக போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு ஆண்டுதோறும் வழங்கும் 10 விருதுகளில் 1997இல் 7 விருதுகளையும், 1998–99இல் 5 விருதுகளையும் பெற்றுப் பெருமை கண்டுள்ளது தமிழகம்.

தேசிய அளவில் உள்ள மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்புக் குழு வழங்கும் விருதுகளில் 9 விருதுகளைக் கடந்த ஆண்டில் பெற்றுள்ளது தமிழகம்.

1996க்குப் பின் 740 கோடி ரூபாய் செலவில் 475 பாலங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப் பட்டதில் இதுவரை 204 கோடியே 68 இலட்ச ரூபாய் செலவில் 179 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 535 கோடியே 32 இலட்ச ரூபாய் செலவில் 296 பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

சென்னையில் 10 புதிய மேம்பாலங்கள் 115 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டதில் இதுவரை 7 பாலங்கள் எழிலுடன் அமைக்கப்பட்டு, திறக்கப்பட்டுள்ளன.

நேப்பியர் பாலம் 5 கோடியே 11 இலட்ச ரூபாய் செலவில் அழகுடன் விரிவுபடுத்தப்பட்டுள்ள பாங்கினைப் பாராட்டாதவர் எவருமில்லை.

4 ஆண்டுகளில் 20,900 கிலோ மீட்டர் நீள கிராமச் சாலைகள், தார்ச்சாலைகளாக மாற்றம்;

10 ஆயிரம் கிலோ மீட்டர் நீள கிராமச் சாலைகளும்,

1787 கிலோ மீட்டர் நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகளும்,

3469 கிலோ மீட்டர் நீள மாநிலச் சாலைகளும் அதிகரிக்கப்பட்டு சாலை வசதிகள் மேம்பாட்டில் தமிழகம் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தியாவில் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 15 இலட்சம்.

தமிழகத்தில் மட்டும் கட்டப்பட்டுள்ள வீடுகள் 9 இலட்சத்து 89 ஆயிரம்.

நெசவாளர் துயர் துடைக்க கைத்தறி துணிகளுக்கு ஆண்டு முழுவதும் 30 விழுக்காடு தள்ளுபடி;

60 வயதடைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை 100/– ரூபாய் என்பது



1997–98இல் 150/– ரூபாயாகவும், நடப்பு ஆண்டில் 200/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

60 வயதுக்குமுன் மரணம் எய்திடும் நெசவாளரின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1996–97இல் 15,000/– ரூபாய் என்பது படிப்படியாக உயர்த்தப்பட்டு, நடப்பு ஆண்டில் 50,000/– ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியில் இல்லாத 25 இலட்சம் தொழிலாளர் பயன்பெற தனி தொழிலாளர் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.

தையல் தொழிலாளர் நலவாரியம்,

ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஒட்டுநர் நலவாரியம்,

முடிதிருத்துவோர் நலவாரியம்

சலவைத் தொழிலாளர் நலவாரியம்

கைவினைத் தொழிலாளர் நல வாரியம்

பனைமரத் தொழிலாளர் நல வாரியம்

– எனப் பல்வகைத் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கும் தனித்தனித் தொழிலாளர் நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையில் நான்கு ஆண்டுகளாக 90 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்; 12 ஆயிரம் குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்.

நகராட்சி நிர்வாகத் துறையில் 1 இலட்சத்து 50 ஆயிரம் புது தெரு விளக்குகள்; 90 ஆயிரம் குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்

என தமிழகத்தையே ஒளி மயமாக்கிட நாம் உன்னத முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்.

ஆதிதிராவிடர்களுக்கு 3 இலட்சம் இலவச கான்கிரீட் வீடுகள்;

மீனவர்களுக்கு 20,000 வீடுகள்;

158 கோடி ரூபாய் செலவில் பாசனப் பகுதிகளில் தூர்வாரும் பணிகள்;

சொந்தக் கட்டடங்கள் இல்லாத 653 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 52 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள்;

கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தொழிற்கல்வி நிறுவனங்களில் 15 சதவீத இடஒதுக்கீடு;

பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களில் இருந்து ஒவ்வொருவகைத் தொழிற் கல்விப் பிரிவிலும் சேரும் முதல் பத்துநிலை மாணவர்களின் பட்டப்படிப்பு செலவு முழுவதையும் அரசு ஏற்றல்;

10, 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாநில மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ மாணவியரின் உயர்கல்விச் செலவை அரசு ஏற்றல் என்பன உட்பட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தொடக்கப்பள்ளி முதல் தொழில்நுட்பக் கல்லூரிகள் வரை அனைத்திலுமே முந்தைய காலகட்டங்களைவிடக் கூடுதலாக கல்வி நிறுவனங்களைத் தமிழகம் முழுவதிலும் பரவலாக உருவாக்கி, மாணவ மாணவியர் அதிக எண்ணிக்கையில் சேர்ந்து பயில வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழகப் பொறியியல் கல்லூரிகளில் 1995–96இல் மாணவர்களுக்கு இருந்த இடங்களின் எண்ணிக்கை 20,170 மட்டுமே.

இந்த இடங்களை 48,000 என உயர்த்தியுள்ளமை ஒன்றே, இந்த அரசு கல்வித் துறையில் ஏற்படுத்தி வரும் சாதனைகளுக்கு ஒரு மிகச்சிறந்த சான்றாகும்.

வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு மூப்பு அடிப்படையில் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் நியமனம் உட்பட மொத்தம் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பல்வேறு வகை ஆசிரியர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு;

மூவலூர் மூதாட்டியார் திட்டத்தில்மட்டும் 2 இலட்சத்து, ஆயிரத்து 733 ஏழைப் பெண்களுக்கு 10,000/– ரூபாய் வீதம், மொத்தம் 201 கோடியே 73 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி;

மகளிர் திட்டத்தின்மூலம் 34 ஆயிரத்து 25 சுய உதவிக் குழுக்கள்; அவற்றில் 6 இலட்சத்து 10 ஆயிரத்து 335 மகளிர் உறுப்பினர்கள்;

மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தில் இதுவரை 1 இலட்சத்து 13 ஆயிரத்து 644 மகளிர்க்கு கடன் உதவி;

உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு; அதன் மூலம் 44 ஆயிரத்து 143 பெண்களுக்கு உள்ளாட்சி மன்றங்களில் பதவி;

பெண்கள் நலத்திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும், "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்".

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களையும், சாதனைகளையும் தொடர்ந்து படைப்பதன் மூலம் தமிழகம் இந்தியாவின் இதர மாநிலங்களும், மத்திய அரசும் போற்றும் வகையில் பல்வேறு பெருமைகளைக் குவித்து வருகிறது.

மொழி உணர்வு வளர, இலக்கிய நலம் மிளிர "குறள் பீடம்" எனும் அமைப்பு;

உருதுமொழி ஆய்வுக்கும், வளர்ச்சிக்கும் தனியாக உருது அகாடமி;

வான்புகழ் அய்யன் வள்ளுவர்க்கு விண்முட்டும் சிலை;

ஆன்றோர்களுக்கும் சான்றோர்களுக்கும் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும், மொழிப் போர் தியாகிகளுக்கும் மரியாதை செலுத்திடும் வண்ணம் இவ்வரசு அமைத்த மணி மண்டபங்கள், நினைவிடங்கள், சிலைகள், நினைவுச் சின்னங்கள் கணக்கிலடங்கா!



சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி, வாழ்ந்துவரும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்ட ஒய்வூதியம் 1500 ரூபாய் என்பது 3000 ரூபாய் ஆகவும்,

அவர்களின் வழித்தோன்றல்களுக்கு வழங்கப்பட்ட ஒய்வூதியம் 750 ரூபாய் என்பது 1500 ரூபாய் எனவும் உயர்வு;

இப்படி, தியாகச்சுடர்களுக்கு சிறப்புகள் செய்து வருவதுடன், தமிழக மக்களின் வளமான முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றி, தமிழகத்திற்குப் பெருமைகளைக் குவித்து வருகிறது இந்த அரசு.

இத்தகைய பெருமைகள் தொடர்ந்திட – சாதனைகள் பெருகிட – ஜனநாயக மாண்புகள் செழித்திட – பொய்மைகள் நீங்கிட – வாய்மையே வெல்லும் என்னும் தத்துவம் நிலைத்திட – என்றும் விழிப்புடன் செயல்படுவோம் என இந்த வீர சுதந்திரத் திருநாளில் அனைவரும் உறுதியேற்போமாக!

நமது சுதந்திரத்திற்காகப் போராடி, உயிர் தந்தோர், உடல் ஊனமுற்றோர், உடைமைகளைத் துறந்தோர், சிறைக் கோட்டங்களில் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகி நலிந்தோர், நாடு கடத்தப்பட்டோர் என்ற வரிசையில் தியாக மணிகளாய் வரலாற்றில் விளங்கிடும் ஆயிரமாயிரம் தியாகச் சுடர்களுக்கு இந்நாளில் நமது வீரவணக்கங்களைச் செலுத்திடுவோம்.

தமிழக மக்கள் அனைவர்க்கும் என் உளமார்ந்த சுதந்திரதின நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

வணக்கம்.

*– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15–8–2000 அன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் உரை.*

★ ★ ★

# ஒரு கிராமத்து நதி

எங்கிருந்து வருகிறது
இந்த நதி?

மலைகளின்
மௌனம் உடைந்தா?
முகில்களின்
ஆடை கிழிந்தா?
வனங்கள் பேசிய
இரகசியங்கள் கசிந்தா?

இல்லை....

என்னிலிருந்து....
என் அந்தரங்கங்களின்
ஊற்றுக்கண் திறந்து
என் மார்புகள்
புல்லரித்து
என் ரத்தக் குழாய்களில்
புல்லும் பூவும் மணந்து
என்னை முழுக்காட்டி
என்னையே கரைத்துக் கொண்டு....

அங்கிருந்து வருகிறது
இந்த நதி.

•

உப்பாறு இதனுள் சங்கமிக்கும்
பாலாறும் கூட.
இது என் உதிரத்தின் உப்பு
இது என் தாய்ப்பால்

படிக்காத இதிகாசங்களும்
எழுதி முடிக்காத சரித்திரங்களும்
இதன் கரையில்....

•

பாறைகளைச்
சிற்பமாக்குகிற பழக்கம்
இதன் அலை நுணுக்கம்
பகல்களில்
நகரும் ஓவியம்
இரவுகளில்
தொலைதூரக் காற்றின்
நாதசுரத்துக்கு அசையும்
பாதரசம்.

•



□ சிற்பி

தானும் உணவாகி
மீனும் உணவாகும்
இந்த நதிக்கு
நானும் உணவாவேன்

●



இது
நான் தவழ்ந்த கோரைப்பாய்
முகம் பார்த்த கண்ணாடி
என் காதலின் வீணை
ஏகாந்தங்களின் பள்ளியறை
பெருமூச்சுகளின் பந்தய மைதானம்

பாரங்கள் தாங்காது வழியும்
பெரிய கண்ணீர்த் துளி

நினைவுகளைப் பொதிந்துவைத்த
வெள்ளித் தாள்

துயரங்களின் கால்வாய்
சந்தோஷங்களின் சமுத்திரம்

என் நீல ரத்தம்
என் ஆதிக் கவிதைகளின்
தொப்புள் கொடி
அந்திமச் சாசனத்தின்
ஏட்டுச் சுவடி

●

காலங்களின் தோளில்
பவனிவரும் இந்த மகாகவிதையில்
எழுத்துக்களுக்கு இடையே
தேங்கும் மௌனம்
நான்.

- 'ஒரு கிராமத்து நதி'
கவிதைத் தொகுப்பிலிருந்து.

வெளியீடு :
கோலம் வெளியீடு,
பொள்ளாச்சி.

● ● ●

"அட்வர்டைசிங் அண்டு மார்க்கெட்டிங்"
தொழிலியல் பத்திரிகை ஆய்வுக் கட்டுரை :

# இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மிகவும் ஏற்ற மாநிலம் தமிழ்நாடு

பத்தாண்டுகளுக்கு முன்பு சென்னை மாநகரச் சாலைகளை முழுவதுமாக திரைப்படங்கள் மற்றும் திரை நட்சத்திரங்களின் போஸ்டர்களே வியாபித்திருந்த நிலை இன்று முழுமையாக மாறி, சென்னை விமான நிலையத்திலிருந்து வெளி வந்தவுடனேயே தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் மிகப்பெரிய அளவிலான நியான் விளக்குகள் அலங்கரிக்கும் விளம்பரங்கள் அமைந்துள்ளன.

**இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மிகவும் ஏற்ற மாநிலம் தமிழ்நாடு**

சென்னை மாநகரம் இந்தியாவின் நான்காவது பெருநகரமாகத் திகழ்கிறது. தொழில் தொடங்குவதற்குத் தேவையான தாராளமான இடவசதியுடன் கூடிய குறைந்த விலையில் கிடைக்கும் நிலங்கள், அடிப்படை கட்டமைப்பு வசதிகள், கல்வியறிவுடன் கூடிய மனித வளம், ஆகியவை சென்னையில் மிகவும் எளிதில் கிடைக்கின்றன. மேலும் சென்னை மாநகரம் விரைந்து வளரும் நுகர்வோர் சந்தையாக உருவெடுத்து வருகிறது. சிகாகோ நகரைச் சேர்ந்த திரு.ஜோன்ஸ் லாங், "தமிழ்நாடு, இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மிகவும் ஏற்ற மாநிலம்" என்று கூறுகிறார்.



தமிழக அரசின் சிறந்த முயற்சியினால், தொழில் துறையைப் பொறுத்தமட்டில் இந்திய அளவில் மட்டுமல்லாது உலகளவிலும் போட்டி போடுமளவிற்குத் தமிழகம் உயர்ந்து வளர்ந்துள்ளது. உயர்தொழில் நுட்பத்துடன் கூடிய பல தொழிற்சாலைகள் இங்கு அமையப் பெற்றுள்ளதன் பயனாக, ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 450 கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரத் தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதில் வாகனங்களின் உதிரிபாகங்கள் மதிப்பு மட்டும் 16 கோடி ரூபாயாகும். பருத்தித் துணிநூல் மற்றும் பாலிஸ்டர் நூல் ஏற்றுமதியில், இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 25 சதவிகிதமும், ஆயத்த ஆடை ஏற்றுமதியில் 21 சதவிகிதமும் ஆகும். இதில் சென்னையும், திருப்பூரும் இரு முக்கிய மையங்களாகும்.

ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரையை தமிழகம் கொண்டுள்ளதால் இந்தியாவில் 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் உணவு ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 20 சதவிகிதம் என்ற அளவிற்கு உள்ளது. ஸ்பிக், சக்தி சுகர்ஸ், ராம்கோ குரூப், டி.வி.எஸ். குரூப், அமால்கமேஷன்ஸ் குரூப், முருகப்பா குரூப், டி.டி.கே குரூப், தரணி, இ.ஐ.டி.பாரி, எம்.ஆர்.எப். போன்ற பெருந்தொழில் நிறுவனங்களுக்குத் தமிழகம் தாயகமாகத் திகழ்கிறது. ஆயத்த ஆடை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள உலகளவிலான பல நிறுவனங்கள் குறைந்த செலவில் அதிக அளவில் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு தமிழகத்தில் உள்ளதால், அனைத்து பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தை நாடி வருகின்றன. நாட்டின் பதப்படுத்தப்பட்ட தோல் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 70 சதவிகிதமாகவும், தோல் மற்றும் தோலினால் செய்யப்பட்ட பொருட்களில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 45 சதவிகிதமாகவும் உள்ளன.

அடிப்படை கட்டமைப்பு வசதியுடன் கூடிய தொழில் பேட்டைகள் தமிழகத்தில் ஏற்கெனவே உருவாக்கப் பட்டுள்ளன. நாட்டின் பின்னலாடை உற்பத்தித் திறனில் நான்கில் ஒரு பங்கும், சிமெண்ட் காஸ்டிக் சோடா மற்றும் உர உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கும், சர்க்கரை, சைக்கிள் மற்றும் கால்சியம் கார்பைடு உற்பத்தியில் பத்தில் ஒரு பங்கும் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், இந்திய நாட்டின் மொத்த தீப்பெட்டி உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 60 சதவிகிதமாகவும், வடிவமைக்கப்பட்ட தோல் பொருட்களின் உற்பத்தியில் 77 சதவிகிதமாகவும் உள்ளது. ரயில்

பெட்டிகள் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 32 சதவிகிதம் ஆகும்.

வாகன தொழில் இங்கு பாரம்பரியத் தொழிலாக உள்ளதன் காரணமாக, உயர் வர்த்தக வாகனங்கள் தயாரிப்பில் தமிழகம் 33 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது. வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பதில் 35 சதவிகிதமும், இரு சக்கரவாகனங்கள் தயாரிப்பில் 46 சதவிகிதமும் பெற்றுள்ளது.

இந்தியாவிற்கான பன்னாட்டுத் திட்டங்களில் தமிழகம் பெரும் பங்கு வகிக்கிறது. 5.3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 15 சதவிகிதம். மேலும் இந்தியாவில் அமையவிருக்கும் ஏற்றுமதி தொடர்பான நிறுவனங்களில் 537 நிறுவனங்களை தமிழகம் தனது முயற்சியினால் ஈர்த்துள்ளது. இந்நிறுவனங்களின் மொத்த முதலீடு 9,678 கோடி ரூபாயாகும். இதன் மூலம் ஏறத்தாழ 96,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த ஏற்றுமதியில் கைவினைப் பொருட்கள், தென்னை நார் உற்பத்திப் பொருட்கள், துணிகள், கெமிக்கல்ஸ், தங்கத்திலான நகைகள், கற்கள், மருந்துகள், தோல் மற்றும் தோலினால் செய்யப்பட்ட பொருட்கள், முந்திரி, மிளகு, ஏலக்காய் போன்ற நறுமணப் பொருட்கள், பித்தளை மற்றும் கனிமப் பொருட்கள் மற்றும் விவசாயம் சார்ந்த உணவுப் பொருட்கள், காப்பி மற்றும் தேயிலை ஆகியவையாகும்.

*"அறிவியல் ஆற்றலின் இருப்பிடமாக ஓசைப்படாமல் உயர்ந்து வரும் தமிழகம்" என டெல்லியிலிருந்து வெளிவரும் "அட்வர்டைசிங் அண்டு மார்க்கெட்டிங்" எனும் பிரபல ஆங்கில தொழிலியல் பத்திரிகை 31.7.2000 நாளிட்ட இதழில் மயங்கா எம்.சிங் என்பவர் தமிழ்நாட்டைப் பற்றி எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரை.*

*இந்தியாவின் தொழிலியல் பத்திரிகைகளில் முன்னணியில் விளங்கி வருவது ஏ அண்டு எம் என்றழைக்கப்படும் "அட்வர்டைசிங் அண்டு மார்க்கெட்டிங்" எனும் ஆங்கிலப் பத்திரிகையாகும்.*

*டெல்லியிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீடும் 1 இலட்சத்து 50 ஆயிரம் பிரதிகள் விற்பனை யாகின்றன.*

**நான்காண்டுகளில் 36.5 பில்லியன் டாலர் அன்னிய முதலீட்டை தமிழகம் ஈர்த்துள்ளது**

கடந்த நான்காண்டுகளில் 36.5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு அன்னிய முதலீடுகளை தமிழகம் ஈர்த்துள்ளது. இதுபற்றி அரசின் தொழில்துறை செயலர் திரு.சக்திகாந்ததாஸ் கூறுகையில், "தொழில் தொடங்குவதற்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், தொழில் தொடங்கியோர், தொடங்க முன்வருவோர் ஆகியோரின் தேவைகளை அறிந்து, அவர்களுக்கு உடனடியாக அனுகூலமான உதவிகளை வழங்குவதோடு, அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான அரசியல் வலிமையையும் தமிழகம் பெற்றுள்ளது" என்று குறிப்பிட்டார்.

கடுமையான உழைப்பு, திறமை, ஆங்கில அறிவு மற்றம் இணக்கமான அணுகுமுறை ஆகியவற்றில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. தொழில் தொடங்குவதற்குப் பெரிதும் சாதகமான சூழ்நிலை இங்கு நிலவுகிறது. தொழிலாளர்கள் நடத்தும் போராட்டங்களினால் ஏற்படும் மனித நாள் இழப்பு நாட்டிலேயே தமிழகத்தில்தான் குறைவு. இங்கு மனிதவள முதலீடு மிகுந்து காணப்படுகிறது. இந்தியாவிலேயே கல்வித் திறனை மேம்படுத்தும் வகையில் செய்யப்படும் முதலீட்டில் தமிழகம் உயர்ந்து காணப்படுவதோடு, மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது. இங்குள்ள ஐ.ஐ.டி., அண்ணா பல்கலைக்கழகம், மண்டலப் பொறியியல் கல்லூரி மற்றும் சென்னை தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆகியவையே இந்த மேம்பட்ட நிலைக்குக் காரணம்.

சென்னை தெற்காசியாவின் "டெட்ராய்ட்" ஆகத் திகழ்கிறது. இந்தியாவைப் பொறுத்தமட்டில் வாகன உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 35 சதவிகிதமாக இருப்பதால், ஃபோர்டு, ஹூண்டாய், மிட்சுபிஷி போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தைத் தேர்வு செய்து தங்கள் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன.

ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.யாங் சோ கிம் அவர்கள், "எங்கள் நிறுவனத்தைத் தமிழகத்தில் தொடங்குவதற்கு முன்பு, இந்திய அளவில் நாங்கள் மேற்கொண்ட ஆய்வில் – துறைமுகம், மின்சாரம், தொழில் தொடங்குவதற்கும், வாகனங்களை உற்பத்தி செய்வதற்கும் தேவையான நல்ல சூழ்நிலை தமிழகத்தில் தாராளமாக நிலவுவதை உறுதி செய்து கொண்ட பின்னரே, எங்கள் நிறுனத்தை தமிழகத்தில் நிறுவியுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார். மேலும் "எங்களுடைய தேவைகள் எதுவானாலும் அவை அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட உடனே, உரிய நேரத்தில் நிறைவேற்றப்படுகின்றன. எங்களுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மிகக் குறைந்த செலவில் கால தாமதமின்றி வழங்குவதும் தமிழக அரசுக்குரிய சிறப்பாகும்" என்று ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் தலைவர் திரு ஏ.பி.காந்தி தெரிவிக்கிறார்.

**தமிழகத்தில் வாகன உற்பத்தித் தொழில் வளர்வதற்கான மூன்று காரணங்கள்**

வாகன உற்பத்தித் தொழிலில் முன்னோடியாகத் திகழக் கூடிய பழமை வாய்ந்த அசோக் லேலண்டு

நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சேஷசாயி அவர்கள் "தமிழகத்தில் வாகன உற்பத்தித் தொழில் வளர்படுவதற்கு,

* ★ வாகனத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரிய நிறுவனங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களைத் தயாரிக்கக்கூடிய பல சிறிய தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் இருப்பதும்,
* ★ திறமை வாய்ந்த மனித வளமும்,
* ★ மற்றும் எளிதில் விற்பனை செய்ய ஏதுவான நல்ல சந்தை வசதிகளும்" என மூன்று காரணங்களைக் குறிப்பிடுகிறார்.

வாகன மேலாண்மைப் பிரிவிற்கும், வாகனப் பாதுகாப்பு சாதனங்களை வடிவமைப்பதற்கும், பிளாஸ்டிக் மற்றும் ரப்பரால் உருவாக்கப்படும் பொருட்கள்



தொடர்பான தொழில்களைத் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கிட தமிழக அரசு முன்வந்துள்ளது.

உணவு பதப்படுத்துதல் மற்றும் பூக்களை விளைவித்தல் போன்றவற்றிற்குத் தேவையான வளங்கள் இங்கு அதிகமாக இருப்பது தமிழக அரசால் அடையாளம் காணப்பட்டு, அவற்றைப் பெருக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மா, வாழை, காய்கறிகள் மற்றும் இதர பருப்பு வகைகளின் விளைச்சலும் இங்கு மிகுதி. கோழி இறைச்சிகளைப் பதப்படுத்துதல், பதப்படுத்தப்பட்ட பழ வகைகள், ஒருங்கிணைந்த பூக்களை விளைவித்தல் ஆகிய புதிய திட்டங்களும் இங்கே உருப்பெற்றுள்ளன.

**தகவல் தொழில்நுட்பத்தில் ஆசியாவின் மிகப்பெரிய ஆற்றல் மையம் சென்னை**

சென்னை தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கு இந்தியாவிலேயே மிகவும் ஏற்ற இடமாகத் திகழ்வதாக தேசிய அளவிலான தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் கூட்டமைப்பு ஆய்வு செய்து அறிவித்துள்ளது. தகவல் தொழில்நுட்பப் பொருட்களின் உற்பத்தியில் தமிழகம் இதுவரை இல்லாத அளவிற்கு 1998–99–இல் 400 கோடி அளவிற்கு இருந்த ஏற்றுமதி தற்பொழுது 300 சதவிகிதம் அதிகரித்து 1,250 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இத்தொழிலில் ஏறத்தாழ 23,500 தொழில்நுட்ப வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். இத்தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களால் சென்னையில் 1 இலட்சத்து 60 ஆயிரம் சதுர அடி பயன்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் தொழில் நுட்பத்தில் சென்னை ஆசியாவின் மிகப்பெரிய ஆற்றல் மையமாக உருவெடுத்து வருகிறது.

தற்பொழுது தமிழகத்தில் அமைந்துள்ள ஏற்றுமதி செய்யும் 160 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில், 140 நிறுவனங்கள் சென்னையிலேயே அமைந்துள்ளன.

தமிழக அரசின் சீரிய முயற்சியினால் சென்னையில் பத்து இலட்சம் சதுர அடி பரப்பளவில் "டைடல் பார்க்" தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்கள் சுமார் 3,600 சதுர அடியிலிருந்து 75,000 சதுர அடி வரையில் ஒரே தளத்தில் அமைத்துக் கொள்ள வசதி உள்ளது. இப்பூங்காவின் பயன்பாட்டிற்கென்று தனியாக 110 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய துணை மின் நிலையத்தின் மூலமாகத் தங்கு தடையற்ற மின்சாரம் வழங்கப்படுவது சிறப்பான அம்சமாகும். இத்தொழில்நுட்பப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டும் வசதி, மின்தூக்கி, பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றவை அனைத்தும் தானியங்கி முறையில் பராமரிக்கப்படுகின்றன. ஏறத்தாழ 4,000 தொலைபேசி இணைப்புகளுடன் கூடிய ஒரு தொலைபேசி நிலையமும் இவ்வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுள்ளது.

மேம்பட்ட மனித வளம், உயர்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள், குறைந்த செலவிலான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் போன்ற இதர வசதிகள் தமிழகத்தில் அதிக அளவில் கிடைப்பதன் காரணமாகவே தகவல் தொழில்நுட்பத் தொழில் இங்கு முக்கிய பங்கு வகிக்கிறது என காக்னிசன்ட் (Congnizant) இ.டி.எஸ். (E.D.S.), அல்கா டெல் (alcatel), டி.சி.எஸ். (TCS) மற்றும் பென்டாஃபோர் (Pentafour), போன்ற தகவல் தொழில்நுட்ப முன்னணி நிறுவனங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

சிறிய அளவில் மென்பொருள் தொழில் தொடங்குவோரை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசே 30 கோடி ரூபாய் அளவிற்கு மென்பொருள் நிதியத்தை உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (டானிடெக்) மூலம் தேர்ந்த கணினிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பெருகிவரும் விமான சேவையை கருத்தில் கொண்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் 200

கோடி ரூபாய் செலவில் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டு, வரும் 2003–ஆம் ஆண்டில் வர்த்தக ரீதியில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்டை மாநிலமான ஆந்திரமும், கர்நாடகமும் தகவல் தொழில்நுட்பத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் தமிழகம் செயலாற்றலால் உயர்ந்து நிற்கிறது என்று "சன்மார் குரூப்" நிறுவனங்களின் தலைவர் திரு.சங்கர் குறிப்பிடுகிறார்.

உயிரியல் தொழில்நுட்பம் தற்பொழுது முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழக அரசின் சீரிய முயற்சியினால் புதிய உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று உருவாக்கப்படுகிறது. இதற்கான புதிய கொள்கை ஒன்றும் தமிழக அரசால் அறிவிக்கப்பட உள்ளது. உயிரியல் தொழில்நுட்பத்திலும், உயிர் வேதியியலிலும் சிறப்பு வாய்ந்த நிறுவனங்களைச் சார்ந்த உயர் திறமை பெற்ற வல்லுநர்கள் இம்மாநிலத்தில் அதிக அளவில் உள்ளனர்.

### ஆயுர்வேதம், சித்தமருத்துவத்தின் தாயகமாக தமிழகம் திகழ்கிறது

தமிழகத்தில் மிக அதிக அளவில் வளமான மூலிகைகள் கிடைக்கப் பெறுவதால் இந்திய முறை மருத்துவத்தில் குறிப்பாக ஆயுர்வேதம், சித்த மருத்துவத்தின் தாயகமாக தமிழகம் திகழ்கிறது. இங்கிருந்து மூலிகை உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், கிழக்காசிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

"ஆக்கப்பூர்வமாக செயல்திறன் மற்றும் முதலீட்டாளர் நேயமிக்க அரசாங்கம், உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு உதவிடும் நிர்வாகம், சிறந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், திறனும் ஒத்துழைக்கும் மனோபாவமும் மிகுந்த தொழிலாளர்கள், செம்மையான அடிப்படைச் சுகாதாரம், கல்வி முறைகளும், நிறைந்த சமூகக் கட்டமைப்பு வசதிகளும் தமிழ்நாட்டின் பலங்களாகும்" என்று தமிழக அரசின் நிதித்துறைச் செயலர் பி.வி.இராஜாராமன் கருத்து தெரிவித்திருக்கிறார்.

என்.சி.ஏ.இ.ஆர். ஆய்வின்படி, இந்தியாவில் தமிழகம் சிறந்த செயலாக்கம் நிறைந்த மாநிலமாகத் திகழ்கிறது. உதாரணமாக, திறன்பட்ட ஒற்றைச்சாளர முறையைக் கொண்டு வந்த முதல் மாநிலமாகவும் தமிழகம் விளங்குகிறது. புதிதாக தொடங்கப்படும் திட்டங்கள் அனைத்திற்கும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு இயங்கும் மாநில முதலீட்டு மேம்பாட்டுக் குழு, தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்டு இயங்கும் திட்ட அனுமதி அதிகார ஆணையம் ஆகிய இரு உயர் நிலைக்குழுக்களால் ஒப்புதல் வழங்கப்படுகின்றன.

திட்டங்கள் நிறைவேற்றப்படும் இடம், அவற்றின் தன்மை, அளவு ஆகியவற்றைப் பொறுத்தே அரசின் மூலதன உதவித்தொகை வழங்கப்படுகிறது. கணினி மென்பொருள் உற்பத்தித் திட்டங்களுக்கு உயர்ந்தபட்ச மானியத் தொகை 20 சதவிகிதம் – அதாவது அதிகபட்சமாக 20 இலட்சம் ரூபாய் வரை இருக்கும். குறைந்த வரி விகிதங்கள், தொழில் திட்டங்கள் குறித்த நடவடிக்கைகளில் ஒளிவு மறைவற்ற தன்மை, காலதாமதமின்மை ஆகியவை பெருமளவிலான தொழில் தொடங்குவோரின் எதிர்பார்ப்பாகும். இவற்றை நிறைவேற்றுவதில் தமிழக அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தொழில் தொடங்குவோருக்குத் தேவையான நிதி உதவிகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் டிட்கோ, சிப்காட், டிக் ஆகிய அரசு நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. இவற்றின் உதவியுடன் தொழில் வளர்ச்சி மையங்கள், தொழிற்பேட்டைகள் எனப்படும் தொழில் வளாகங்கள் ஒசூர், இராணிப்பேட்டை, கிண்டி,



அம்பத்தூர், காரைக்குடி, சிவகங்கை, பரமக்குடி, திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

### சிப்காட் நிறுவனத்தின் மேற்பார்வையில் நான்கு தொழில் பூங்காக்கள்

சிப்காட் நிறுவனத்தின் மேற்பார்வையில் 8,708 ஏக்கர் பரப்பளவில் நான்கு தொழில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கும்மிடிபூண்டியில் அமைக்கப்படும் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற் பூங்காவும் இதில் அடங்கும்.

தமிழகம் முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு பல தொழிற் பூங்காக்களை உருவாக்கி வருகிறது. டிட்கோ நிறுவனத்தினால் 7,600 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோலிய இரசாயனப் பூங்கா சென்னை விமான நிலையத்திலிருந்து 45 கி.மீ.



தொலைவில் உள்ளது. இங்கிருந்து ஏறத்தாழ 2 கி.மீ. தொலைவில் எண்ணூரில் பெரும் துறைமுகம் அமைந்துள்ளது. மேலும், சென்னை துறைமுகமானது சுமார் 27 கி.மீ. தொலைவில் உள்ளது.

சிப்காட் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் தொழிற்பூங்காக்களை அமைத்துள்ளது. இத்தொழிற் பூங்காக்களில் தொழில் தொடங்குவோர்க்கு 15 சதவிகிதம் வரை – அதாவது 15 இலட்சம் ரூபாய் வரை மூலதன உதவித் தொகையும், முத்திரைத்தாள் தீர்விலிருந்து 13 சதவிகிதம் விலக்களிப்பும் வழங்கப்படுகிறது. மேலும், இப்பூங்காக்களிலும் இடம், நீர் வசதி, இணைப்புச் சாலைகள், கழிவு நீரேற்று வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் விரைவாக வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 36.5 பில்லியன் அமெரிக்க மதிப்பிலான முதலீட்டில் 285 பெரும் தொழிற் திட்டங்களை நிறைவேற்ற தமிழக அரசு கருதியுள்ளது. இந்தியாவில் பெருமளவில் முதலீட்டை ஈர்க்கும் மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

மத்திய அரசின் முயற்சியினால் இந்தியாவில் அமைக்கப்படவிருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஒன்று தமிழகத்தில் தூத்துக்குடிக்கு அருகேயுள்ள நாங்குநேரியில் சுமார் 6000–8000 மில்லியன் ரூபாயில் 1012 எக்டேர் நிலப்பரப்பில் உருவாக்கப்படுகிறது. இத்திட்ட செயற்குறிப்பில் தூத்துக்குடி வாகைக்குளத்திலுள்ள விமான நிலையத்தின் தரமுயர்த்தும் பணியும் அடங்கும். சிறப்புப் பொருளாதார மண்டலம் உயர்தொழில் நுட்பப் பூங்காவாக படிப்படியாக உயர்த்தப்படும். இது தகவல் தொடர்பு மின்னணுவியல், உயர்தொழில் நுட்பவியல் ஆகிய தொழில்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும்.

இந்தியாவின் மிகப்பெரிய மூன்றாவது பொருளாதாரத்தை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திராவிடர்கள் கண்டுபிடித்தனர். பண்டைய மற்றும் இடைக்கால தமிழகத்தின் நிருவாகம், கட்டடக் கலை, பொருளாதார நிலைகள் ஆகியவை குறித்த பண்டைக்கால ஆதாரங்களைச் சங்க கால இலக்கியம் நமக்கு அளிக்கிறது.

சுமார் ஆறரை கோடி மக்கள் தொகை கொண்டுள்ள தமிழகம் மக்கட் தொகையில் இந்தியாவில் ஏழாவது இடத்தில் உள்ளது. கிரானைட், சுண்ணாம்புக்கல், பழுப்பு நிலக்கரி இங்கு கிடைக்கும் முக்கிய கனிமவளங்களாகும். இயற்கை வளங்களைக் கொண்ட கிராமப்புறங்கள் இம்மாநிலத்தின் உண்மையான களஞ்சியங்களாகும். தமிழ்நாட்டில் எக்டேர் ஒன்றுக்கு 2.5 டன் நெல் மகசூல் கிடைக்கிறது. இது நாட்டிலேயே மிக அதிகமானதாகும். இம்மாநிலம் 68.1 இலட்சம் டன் அரிசி மற்றும் ஏனைய சிறுதானியங்களையும் 3.4 இலட்சம் டன் பயறு வகைகளையும் உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது. இம்மாநிலம் எக்டேர் ஒன்றுக்கு 100 டன் என்ற அளவில் கரும்பு உற்பத்தி செய்து உலக அளவிலும் சாதனை புரிந்துள்ளது. ஏறத்தாழ 3.5 இலட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. பருத்தி இன்னொரு முக்கியமான பயிராகும். 2.8 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் பருத்தி பயிரிடப்படுகிறது. முக்கியப் பணப் பயிர்களான தேயிலையும், காப்பியும் பெருமளவில் பயிரிடப்படுகின்றன.

அண்மைக் காலத்தில் கவரப்பட்டுள்ள முதலீட்டின் 61 சதவிகிதம், பெரும்பாலும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தொடர்புடையதாகும். நவீன வியாபார முறைகளுக்கும் வாழ்க்கை முறைக்கும் தொடர்பு உள்ளது. தமிழ்நாட்டின் தொலைத் தொடர்பு வசதி பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இம்மாநிலத்தில் 1.2 மில்லியன் இணைப்புகளுடன் 1,603 தொலைபேசி இணைப்பகங்கள் உள்ளன. சென்னை வி.எஸ்.என்.எல். நிறுவனம் பெருமளவில் நவீன கால தகவல் தொடர்பு வசதிகளையும் அளிக்கிறது. அலைவரிசையை அதிகரிக்கக் கூடுதல் தரை நிலையங்களை ஏற்படுத்தி,

சென்னையில் வசதிகளை மேம் படுத்த இந்நிறுவனம் பெருமளவில் முதலீடு செய்கிறது.

சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் சரக்குக் கப்பல் முனையங்கள் உள்ளன. சென்னை துறைமுகம் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 35.6 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளையும், தூத்துக்குடி துறைமுகம் 10.7 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளையும் கையாளு கின்றன.

ஒட்டுமொத்தமாக தமிழகம் மனித வள அளவுக்குறியீட்டில் மூன்றாம் இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் கல்வி அறிவு பெற்றவர்கள் 70 சதவிகிதம் பேர் ஆவர். ஆனால் அகில இந்திய அளவில் கல்வி அறிவு பெற்றவர்கள் 62 சதவிகிதம் பேர்.

தமிழ்நாடு மாநிலத்தில் தேர்ச்சி பெற்ற மனித ஆற்றல் மிகுதியாக உள்ளது. காரணம் ஆண்டுதோறும் பொறியியல் பட்டதாரிகள் 32,600 பேருக்கும் அதிகமாகத் தேர்ச்சி பெற்று வருகின்றனர். இவர்களில் 15,000 பேர் கணினித் தொடர்பான துறையில் தேர்ச்சி பெறுகின்றனர். மேலும் தமிழ்நாட்டில் சுமூகமான தொழிலாளர் நல்லுறவு நிலவுகிறது. இங்கு மனித ஆற்றலுக்காகும் செலவும் மிகக்குறைவு. தவிர, புற வாழ்க்கைத் தரக் குறியீடு மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் குறியீடு ஆகிய வற்றைப் பொறுத்தவரை தமிழ்நாடு நான்காம் இடம் வகிக்கிறது. கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்கல் மற்றும் வீட்டுவசதி ஆகிய துறைகளில் அரசு இடைவிடாது எடுத்து வருகின்ற தளராத முயற்சிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

வரலாற்றுப் பின்னணியும், வலுவான வருங்காலமும் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். இம்மாநிலம் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் முதலீட்டைப் பெற்று வேகமாக முன்னேறி வருகிறது.

★ ★ ★

## முதலீட்டில் தமிழகம் முதலிடம் :

**'தினமணி'** நாளிதழ் தலையங்கம்

கடந்த சில ஆண்டுகளாக மாநிலங்களுக்கிடையே தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் போட்டி ஏற்பட்டிருப்பது ஆரோக்கியமான அம்சம். அதிலும் குறிப்பாக மகாராஷ்டிரம் மற்றும் தமிழகத்துக்கு இடையே, அண்மைக்காலமாக, இந்தப் போட்டி கடுமையாகவே இருந்து வந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாத நிலவரப்படி, தொழில் முதலீட்டில் மகாராஷ்டிரத்தைவிட தமிழகம் வெறும் 318 கோடி ரூபாய் தான் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் விரையில் மகாராஷ்டிரத்தைத் தமிழகம் மிஞ்சி இந்தியாவில் முதலிடத்தை வகிக்க உள்ளது என கடந்த மே மாதம் தமிழக முதல்வர் கருணாநிதி சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்.

அவர் கூறியதற்கு இணங்க தற்போது வெளிவந்துள்ள இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் (Centre for Monitoring Indian Economy) அறிக்கைப்படி ரூ.1 இலட்சத்து 60 ஆயிரத்து 804 கோடி முதலீடு திரட்டி, நாட்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது தமிழகம். தொழில் வளர்ச்சியில் தமிழகத்தின் இவ்வரலாற்றுச் சாதனை மன நிறைவு தருவதாகும்.

ரூ.1 இலட்சத்து 58 ஆயிரத்து 410 கோடி முதலீடு திரட்டியுள்ள மகாராஷ்டிரம் 2-ஆம் இடத்துக்குச் சரிந்துள்ளது. குஜராத் 3-ஆம் இடத்தையும் ஆந்திரம் 4-ஆம் இடத்தையும் தக்க வைத்துக் கொண்டுள்ளன.

இப்பந்தயத்தில் ஒரிசா 5-ஆம் இடத்திலும் கர்நாடகம் 6-ஆம் இடத்திலும் உள்ளன. எனினும் கடந்த சில மாதங்களில் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் தொழில் முதலீடு உயர்ந்துள்ளது. இது அம்மாநிலங்கள் மேற்கொண்டு வரும் தீவிர முயற்சியைப் பிரதிபலிக்கிறது.

அதே நேரம் கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பிந்தைய நான்கு மாதங்களில், குஜராத் மற்றும் கேரள மாநிலங்களில் தொழில் முதலீடு சரிந்துள்ளது கவலை தருவதாகும். குஜராத் சரிவுக்கு அங்கு சில மாதங்களுக்கு முன் நிலவிய கடும் வறட்சியும் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும்.

குறைந்த செலவில் நல்ல கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட மனித வளம், புதிய திட்டங்களை உடனுக்குடன் பரிசீலித்து அனுமதி வழங்கிடும் அரசின் முனைப்பான செயல்பாடு ஆகிய அம்சங்கள் - தமிழகம் இச்சாதனை புரிந்திட உதவியுள்ளன என்பது வெளிப்படை.

எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுப் பணியில் மாநிலங்களின் பங்கு கணிசமாக அதிகரிக்கும். தொழில் வளர்ச்சியில் இம்முன்னணி மாநிலங்கள் காட்டும் அக்கறை இதை உணர்த்துகிறது.

உற்பத்திப் பெருக்கம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு மட்டுமல்லாமல் கணிசமான அளவில் நேர்முக, மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவும் இத்தொழில் வள மேம்பாட்டுப்பணி வழிவகுக்கும் என நம்பலாம். வளர்ச்சியின் பயன் பரவலாக்கப்படுவதற்கும் சாதாரண மக்களின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் இது இன்றியமையாதது ஆகும்.

நன்றி : தினமணி 9.8.2000

# துறைகள்தோறும் முதலிடம், வெற்றிகள் குவிக்கும் தமிழகம்!



★ 1995-இல் தொழில் வளர்ச்சியில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழகம் தற்போது இந்தியாவில் முதலிடம்.

★ தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியுள்ளதில் தமிழகம் முதலிடம்.

★ உயர்கல்வி வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.

★ தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.

★ மென்பொருள் வல்லுநர்கள் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம்.

★ குழந்தைகள் நலன்காக்க போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம் முதலிடம்.

★ எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதலிடம்.

★ மகிழ்ச்சி பரவிட மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதலிடம்.

★ அரிசி உற்பத்தித்திறன், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறன் ஆகியவற்றில் தமிழகம் இந்தியாவில் முதலிடம்.

★ கரும்பு உற்பத்தித் திறனில் உலகிலேயே தமிழகம் முதலிடம்.

☐ ☐ ☐

# சென்னையில் மேலும் இரு மேம்பாலங்கள்



சென்னை மாநகராட்சி மன்றத்தின் சார்பில் இதுவரையிலே ஐந்து பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்பட்டு இன்று இரண்டு பாலங்கள் திறந்து வைக்கப்பட்டு மேலும் மூன்று பாலங்கள் விரைவில் திறக்கப்படும் என்ற அறிவிப்பு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கின்றது.

**7 பாலங்கள் கட்டப்பட்டதில்**
**ரூ.18.44 கோடி மிச்சம்**

சென்னை மாநகரத்துக்கு எழிலூட்டுவதற்காக மாத்திரமல்ல, வசதி செய்து தருவதற்காக இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 115 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் பத்து பாலங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு இன்றுடன் 7 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த 7 பாலங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.77.50 கோடி. இதற்கான கட்டுமானச் செலவு ரூ.59.06 கோடி. எனவே மிச்சப்படுத்தப்பட்ட தொகை ரூ.18.44 கோடி என்பதைக் கேட்க நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மாநகராட்சி மன்றத்தையும் மேயரையும் அதிகாரிகளையும் மற்றும் இந்தக் கட்டுமானப் பணியை ஏற்றுக் கொண்ட ஒப்பந்தக்காரர்களையும் பெரிதும் பாராட்டி வாழ்த்துகிறேன். இந்த நிலை எல்லா இடங்களிலும் தொடர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் காண்கிற நேரத்தில் பல்லாயிரக்கணக்கிலே நீங்கள் இங்கே குழுமியிருக்கிறீர்கள். இது ஒரு பாலத்தின் திறப்பு விழாவிற்கு இவ்வளவு பேர் வரக்காரணம் என்னவென்றால் அத்தனை பேருக்கும் சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சியிலே உள்ள ஆர்வத்தையும் அக்கறையையும் இது காட்டுகிறது என்றுதான் இதற்குப் பொருள். இந்த மாநகரம் முன்னேறும், வளர்ச்சி பெறும், அழகுறும், வசதிகளை உருவாக்கும் என்ற அந்த எதிர்பார்ப்பு கடந்த நான்காண்டு காலத்திற்கு முன்பே உங்களுக்கு ஏற்பட்ட காரணத்தினால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை மாநகராட்சி மன்றத்தின் ஆட்சிப் பொறுப்பிலே அமர வைத்தீர்கள். அந்த நம்பிக்கை வீண் போகாமல் மாநகராட்சி மன்றத்திலே மேயரும், துணை மேயரும் மற்றுமுள்ள கட்சித்தலைவர்களும், உறுப்பினர்களும் பாடுபட்டு வருகிறார்கள் என்பதை நீங்கள் தெளிவாக அறிவீர்கள். இந்தப் பாலங்களிலே மிச்சப்பட்டது பணம் மாத்திரமல்ல, மிச்சப்படப் போவது உங்களுடைய நேரமும் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தப் பாலங்கள் இல்லாவிட்டால் ஒரு இடத்தைக் கடக்க எவ்வளவு நேரமாகும், எந்த அளவிற்கு நேரத்தை இந்தப் பாலங்கள் மிச்சப்படுத்துகின்றன என்பதை முன்னால் பேசிய உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி கோ.சி.மணி, தம்பி டி.ஆர்.பாலு, தம்பி மாறன் ஆகிய அத்தனை பேரும் இங்கே எடுத்து விளக்கியிருக்கிறார்கள். எனவே அதைப்பற்றி நான் விரிவாகப் பேச விரும்பவில்லை.

ஒன்றை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கோ.சி.மணி குறிப்பிட்டதைப் போல பாலங்களை தமிழ்நாட்டிலே அதிகமாகக் கட்டிய ஒரு ஆட்சி உண்டென்றால் அது திராவிட முன்னேற்ற கழக

ஆட்சிதான். 1967–இல் அண்ணா அவர்கள் தலைமையிலே உருவான இந்த ஆட்சி 67லும் சரி, பிறகு 69லும் சரி, பிறகு 71லும் சரி, பிறகு 89லும் சரி, இப்போது நான்காவது முறையாகப் பொறுப்பேற்றுள்ள இந்தக் கால கட்டத்திலும் சரி, மிக அதிகப்படியான பாலங்களைத் தமிழகத்திலே கட்டிய ஆட்சி இந்த ஆட்சிதான். ஒரு ஒப்பீடு உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால் முந்தைய ஐந்து ஆண்டுகளில் 96க்கு முன்பிருந்து ஐந்தாண்டு காலத்தை நீங்கள் கணக்கிட்டால் தமிழகம் முழுவதும் அப்போது கட்டிமுடித்த பாலங்களின் எண்ணிக்கை 53. அதற்கான செலவு 26 கோடியே 10 இலட்சம் ரூபாய். 1996க்குப் பின் இந்த நான்காண்டுகளில் கட்டி முடித்துள்ள பாலங்களின் எண்ணிக்கை இதுவரையில் 179. இவற்றுக்கான செலவு 204 கோடியே 68 இலட்சம் ரூபாய். மேலும், கட்டுமானப் பணிகள் நடைபெற்று விரைவில் முடிக்கப்படவிருக்கும் பாலங்களின் எண்ணிக்கை 296. இவற்றின் மதிப்பீடு 535 கோடியே 32 இலட்சம் ரூபாய்.

## 1996–ஆம் ஆண்டுக்குப் பின் சாலை மேம்பாட்டுச் சாதனைகள்

ஒரு புள்ளி விவரம் உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால் பயன்படக்கூடிய, நினைவிலே நிறுத்தப்பட வேண்டிய புள்ளி விவரம் சொல்ல வேண்டுமேயானால் தமிழகத்தில் சாலை மேம்பாட்டுப் பணிகளில் 1996க்குப் பின் சாதனைகள் என்று எடுத்துக் கொண்டால் உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணியின் துறையின் சார்பிலும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் தா.கிருட்டினனின் துறையின் சார்பிலும் நடைபெற்ற சாதனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

- 748.66 கோடி ரூபாய் செலவில் 12,842 கி.மீ. நீள நெடுஞ்சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன.
- 149 கோடி ரூபாய் செலவில் 2,748 கி.மீ. நீள ஊரகச்சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன.
- 150 கோடி ரூபாய் செலவில் 1,500 கி.மீ. நீளத்திற்கு நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- 10,000 கி.மீ. நீளமுள்ள கிராமச்சாலைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.
- 21,000 கி.மீ. நீள கிராமச்சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.
- 1787 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- 3,469 கி.மீ. நீள இதர மாவட்டச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகர் நோக்கி வரும் 252 கி.மீ. நீள ஆரச்சாலைகளும் அவைகளில் 3 பாலங்களும் 212 கோடியே 54 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



49 கோடியே 85 இலட்ச ரூபாய் செலவில் 18.8 கி.மீ. நீளமுள்ள தாம்பரம் –மதுரவாயல் – சென்னை புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

36 கோடி ரூபாய் செலவில் மதுரை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

110 கோடி ரூபாய் செலவில் 28.40 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்ட கோவை புறவழிச்சாலை போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

கும்பகோணம், பழனி, செய்யாறு ஆகிய இடங்களில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் புறவழிச்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதில், கும்பகோணம் புறவழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது. மற்ற இடங்களில் பணிகள் முன்னேறி முடிவடையும் கட்டத்திலே உள்ளன.

1996க்கு முன் பேரூராட்சிகளில் இருந்த சிமெண்ட் சாலைகளின் நீளம் 380 கி.மீ. இதுநான்கு ஆண்டுகளில் 909 கி.மீ.என்ற அளவில் அதிகரித்துள்ளது.

1996க்கு முன் பேரூராட்சிகளில் இருந்த தார்ச்சாலைகளின் நீளம் 733 கி.மீ. இது 1996க்குப் பின் நான்காண்டுகளில் 3421 கி.மீ. என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

- தேசிய நெடுஞ்சாலைகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாத்திரம் அமைக்கப்பட்ட முக்கிய பாலங்கள் –
- 1969–இல் திண்டிவனம் அருகே சங்கராபரணி ஆற்றில் 220 மீட்டர் நீளத்திற்குப் பெரிய பாலம்.
- 1971–இல் மதுரை–திண்டுக்கல் புறவழிச்சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம்
- 1971–இல் மதுரை ஆண்டாள்புரம் அருகே முத்துராமலிங்கத்தேவர் மேம்பாலம்
- 1971–இல் மதுரைக்கல்லூரி அருகே மேயர் முத்து மேம்பாலம்
- 1972–இல் காரனோடை அருகில் குசத்தலை ஆற்றில் 400 மீட்டர் பாலம்
- 1972–இல் தருமபுரி திருப்பத்தூர் சாலையில் தென்பெண்ணை ஆற்றில் இருமாத்தூர் அருகே பாலம்.
- 1972–இல் திருச்சிக் கரையாற்றில் 113 மீட்டர் பாலம்.
- 1972–இல் மதுரை–அருப்புக்கோட்டை சாலையில் பாலம்.
- 1973–இல் சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள அண்ணா மேம்பாலம்.
- 1974–இல் கும்மிடிப்பூண்டி அருகே ஆரணியாற்றில் 123 மீட்டர் பாலம்.
- 1974–இல் சென்னை ஆர்.கே.மடம் சாலையில் பாலம்.
- 1974–இல் உளுந்தூர்பேட்டை அருகில் கடிலம் ஆற்றில் 321 மீட்டர் பாலம்.
- 1974–இல் சென்னை அடையாற்றில் திரு.வி.க.பாலம்.
- 1974–இல் திருப்பூர் நகரில் பாலம்.
- 1974–இல் திண்டுக்கல் அருகில், சென்னை திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சாதனையாற்றின் குறுக்கே 72 மீட்டர் நீளத்திற்குப் பாலம்.
- 1974–இல் திண்டுக்கல் வட்டாணம் சாலையில் பாலம்.
- 1974–இல் விருதுநகர் அருகே கவுசிக ஆற்றின் குறுக்கே 101 மீட்டர் நீளத்திற்குப் பாலம்.
- 1974–இல் இராமேஸ்வரத்தில் ஆசியாவிலேயே பெரிய பாம்பன் பாலம் (பணி துவக்கம்).
- 1975–இல் மணப்பாறை அருகே சித்தனாதன் ஆற்றின் குறுக்கே 132 மீட்டர் பாலம்.
- 1975–இல் திருச்சி சமயபுரம் அருகே உப்பாற்றில் 105 மீட்டர் பாலம்.
- 1975–இல் மார்த்தாண்டம் பனிச்சம்மோடு சாலையில் குழித்துறை ஆற்றில் பாலம்
- 1989–இல் மாமண்டூர் அருகில் தாக்குப்பேட்டையில் என்.எச்.45 தேசிய நெடுஞ்சாலையில் 90 மீட்டர் பாலம்.
- 1989–இல் அதே மாமண்டூர் அருகில் கிள்ளியாற்றில் 175 மீட்டர் பாலம்
- 1989–இல் செங்கல்பட்டு அருகில் பாலாற்றின் குறுக்கே 686 மீட்டர் பாலம்

**தமிழக நெடுஞ்சாலைகளில் கட்டப்பட்ட பாலங்கள்**

இவைகள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலையிலே இந்த அரசின் ஒத்துழைப்போடு அமைக்கப்பட்ட பாலங்கள். அரசு எடுத்த முயற்சியின் காரணமாக அமைந்த பாலங்கள் தமிழக நெடுஞ்சாலைகளில் என்று எடுத்துக் கொண்டால் –

- 1969–இல் தஞ்சை–திருச்சி மாவட்டங்களை இணைத்து கொள்ளிடம் ஆற்றில் திருமானூர் அருகில் ஒரு பெரிய பாலம்



- 1969–இல் குளித்தலை–முசிறிக்கு இடையில் காவிரிப்பாலம்
- 1970–இல் திருநெல்வேலி சந்திப்புக்கு அருகில் திருவள்ளுவர் பெயரால் ஒரு ஈரடுக்கு மேம்பாலம்
- 1971–இல் கோவையில் ஒரு மூன்றடுக்கு மேம்பாலம்
- 1972–இல் ஈரோடு–சத்தி சாலையில் ஒரு பாலம்
- 1973–இல் ஒகனேக்கல் சாலையில் சின்னாறு நதியில் பாலம்
- 1973–இல் பொள்ளாச்சி–தாராபுரம் சாலையில் பாலம்
- 1973–இல் தேவிப்பட்டிணம்–திருப்பாலக்குடி சாலையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாலம்
- 1973–இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பொய்யேரி செல்லும் சாலையில் திருமணி ஆற்றில் பாலம்
- 1973–இல் முத்துப்பேட்டை–மீமிசல் சாலையில் அம்புலியாற்றில் பாலம்
- 1973–இல் கல்லார் சிமெண்ட்பள்ளி சாலையில் அரசனூர் ஆற்றில் பாலம்
- 1973–இல் உடுமலைப்பேட்டை – குமாரலிங்கம் சாலையில் அமராவதி ஆற்றில் பாலம்
- 1974–இல் செங்கல்பட்டு அருகில் சூணாம்பேடு சாலையில் பாலம்
- 1974–இல் வேலூர் அருகில் பாலாற்றில் போளூர் சுப்ரமணியன் பாலம்
- 1974–இல் கடலூர்–சித்தூர் சாலையில் மலட்டாற்றின் குறுக்கே பாலம்
- 1974–இல் பேசின்பிரிட்ஜுக்கு அருகில் பக்கிங்ஹாம் கால்வாயில் அமைந்த பாலமும், அப்பகுதியில் அமைந்துள்ள ஒரு இரயில்வே மேம்பாலமும் அகலப்படுத்திக் கட்டப்பட்டன.
- 1975–இல் கடலூரில் கடற்கரைச் சாலையில் தென்பெண்ணை ஆற்றின் அருகில் கடல்நீர் உள்ளே வரும் பகுதியில் 75 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்

ரெயில்வே மேம்பாலங்கள் என்று எடுத்துக் கொண்டால் –

சென்னை விம்கோ நகர் – எண்ணூர் இரயில் நிலையங்களுக்கிடையில் ஒரு இரயில்வே மேம்பாலம்

மாயூரம் சாரங்கபாணி மேம்பாலம்

திருவாரூர் மேம்பாலம்

கும்பகோணம் இரயில்வே மேம்பாலம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை முத்துப்பேட்டை சாலையில் ஒரு மேம்பாலம்

கோவையில் கிராஸ்கட் சாலையில் மேம்பாலம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆர்க்காடு விழுப்புரம் சாலையில் ஒரு மேம்பாலம்

இப்படி சொல்லிக் கொண்டே போனால் நேரம் போதாது. அந்த அளவிற்கு பாலங்கள் கழக ஆட்சியிலே கட்டப்பட்டு மக்களுடைய போக்குவரத்துக்கும் வசதிவாய்ப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடத்தான் இந்தப் பட்டியலை உங்கள் முன் நான் படித்துக் காட்டினேன்.

**பாலங்களைப் பயன்படுத்துவோர் ஒழுங்குமுறையோடு பயன்படுத்த வேண்டும்**

ஒரு மாநகரம் அழகுபெற பாலங்கள் மாத்திரம் போதாது என்பதை நான் உணராதவன் அல்ல. அந்தப் பாலங்களைப் பயன்படுத்துவோர் அதை எவ்வளவு ஒழுங்குமுறையோடு, கடமை உணர்வோடு, கட்டுப்பாட்டு உணர்ச்சியோடு பயன்படுத்த வேண்டுமென்பதை நான் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சிங்கப்பூர் சிங்காரமாக அழகாக இருக்கிறது. தூய்மையாக இருக்கிறது என்றால் அது நிர்வாகம் மாத்திரம் செய்யும் பணியல்ல. மக்களும் அதற்கு ஒத்துழைக்கிறார்கள். அதைப்போல சென்னை சிங்காரச் சென்னையாக தொடர்ந்து விளங்கிட வேண்டுமேயானால் மக்களும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது.

இப்போது மேயர் ஸ்டாலினுடைய முயற்சியால் நவீனமான முறையில் இயந்திரங்களைப் பயன்படுத்தி துப்புரவுத் தொழிலில் ஈடுபாடு கொண்ட அதை ஒரு உத்தியோகமாக கருதுகிற ஆட்களை வைத்து சென்னையில் மூன்று நான்கு பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டு குறிப்பாக மைலாப்பூர், ஆயிரம்விளக்கு, திருவல்லிக்கேணி பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கே செல்லுகிற நேரத்தில் சிங்கப்பூரில் உள்ள தெருக்களைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. அவ்வளவு தூய்மையாக இருக்கின்றது. அங்கே வாழ்கிறவர்கள் என்னைச் சந்திக்கும் போதும் சரி, நண்பர்களைச் சந்திக்கும்போதும் சரி, மேயரைச் சந்திக்கும் நேரத்திலும் சரி மிகத் தூய்மையாக இந்த முயற்சியின் காரணமாக எங்கள் பகுதி விளங்குகிறது. இதை விடாமல் செய்து வாருங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மற்ற பகுதிகளுக்கும் அதை விரிவாக்க வேண்டும் என்ற எண்ணம் மாநகராட்சி மன்றத்திற்கும் இருக்கிறது. குறிப்பாக எனக்கும் இருக்கிறது. அதற்கு சில இடையூறுகள், சில அரசியல் தலையீடுகள் உருவாகின்றன என்பதையும் மறந்துவிடக்கூடாது. அவைகளையும் மீறி இந்த நல்லப் பணியை நாம் தொடர சென்னை மாநகர மக்களுடைய ஒத்துழைப்பும் உதவியும் தேவை என்று நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

**சென்னை மாநகரம் தூய்மையாக இருப்பதற்கு ஒத்துழைப்பீர்**

அதுவரையிலே தூய்மைப்படுத்தப்படுகின்ற இடத்திலேகூட சில இடங்களில் தூய்மைப்படுத்தி விட்டுச் சென்ற அடுத்த நிமிடம் ஒருவர் ஒரு தாளை அங்கே போட்டுவிட்டு போவது, சிகரெட் பிடிப்பவர் சாலையில் சிகரெட்டைப் பிடித்துவிட்டு ஓரத்திலே கூட போடாமல் நடுச்சாலையிலே அதைப் போட்டுவிட்டு போவது போன்ற காட்சிகளை யெல்லாம் காண முடிகின்றது. நான் அவர்களுக்கு இரண்டாவது முறையாகச் சொல்கிறேன். நான் அடிக்கடி என் குரல் வளத்திற்காக விக்ஸ் வில்லையை வாயிலே போட்டு அதன் மூலம் தொண்டைக் கரகரப்பைக் குறைத்துக் கொள்வதுண்டு. நான் காரிலே செல்லும்போது கூட அந்த விக்ஸைப் பிரித்து வாயிலே போட்டுக் கொண்டு, பிரிக்கப்பட்ட தாளை காருக்குள் போடுவேன், இல்லாவிட்டால் சட்டைப்பைக்குள் போட்டுக் கொள்வேன். பலபேர் என்ன செய்கிறார்கள்? காரிலே இருந்து பார்த்தால் ஏதோ காற்றாடி விடுவதைப் போல காருக்குள்ளிருந்து தாளை வீசி எறிவதை காண முடிகிறது. அப்படி வீசியெறிப்படும் தாள் பல சேர்ந்தால் அதற்குப் பெயர்தான் குப்பை. அதைப்புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஒரு தாளைத்தானே போட்டோம். நாம் போட்டது ஒரேயொரு துண்டு தாள் தானே என்று எண்ணினால் இப்படி பல துண்டுத் தாள்கள் சேர்ந்தால் அது தூய்மையைக் கெடுத்துவிடும் என்பதை உணர வேண்டும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் சென்னை மாநகரம் தூய்மையாக இருப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். அந்த உணர்வு நமக்கெல்லாம் இருந்தாக வேண்டும் என்று நான் சென்னை மாநகர மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவிற்கு இன்றைக்கு சிங்காரச் சென்னையை நோக்கி நாம் போய்க் கொண்டிருக்கிறோம். முழுமையான சிங்காரச் சென்னை இன்னமும் அமைந்துவிடவில்லை. அதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். அப்படி போகின்ற அந்தப் பயணத்திற்கு இடையூறு இல்லாமல் மாநகர மக்கள் மாநகராட்சி மேயருக்கும், மன்றத்திற்கும் உங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொண்டு இந்த நல்ல விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பு கிடைத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*– சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை – டி.டி.கே. சாலைச் சந்திப்பு, டி.டி.கே. சாலை– சர்.சி.வி. இராமசாமி சாலைச் சந்திப்பு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட இரு மேம்பாலங்களை 12–8–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து.* ★

# நாட்டுப்புறவியல் கூறுகள்

மு. இளங்கோவன்

தமிழ்மொழியின் சிறப்பினையும் தமிழர்களின் பெருமையினையும் தெரிவிக்கும் சான்றுகளாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கூத்துகள், விளையாட்டுகள், பாடல்கள், பண்பாட்டு மரபுகள், வாழ்வியல் நெறிகள், பொழுதுபோக்குகள் முதலானவற்றைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. சங்கப்பாடல்கள் என்பவை பல்வேறு புலவர்களால், பல்வேறு காலங்களில், பல்வேறு இடங்களிலிருந்து எழுதப்பட்டுள்ளன. இவற்றில் அந்தந்த மண்ணின் தொழில்கள், அடையாளங்கள் பதிய வைக்கப்பட்டுள்ளன. அக்கால மக்களின் வாய்மொழிவழி சங்க இலக்கியங்கள் பயிலப்பட்டமையால் "சங்கப்பாடல்களை வாய்மொழி இலக்கியங்கள்" எனக் கைலாசபதி குறிப்பிடுவார். இச்சங்கப் பாடல்களின் வழி அறியலாகும் நாட்டுப்புறவியல் கூறுகளை இக்கட்டுரை ஆராய முனைகின்றது.

சங்ககால மக்கள் நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாக வகுத்தனர். ஒவ்வொரு நிலத்திற்கும் முதல், கரு, உரிப்பொருள்களை வரையறை செய்தனர். எனவே ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய அடையாளங்கள் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய இசையும், இசைக்கருவிகளும் தெரிய வருகின்றன. குறிஞ்சிப்பண், நெய்தற்பண், பாலையாழ், நெய்தற்பறை போன்ற ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியே இசைமரபும், இசைக்கருவிகளும் இருந்துள்ளன.

குறிஞ்சிநில மக்கள் தினைப்புனத்தில் கிளிகளை விரட்டிய போது பாடிய பாடலும், குரவைப்பாடலும், வேலனின் வெறியாட்டுப் பாடலும், வள்ளைப்பாடலும் (உலக்கை இடிக்கும்போது பாடுவது), முல்லைநில மக்கள் பாடிய குரவைப்பாடலும், பெண்டிர்கள் பாடிய பாடலும் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. மேலும் மருதநிலத்தில் வாழ்ந்தவர்கள் பாடிய துணங்கைப்பாடலும், உழவுப்பாடலும், ஏாவண்டைப் பாடலும், நீர் இறைக்கும்போது பாடும் பாடலும் நெய்தல் நிலத்தில் பாடும் குரவைப்பாடலும், ஊசற்பாடலும் இவை போன்ற பிற பாடல்களும் நாட்டுப்புறச் சாயலில் முன்பு பாடப்பட்டுள்ளமைக்குப் பல சான்றுகள் உள்ளன. சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறவியல் செய்திகள் இடம் பெற்றுள்ளமை போன்று சங்க நூல்களுக்கு முந்தைய தொல்காப்பியத்திலும் நாட்டுப்புறவியல் குறித்த குறிப்புகள் உள்ளன. தொல்காப்பியர் எட்டுவகை வனப்புகளைப் பற்றி குறிப்பிடும் இடத்தில்,

**சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்**
**புலன் என மொழிப் புலனுணர்ந் தோரே.**

(தொல்)

என்று புலன் என்னும் வனப்பினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

வழக்குச் சொற்களால் தொடுக்கப்பட்டு, ஆராய வேண்டாமல் பொருள் விளங்குவது புலனெனும் செய்யுளாம் என்பது இளம்பூரணம். எனவே மக்களின் வழக்குச் சொற்களால் அமைந்து ஆடியும், பாடியும்

மகிழத்தக்க நாடகத்தன்மை உள்ள பாடல்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வழங்கியிருக்க வேண்டும். மேலும் விடுகதை, பழமொழி முதலான வடிவங்கள் பற்றியும் தொல்காப்பியத்தில் குறிப்புகள் உள்ளன. மன்னன் உறங்குவதற்கு முன் பாடல்பாடி உறங்கவைக்கும் முறை இருந்துள்ளதை,

**கண்படை கண்ணிய கண்படை நிலையும்**

(பொருள், புற.29)

என்ற தொல்காப்பியம் நூற்பாவடி குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியத்தை அடுத்து எழுந்த சங்க இலக்கியங்களில் பல்வேறு நாட்டுப்புறவியல் சார்ந்த செய்திகள் செவ்வியல் தன்மை

வெறியாட்டு, வாட்கூத்து, கயிறாட்டம், உரற்கூத்து, பாவைக்கூத்து, கபாலக் கூத்துப் பற்றிய செய்திகள் குறிப்பிடத்தக்கன. இக்கூத்துகள் பற்றிய விரிவாக ஆராயும்போது இவை இசை, விளையாட்டுகளுடன் நெருங்கியத் தொடர்புகள் கொண்டுள்ளதையும், அக்கால மக்களின் வாழ்வியலில் இக்கூத்துகள் பெற்ற இடத்தினையும் அறிய முடிகின்றது.

**குரவைக் கூத்து**

குரவைக் கூத்து எழுவரேனும், ஒன்பதின்மரரேனும் கைகோர்த்தாடும்



பெற்றுக் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் ஒப்பாரிக்கு நிகரான பாடல்கள் உள்ளன எனினும் ஒப்பாரி என்ற சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் இல்லை. கணவன் இறந்ததால் மனைவி புலம்புவது, மனைவியின் மறைவிற்குக் கணவன் புலம்புவது, தந்தையின் இறப்பிற்கு மகளிர் புலம்புவது, அரசன் மறைவிற்குப் புலவர் பாடுவது என்ற முறையில் சங்க இலக்கியங்களில் கையறுநிலைப் பாடல்கள் உள்ளன.

சங்க இலக்கியங்களில் அக்காலத்தில் நிலவிய பல்வேறு கூத்துகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றுள் குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து,

கூத்து என்றும், வரிகூத்தின் ஒருறுப்பு என்றும், விநோதக் கூத்து ஆறனுள் ஒன்று என்றும் கூறுவர். மலைநடனம் எனக் குரவைக் கூத்தினை அகராதிகள் குறிப்பிடுகின்றன.

குரவை நிகழ்த்துவது என்பதைக் குரவை அயர்தல், குரவை தூங்குதல், குரவை முனைதல், குரவை நிற்றல், குரவையோடொலித்தல், குரவை தழுஉதல் என்று சங்க இலக்கியங்கள் (புறம்.129; அகம்232; அகம்20; மகா.615; மகா.97; கலி.109) குறிப்பிடுகின்றன.

குரவைக்கூத்து என்பது குறிஞ்சி நிலமக்கள் நிகழ்த்தும் கூத்து என்பதைப் பரவலாகச் சங்க இலக்கியமும்,

சிலம்பும் குறிப்பிடுகின்றன. குரவை என்பது குழு நடனம் (கலி 104:69) எனவும், இசைப் பின்னணியுடன் ஆடுவது எனவும் (ம.கா.97), குரவையாடுதலில் பங்குகொள்வோர் ஒருவரையொருவர் தழுவிக்கொள்வர் எனவும் (ம.கா.614–615), குரவையாடுவோர் கள்குடித்து ஆடுவது உண்டு எனவும் (புறம்.129; மலை.320–323) குறிப்புகள் உள்ளன. இக்கூத்து மலையுச்சி, மணற்குன்று, மரநிழல் இவற்றினை இடமாகக் கொண்டு ஆடப்பட்டுள்ளது. வழிபாடு, பொழுதுபோக்கு, வெற்றியின் அறிகுறி என்ற நிலைகளில் குரவையாடுதல் நிகழ்ந்துள்ளது.

முல்லை நிலமக்கள் தெய்வ வழிபாட்டிற்கும், பொழுதுபோக்கிற்கும் குரவையாடியுள்ளனர். அவர்கள் நல்ல மணற்பரப்பில் குரவையாடியுள்ளனர். குரவைக் கூத்துச் சில மாற்றங்களுடன் இலங்கையில் நடத்தப்படுகிறது என்று அறிய முடிகின்றது (மேற்கோள் : ப.118, தமிழர் கூத்துகள்). குறவர் இனமக்கள் மூங்கில் குழாயில் விளைந்த தேறலை முகந்து, வேங்கை மரநிழலின் முன்றிலில் குரவை அயர்ந்துள்ளனர். கோசர், கள்ளின் தெளிவையுண்டு களிப்புற்று இனிய குரவையாடு மிடத்து இசை எழுப்புவர் (புறம் 376:7–9) எனவும், குறவர்கள் தம் சுற்றத்தினருடன் மூங்கிலில் விளைந்த தேனால் செய்த கள்தெளிவை உண்டு மகிழ்ந்து தொண்டகம் என்னும் சிறுபாறையின் ஒலிக்கேற்பக் குரவை அயர்வர் (முரு.194–197); எனவும், மகளிர் தம் கணவரது பரத்தமைத்தன்மையைப் பாடிக் காஞ்சி மரத்து நிழலில் குரவை ஆடுவர் எனவும் (அகம் 336–9) வரும் குறிப்புகள் குரவைக் கூத்தினைப் பற்றிய பல்வேறு செய்திகளைத் தெரிவிக்கின்றன. (குரவை எனும் சொல்லாட்சி குறித்து அறிய காண்க : ச.இ. பொருட்களஞ்சியம். பக்.390, 391, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு)

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குரவைக் கூத்து அக்காலச் சமூக மக்களின் பெரும் பான்மைக் கலைவடிவமாக இருந்துள்ளது. அரசன் முதல் அவன் நிழலில் உறையும் குடிமக்கள் வரை குரவைக் கூத்தினை அறிந்துள்ளனர் எனவும் அயல்தேசத்தினரும் இக்கூத்தினைக் கண்டும், பங்கு பெற்றும் உள்ளனர் என்பதும் தெரிய வருகின்றன. அரசன், படைவீரர்கள், குடிமக்கள் எனச் சமூகத்தின் பலதரப்பட்டவர்களும் இக் கூத்தினை ஆடியுள்ளனர். ஆண், பெண் இணைந்தும், பெண்கள் குழுவினராகவும், வீரர்கள் வெற்றிக்களிப்பாலும், தெய்வம் நினைந்தும் ஆடியுள்ளனர். எனவே சமூகத்தின் அனைத்து மக்களாலும் அறியப்பட்ட வடிவமாகக் குரவைக் கூத்து விளங்கியுள்ளது.



துணங்கைக் கூத்து

சங்க இலக்கியங்களில் துணங்கைக் கூத்து என்றொரு வகை குறிப் பிடப்படுகின்றது. மகளிர் நிகழ்த்தும் கலைவடிவம் இது. துணங்கைக் கூத்து இரவு நேரங்களில் நடைபெறும். முழவு இசைத்துத் துணங்கைக் கூத்தினை மக்கள் நடத்தியுள்ளனர். பேய்த்துணங்கை, போர்த்துணங்கை, மகளிர்த்துணங்கை எனும் மூவகைத் துணங்கைக் கூத்துகள் பற்றிச் சங்க

இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. துணங்கைக் கூத்து ஆரவாரம் மிக்கது எனவும், முன்பே பயிற்சி பெற்றவர்கள் இக்கூத்துகளில் பங்கேற்பர் எனவும் அறியமுடிகின்றது. பெண்கள் ஆடிய துணங்கைக் கூத்தினுக்குச் சேரலாதன் தலைக்கை கொடுத்தமைக்கு அவன் தலைவி ஊடினாள் (பதி.52:13:16) எனும் குறிப்பினையும் காணமுடிகின்றது. மேலும் பரத்தையர் ஆடும் துணங்கைக் கூத்தின்போது தலைக்கைகொடுத்த தலைவனின் நீல ஆடை பரத்தையின் சிலம்பில் சிக்கிக் கிழந்ததைக் கலித் தொகைக் குறிப்பு (கலி 73:16–17) வழி அறிய முடிகின்றது.

துணங்கைக் கூத்து என்பது பெண்கள் ஆடுவதாகவும், ஆணும் பெண்ணும் இணைந்து ஆடுவதாகவும், போர் வீரர்கள் ஆடுவதாகவும், பேய்கள் ஆடுவதாகவும் (முருகு.51, 56; பெரு.234, 235) குறைத்தலைப்பிணம் எழுந்து நின்று ஆடுவதாகவும் (மது.25–27) சங்க இலக்கியங்கள் குறிப்புகளைத் தருகின்றன. மேலும் தலைவன் குழை, கோதை, பைந்தொடிகளை அணிந்தவனாய் விழாக் காலத்துத் துணங்கை யாடினான் (நற்.50:2,3) எனவும் குறிப்பு உள்ளது. எனவே சங்ககாலச் சமுதாயத்தினர் அனைவ ராலும் பல்வேறு சூழல்களில் துணங்கைக் கூத்து ஆடப்பட்டுள்ளமையை உணர முடிகின்றது.

**ஆரியக் கூத்து (கழைக்கூத்து)**

சங்க இலக்கியங்களில் ஆரியக் கூத்து எனும் கலைவடிவை மக்கள் பயன்படுத்தியுள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. கழாய்க் கூத்து அல்லது கயிறாட்டம் எனவும் இதனைக் குறிப்பிடுவர். ஆரியக் கூத்து எனும் கயிறாட்டம் பற்றி,

**கழைபாடு இரங்கப் பல்இயம் கறங்க**
**ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று**

*(நற்.95 1 :1–2)*

என்று நற்றிணை விளக்குகிறது. கயிற்றின்மீது தாளத்திற்கேற்ப நிகழும் நடனம் இது என்பதை இச்சான்றின் வழி அறியமுடிகிறது. கழைக்கூத்து ஆடுவது எளிதான செயல் அன்று. கருவிகளின் இசைக்கேற்ப இரு புறங்களில் நடப்பட்ட மூங்கிலின் மீது கட்டப்பட்ட கயிற்றின் மீது மெல்ல நடந்து ஆடுவது கழைக்கூத்து ஆகும். இதனை அழகிய ஓர் உவமை வழிச் சங்கப்புலவர் குறிப்பிடுகின்றார். இனிய கள்ளினை நீரென்று உண்ட மயில் தடுமாறுவதைப் போல் ஆசிரியர் தள்ளாடுவர் என்பதை,



**நீர்செத் தயின்ற தோகை**
**வியலூர்ச்**
**சாறுகொ ளாங்கண்**
**விழவுக்கள நந்தி**
**அரிக்கூட்டு இன்இயம்**
**கறங்க ஆடுமகள்**
**கயிறூர் பாணியிற் றளரும்**

*(கு.பா.191–194)*

என வரும் பாடலடிகள் உணர்த்தும்.

ஆரியக் கூத்து நிகழும் போது பல்வேறு இசைக் கருவிகள் தாளநயத்துடன் இசைக்கப்படும் என்பதையும், அவை

வாகைநெற்றுகள் காற்றிலாடி ஒலிப்பதுபோல் இருக்கும் எனவும் (குறுந்.7:3–15) இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. ஆரியக் கூத்திற்குக் கழையும், கயிறும் மிகவும் தேவையானவை என்பதும், இவை குறிஞ்சி நிலக் கருப்பொருள்கள் என்பதும் சிந்திக்கத்தக்கன.



### உரற்கூத்து

உரற்கூத்து என்னும் ஒருவகைக் கூத்து சங்க காலத்தில் நிகழ்த்தப் பட்டுள்ளது. இது உரலைக் கட்டித் தொங்கவிட்டு ஆடும் ஆட்டமாக அறியமுடிகின்றது.

**துளைஅரைச் சீறரல் தூங்கத் தூக்கி**
**நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த**
*(பெரும் : 54–55)*

எனும் குறிப்பின் வழி பெண்கள் உரற்கூத்தினை நிகழ்த்துவர் என்பது புலனாகின்றது. இக்கூத்து நிகழ்த்தப்படும்போது இசைக் கருவிகள் வாசிக்கப்படுவதும் (பெரும் 55–56), வீட்டு முன்றில்களில் சென்று இக் கூத்து நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகின்றன.

### வெறியாட்டு

சங்க இலக்கியங்களில் வெறியாட்டுக் குறித்த செய்திகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சமுதாயத்தில் பெரும்பான்மை மக்களிடம் வெறியாட்டு நிகழ்த்தும் மரபு இருந்துள்ளது. இவ்வழக்கத்தினை வெறியாட்டுக் கூத்து என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். பிற வகைக் கூத்துகளிலிருந்து இது வேறுபட்டு நிற்கின்றது. தலைவனை நினைத்து வருந்தும் பெண்டிர் உடல்மெலிவுற்ற காலத்தில் வேலன் (முருகன் அருள்பெற்றவன்) வெறியாட்டு நிகழ்த்துவதாகச் செய்திகள் இடம்பெறுகின்றன. வெறியாட்டுக் கூத்தில் ஒருவரே ஈடுபடுவர். ஆடவரும், பெண்டிரும் இக்கூத்தில் ஈடுபட்டுள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. வெறியாட்டு என்பது குறிஞ்சிக்கடவுள் முருகனைத் தருவித்து ஆடுவது ஆகும். வெறியாட்டு நிகழ்வு, காலம், வெறியாடுவோரின் மனநிலை, வெறியாட்டத்தின்போது பயன்படுத்தப்படும் பொருள்கள் முதலியன பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

வெறியாடும் இடம் மிகுந்த பரப்பினைக் கொண்டிருக்க வேண்டும் (அகம் 98:17) எனவும், அழகுபடுத்தப்பட்டிருக்கும் (அகம் 22:8–1) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆட்டினது கழுத்தை அறுத்து அதன் உதிரத்தைச் சிந்தி களம் முழுவதும் தினைக்கதிரைப் பரப்பி வைப்பது வெறிகளம் புனைவதின் முதன்நிலை என்பதை, 'மறிக்குறள் அறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்' (குறுந்–263:1) எனும் பாடலடி உணர்த்தும். வெறியாட்டுக்களம் அச்சம் தருவதாகக் காணப்படும். தூய்மையற்ற மகளிர் வெறியாட்டு இடங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்துள்ளனர். வெறியாடல் என்பது மயிலின் ஆடலுடனும், கன்றின் துள்ளலுடனும் ஒத்துள்ளதாகச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும்.

**கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்**
**அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்**

*(குறுந்.105:2–4)*

**முருகு மெய்ப்பட்ட புலைத்தி போலத்**
**தாவுபு தெறிக்கும் ஆன்**

*(புறம்.259,5–6)*

எனும் அடிகள் இதனை மெய்ப்பிக்கும். சங்க காலத்தில் நிலவிய பிறவகைக் கூத்துகளுக்கு இல்லாத தனிப்பண்பாக வெறியாடுவோரின் உணர்வு வயப்பட்ட நிலையினைச் சுட்டலாம்.

இக்கூத்துகளைத் தவிரப் பாவைக்கூத்து, வாளமலைக்கூத்து, துடிக்கூத்து முதலான புறத்துறை சார்ந்த கூத்துகள் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. கொடுகொட்டி (கலி.கடவுள் வாழ்த்து), பாண்டரங்கம் (கலி.கடவுள்), கபாலக்கூத்து (கலி. கடவுள்) முதலான இறைநெறி சார்ந்த கூத்துகள் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் உள்ளன.

**விளையாட்டுகள்**

சிற்றூர்ப்புற மக்களின் வழக்கில் இருந்த பல்வேறு விளையாட்டுகள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலான விளையாட்டுகள் மகளிர் விளையாடுவனவாக உள்ளன. அடுத்துச் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுகள் இடம் பெற்றுள்ளன. விளையாட்டுக்களம் – விளையாடுபவர்கள் – விளையாட்டும் காலம் – விளையாடும் கருவிகள் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் உள்ளன. புனலாடுதல், கழங்காடுதல் முதலான விளையாட்டுகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. நீர் விளையாட்டில் மகளிர் தம் தோழியருடனும், காதலனுடனும் விளையாடுவர். சுனை, அருவி (புறம் 251:4), கடல் (புறம் 339:4) என மூன்று நிலைகளில் புனல் விளையாட்டு இருந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. புனல்விளையாட்டின்போது பெண்கள் மெல்லிய ஆடைகளை அணிந்து நீராடியதைப் பரிபாடல் (பரி.10:9–10) குறிப்பிடும். இதுபோல் நீருடன் தொடர்புடைய வண்டல் அயர்தல் (வண்டல் விளையாட்டு, அகம் 320:11–13) எனும் விளையாட்டினைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன. மேலும் நீர்நிலைகளுடன் தொடர்புடைய நண்டுபிடித்து விளையாடும் (அலவனாட்டு) விளையாட்டும் உண்டு. நண்டு பிறந்ததும் தாய் நண்டு இறந்துவிடும் என்ற குறிப்பினைத்,

**தாய்சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு**
**பிள்ளை தின்னு முதலைத்து அவன்ஊர்**

*(ஐங்.24:1–2)*

எனும் பாடலடி தெரிவிக்கின்றது.

**அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்த**

*(நற்.363:10)*

எனும் பாடலடி அலவனாட்டினைப் பற்றித் தெரிவிக்கின்றது.

செம்மூதாலாட்டு என்னும் பெயரில் ஒரு விளையாட்டு இருந்துள்ளது. செம்மூதாய் என்பது தம்பலப்பூச்சி ஆகும். பட்டுப்பூச்சி என்றும் இதனை அழைப்பது உண்டு. இதனைப் பிடித்துப் பெண்கள் விளையாடியுள்ளனர் (நற்.362:5–6). மேலும் பூவில் உரையும் வண்டுகளைப் பிடித்து விளையாடும் வழக்கம் இருந்துள்ளதையும் அறிய முடிகின்றது (நற்.27:1–2).

சங்க இலக்கியங்களில் சிறப்பிடம் பெறும் விளையாட்டுப் பாவை விளையாட்டு ஆகும். வண்டல் மணல்களில் பாவை செய்து விளையாடுவதைப் பாவை விளையாட்டு என்பர். 'வண்டல் பாவை சிதைஇய வந்து' (அகம் 320:11–13) எனும் அடி இதனை மெய்ப்பிக்கும். புல்லினால் பாவை செய்யும் மரபும் அக்காலத்தில் நிலவியுள்ளது.

பந்தாடுதல் சங்க காலத்தில் இருந்துள்ளது. இது மகளிர் விளையாடும் விளையாட்டு ஆகும். 'பந்தாடு மகளிற் படர்தரும்' (ஐங்.295:5) எனும் குறிப்பு இதனைத் தெரிவிக்கும். இல்லங்களில் இருந்த பெண்கள் கழங்காய்களைக் குழியில் இட்டு ஆடியுள்ளனர். கழங்கினை இடும் குழிகள் அறை எனப்படும் (நற்.76:3). மேலும் ஊசல், வள்ளைப்பாட்டு முதலான விளையாட்டுகளும் இருந்துள்ளன.

இளைஞர்கள் ஏறு தழுவுதலையும் (கலி.103:63–64) மல்லாடலையும் (புறம்.80) விளையாட்டாக மேற்கொண்டிருந்தனர். முதியவர்கள் வல்லு என்னும் விளையாட்டினை ஆடியதை,

**நரைதோளர் அதிர்தலை இறக்கி**
**கவை மனத்து இருத்தும் வல்லு**

*(அகம்.377:7–8)*

எனும் பாடலடிகள் சுட்டும்.

சிறுவர்கள் விளையாடிய வட்டாட்டமும் (நற்.3:3–4) கிலுகிலியாட்டும் (கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலியாடும் – சிறுபா.61), தழூஉ விளையாட்டும் (கலி.83:3) பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

**நன்றி : சங்க இலக்கியம்**
**வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

★ ★ ★

# சிதைவு

**• ஆர். வெங்கடேஷ்**

59 ஆம் நம்பர் வீட்டுக்குப் போய் வாடகை வசூலித்து வரச் சொல்லியிருந்தாள் அம்மா.

எங்கள் வீட்டில் யார் படிப்பை முடித்துவிட்டு வேலைக்குக் காத்திருந்தாலும், அனுதினமும் பல்வேறு தினசரிகளைப் பார்த்து, இணக்கமாய் சுருக்கமாய் வேலை கோரி விண்ணப்பங்கள் போடுவதோடு, சில கடமைகள் மற்றும் பணிகளை ஏற்றே தீரவேண்டும். அதில் இந்த வாடகை வசூலும் ஒன்று.

மற்றவைகளில் முக்கியமானவை; விடிகாலை எழுந்து குளித்துவிடவேண்டும். பவ்யமாய் சுவாமி படத்தின்முன் நின்று 'நல்ல எதிர்காலம் கொடு தெய்வமே' என்று சில பதிகங்களை ஓப்புவித்து விட்டு, வேண்டிக்கொள்ளவேண்டும். அப்புறம் ஒரு மிடறு காப்பியைக் குடித்துவிட்டு சமர்த்துப்பிள்ளையாய் மரக்கடைக்குப் போய்விடவேண்டும்.

இதெல்லாம் செய்யவில்லையென்றால், இரண்டு விஷயங்கள் நடைபெறும். முதலில் வேலையற்றுத் தூங்கும் சோம்பேறிப் பட்டம். மற்றொன்று, வீட்டுக்கு வருகிற போகிறவர்களிடம் எல்லாம் அம்மா, ''எங்க ராஜு படிச்சுட்டு வேலை இல்லாம கெடக்கறான், பாவம் ஏதாவது வேலை இருந்தா சொல்லுங்களேன்'' என்று குரல் தாழ்த்திக் கெஞ்சுவாள். இல்லாத பச்சாதாபமெல்லாம் சுற்றிக்கொள்ளும். படுத்தால் எதிர்காலமே இருட்டாய்த் தெரியும். கனவுகளில் ஒரு எச்சையிலை காற்றில் பறந்துகொண்டேயிருக்கும்.

இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால், இந்த இடைப்பட்ட காலத்தில் அதிபயங்கர உற்சாகியாய் இருந்து விடவேண்டும். தப்பித்தவறி சோகம் எங்கும் தட்டுப்பட்டுவிடக்கூடாது. இதற்கும் அம்மா, ''அவனால முடிஞ்சவரைக்கும் ஆக்டிவாத்தான் இருக்கான். பாவம், நல்ல வேலை கெடைக்கணும்'' என்பாள்.

ஆனால், தேவையில்லாமல் சில பைத்தியக்காரத் தனங்கள் இப்போதுதான் தோன்றும். அதிகமாகச் சாப்பிடப் பிடிக்காது. உரிமையாய் எதையும் கேட்கப் பிடிக்காது. நானே துவைக்கிறேன் பேர்வழியென்று பழுப்பு வேட்டியோடு வலம் வருதல், யாராவது சும்மாயிருக்கிறேன் என்று சொல்லிவிடுவார்களோ என்று வீட்டை ஓட்டடை அடிப்பது, கறிகாய் வாங்குவது, மின்சாரக் கட்டணம் செலுத்துவது என்று ஓடியாடுவது, இறுதியாய், எல்லாரும் தூங்கின பின் தூங்குவது.

இவற்றில் எல்லாவற்றையுமோ அல்லது ஒரு சிலவற்றையோ என் அண்ணாக்கள் செய்து நான் பார்த்திருக்கிறேன். இப்போது என் முறை. பொறியியலின் கடைசி செமஸ்டர் ரிசல்ட் இன்னும் வரவில்லை. எழுதிவிட்டு வெளிவந்தவுடனே தொண்டையை அடைக்கத் தொடங்கிவிட்டது. என்னதான் அப்பாவுக்குச் சொந்த மரக்கடை உண்டென்றாலும் அது என் சொத்தில்லை. நானே உழைத்து முன்னுக்கு வரவேண்டும்.

அண்ணாக்கள் எல்லாம் நன்றாக இருக்கிறார்கள். நான் மட்டும் குடும்பத்தைக் கெடுக்க வந்தக் கோடாரி காம்பாகி விடக்கூடாது. இப்படி என்னென்னவோ பயம். வீட்டுக்கு வந்தவுடன், வழக்கம்போல் அம்மா சாதம் போட்டுக் கொண்டே மூன்றாவதுவீட்டு பவ்யாவுக்கு எல்.ஐ.சி.யில் வேலை கிடைத்துவிட்டதைச் சொன்னாள்.

''மேல என்ன படிக்கணுமோ படி. எல்லாம் நான் பாத்துக்கறேன். கடைக்கெல்லாம் வராத'' என்றார் அப்பா. எதுவும் காதில் விழாதவனாய் மறுநாளிலிருந்து அண்ணாக்களின் வழியில் நானும் கடைக்குப் போனேன்.

அப்போதுதான் இந்த வாடகை வசூலும் வந்தது.

''அந்த ஆள் இந்த மாசம் வாடக குடுத்தானாப்பா?''

ஒருநாள் மதியம் சாதம் போட்டுக்கொண்டே அம்மா கேட்டாள். இந்த ஆள் என்பது 59ஆம் நம்பர் வீட்டில் பல்லாண்டுகளாய்க் குடியிருக்கும் செல்லப்பாவைக் குறிக்கும்.

''தெரியலம்மா''.

''நிச்சயமா குடுத்திருக்க மாட்டான் பாரு. இன்னிக்குப் பதினேழு தேதியாறது. நாலு மாசம் பாக்கி. உங்கப்பா ஏதாவது பண்ணாரா? ஒண்ணும் பண்ணியிருக்க மாட்டாரே''.

நான் வெறுமனே சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இந்தச் செல்லப்பா பிரச்சினை கல் தோன்றி மண் தோன்றா காலத்து

முன்தோன்றிய பிரச்சினையாயிருக்க வேண்டும். எனக்குத் தெரிந்து எல்லா அண்ணாக்களும் போய் வாடகை வசூல் செய்திருக்கிறார்கள்.

அவராய் வந்து வாடகை கொடுத்த சரித்திரமேயில்லை. எப்போதும் ஒரு மூன்று நான்கு மாத வாடகை பாக்கி இருந்துகொண்டே இருந்திருக்கின்றது. அதுவும் பிசாத்து வாடகை. முன்னூறு ரூபாய். சென்னை மாநகரின் மையமான சூளைப் பகுதியில் இவ்வளவு குறைவான வாடகை என்றால் யாரும் சிரிக்காமல் இருக்கமாட்டார்கள்.

நறுக்குன்னு நாலு வார்த்தை கேளு. வாடகைய வாங்கிட்டு வா. ஏதாவது ஜாஸ்தி பேசினா, வீட்ட காலி பண்ணிட சொல்லு. வேறு ஆள் பார்த்துக்கலாம்''.

நான் கைகழுவ எழுந்துகொண்டேன். இதில் இருக்கும் மடத்தனம் எரிச்சல் ஏற்படுத்தியது. ஒருவன் சரியாய் வாடகை கொடுப்பதில்லை. இழுத்தடிக்கறான். அப்புறமும் ஏன் அவனையே இருக்கவிட வேண்டும்? இன்றைய தேதிக்கு

நாங்களெல்லாம் பிறந்தது அங்கே தான். பக்கத்திலேயே அப்பாவுக்குக் கடை. சைடாம்ஸ் ரோடு.

நான் பிறந்தபின், கடையில் நல்ல முன்னேற்றம். அப்புறம்தான் இந்த பெசன்ட் நகர் வீடு. சூளை வீட்டை, இன்னொரு மரக்கடையில் கணக்கெழுதும் செல்லப்பாவுக்கு, அப்பா வாடகைக்கு விட்டார். அவர் வாடகைக்கு வந்து, என் வயதாகும். வாடகையை இழுத்தடிக்கும் பாணிக்கும் என் வயதாகலாம்.

அசமந்தமாய் வியாபாரம், மணி நான்கு. யாரையும் காணோம். அப்பா வெளியே போயிருந்தார். முதலில், கடைக்கு வரவேண்டா மென்றவர், நான் வரத் தொடங்கியதும்,



ஆனால், இதில் சில புரியாத அம்சங்கள் உண்டு. எதற்குச் செல்லப்பாவையே இத்தனை ஆண்டுகள் அதில் குடியிருக்க விடவேண்டும்? அதுவும் வாடகை ஏற்றாமல்? அம்மா சத்தம் போடுவாளே தவிர, மேற்கொண்டு எதுவும் செய்ததாய் தெரியவில்லை.

''சரி, இப்ப என்ன பண்ணணுங்கற?''

''நேரா, அந்த வீட்டுக்குப் போ, அந்த ஆள் இருக்கானா பாரு.

அதை அப்படியே வேறொருவருக்குக் கொடுத்தாலும் ஆயிரக்கணக்கில் வாடகை வரும். பெரிய வீடு. பழங்காலத்துப் பாணி.

எனக்கும் ஒரு மேஜை நாற்காலி போடச் சொல்லியிருந்தார். அதுவும் மிகக் கவனமாய், எவ்வகையிலும், நான் அவர் மகன் என்ற உரிமை

ஏற்பட்டுவிடாதபடி, அவரது இருக்கைக்கு வெகுதொலைவில் கடை. ஊழியர்களின் அருகே, ஆனால் என் ஒவ்வொரு அசைவும், அவரது பார்வையில் படும்படி.

மற்றவர்கள் சோம்பலாய் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். வந்த கொஞ்ச நாளிலேயே தெரிந்து கொண்ட விஷயம்; இது சுறுசுறுப்பான உத்யோகமில்லை. வீடு கட்டுபவர்களோ, காண்ட்ராக்டர்களோ, மேஸ்திரிகளோ வந்தால்தான் வியாபாரம். வருபவர்களுக்கு மரம் பிடிக்க வேண்டும். விலை படிய வேண்டும். அவர்களுக்கு ஏற்ற சைஸ் இருந்தால் பிரச்சினையில்லை. வினோத சைஸ்களுக்கு, புதிதாய் மரம் அறுக்க வேண்டும். பணம் புரளுமே தவிர, உற்சாகம் புரளாது. இதனால்தான், அண்ணாக்கள் இங்கே தாக்குப்பிடிக்க முடியவில்லையோ, என்னவோ!

சூளை வீட்டைப் போய் பார்க்கலாம் என்று கிளம்பிய போது, ராமானுஜன் அண்ணாவின் போன் வந்தது.

''அப்பா இருக்காராடா?''

''வெளியே போயிருக்கார். வந்துடுவார். என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்ல சும்மாதான். நீ என்ன பண்ற?''

''சூளை வீட்டு வரைக்கும் போகலாம்னு கௌம்பிண்டிருந்தேன். நீ போன் பண்ண''.

''என்ன, வாடகை வசூலா? பெஸ்ட் ஆப் லக், போயிட்டு வா''

பதில் எள்ளலும், நமுட்டுச் சிரிப்புமாய்த் தெரிந்தது. போனை வைத்துவிட்டு, கடை ஊழியர்களிடம் சொல்லிவிட்டு, வெளியே நடக்கத் தொடங்கினேன்.

அந்த வீட்டை அடைந்தபொழுது, இரண்டு விஷயங்கள் உறுத்தின. கோபமாய்க்கூட வந்தது. வெளிச்சுவரில் இரண்டு மூன்று செடிகள் இலைவிட்டுப் பரவியிருந்தன. உள்ளே நுழைந்தால், கழிவறை நாற்றம் சகிக்க முடியவில்லை.

முதலில் எதிர்ப்பட்டது, அந்த ஆள்தான். நட்சத்திரங்கள் சிதறிய முழுக்கை பனியன். மக்கில் தண்ணீர் எடுத்து, காலைக் கழுவிக்கொண்டார். திரும்பிப் பார்த்தவருக்குச் சின்ன ஆச்சரியம் முகத்தில்.

''ராஜுவாப்பா நீ?''

ஆமாமென்பது போல தலையசைக்க,

''வா, வா, எவ்வளவு சின்னப் பையனா பார்த்தது உன்ன. இப்ப என்ன பண்ணிண்டு இருக்க, வாப்பா''.

அவர் வேட்டியை இறக்கி விட்டுக்கொண்டு கூடத்திற்குள் நகர, அங்கே பாயைச் சுருட்டிக்கொண்டு ஒரு பெண் சட்டென எழுந்தது. நான் கூடத்திற்குள் போக, அப்பெண் சாவதானமாய் பார்த்துவிட்டு, ரேழிப் பக்கம் போனது.

''என்னப்பா, இவ்ளோ தூரம்! அம்மா எப்படி இருக்கா?''

எங்கே இதற்கெல்லாம் பதில் சொன்னால், என் கோபம் கழன்றுவிடுமோ என்று எண்ணியவாறு பதில் சொல்லாமல் இருந்தேன். பின் சட்டென,

''அந்த வாசல் செடியையெல்லாம் கொஞ்சம் புடுங்கிப் போடக்கூடாதா சார்?'' என்றேன் நான்.

அவர் முகத்தில் யோசனை ரேகை.

''எங்கேயிருக்கு செடி?''

''செடி மொளைச்சிருக்கறதுகூட உங்களுக்குத் தெரியலையா?''

என் குரலின் கடுமை அவரைத் தாக்கியிருக்க வேண்டும்.

''இல்லப்பா, எனக்குக் கொஞ்ச நாளா கண்ணு சரியாத் தெரியல. அதான்'' என்று சிநேகமாகப் புன்னகைத்தார். பின்னால், கதவுக்கு பக்கத்தில் ஒரு மாமியும் பெண்ணும் நின்றிருந்தார்கள்.

''நம்ம ராஜு தெரியறதா? வீட்டுக்கார மாமா கடைசி பிள்ளை'' அவர்தான்.

''தெரியாம என்ன. அவா வீட்ல எல்லார் சாயலும் ஒரே மாதிரிதானே இருக்கும்''.

''காபி கொண்டாயேன்''

''இந்தச் சாக்கடை ஒரு நாத்தமாக நாறறதே. ஏதாவது பண்ணக்கூடாதா?'' நான்.

''நாத்தமா....'' என்றவர் யோசிப்பது போலிருந்தது. பின், ''இங்கே சாக்கடை அப்பப்போ அடைச்சுக்கும். குப்பகாரன் வந்து குத்திவிடுவான். நான் திருப்பிப் பண்ண சொல்றேன்'' என்றவர் மீண்டும் பின்புறம் திரும்பி ''நாறறதா?'' என்று அப்பெண்ணிடம் கேட்டார். அவள் அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் என்னையே பார்த்திருந்தாள்.

மேலே என்ன பேசுவதென்பது எனக்குத் தெரியவில்லை. கோபத்தை அப்படியே தக்கவைத்துக் கொள்ளவும் முடியவில்லை. இரண்டு மூன்று விஷயங்கள் அன்னியமாயும் உணரவைத்தன. முதலில் இது என் வீடில்லை. அப்பா வீடு. அவர் வைத்துள்ள ஒரு குடித்தனக்காரரிடம் போய் அதிகாரம் பண்ணுவது அநாகரிகம். பேசவே வந்திருக்கக்கூடாது. இந்த வீடு இந்த நிலைமைக்கு வந்திருப்பதற்கு, அப்பாவும் காரணம். அதற்கு இவரைப் போய் குற்றம் காண்பது சரியில்லை. அதற்கப்புறம், இந்த வீட்டின் கோலத்தையும் நிலைமையும் பார்த்தபின்னால் பேசவே மனம் வரவில்லை.

மாமி காபி கொண்டு வந்தாள். பால் அதிகமில்லை. கடைசியில் காப்பித்தூள் நாக்கில் உறுத்தியது. டபரா, டம்ளரைக் கீழே வைக்கப் போனபோது, மாமி வாங்கி

கொண்டாள். கூடவே, ''வாடக வாங்க வந்தேளா?'' என்றாள்.

ஆமாம் என்பதுபோல் தலையாட்ட, மாமி முகத்தில் சின்ன புன்னகை.

''நானே. இவர்கிட்ட சொல்லிண்டிருந்தேன், போய் குடுத்துடுங்கோன்னு. இவரும் இதோ போறேன், அதோ போறேன்னார். போகலியா நீங்க?''

''கடையேதான் பெருந்தொல்லையாயிருக்கே. எங்கே போக முடியுது?

அவர் அந்த மாமியைப் பார்த்தார். மாமி முகத்தில் கலவரம் போல் என்னவோ. சட்டென அங்கே ஒரு மௌனம் கவிழ்வதை என்னால் உணர முடிந்தது. கதவோரம் நின்றிருந்த பெண்தான் பேசியது.

''நேத்து பத்மா வாயிண்டு போயிட்டாப்பா. நீங்க தானே கொடுத்தீங்க...''

அவர் முகத்தில் அசட்டுச் சிரிப்பு. ''நான் அப்பாகிட்ட குடுத்துடறேணப்பா. நீ ஏன் பாவம் இவ்ளோ தூரம் வரணும்''.

''சரி, பரவாயில்லை. எங்கிட்டயே குடுத்துடுங்க. நான் அப்பாகிட்ட சொல்லிடறேன்''.

என்னவென்று தெரியாமல், என்னுள் ஓர் மூர்க்கம். ஸ்டூலில் இன்னும் நன்றாய் உட்கார்ந்துகொண்டேன். மனதுக்குள் என்னென்னவோ கேள்விகள், கோபங்கள், ஏமாற்றுகிறவர்கள் என்று மட்டும் உறைத்தது. இன்று விடப் போவதில்லை. என்னவானாலும் பரவாயில்லை. நாலு வார்த்தை கேட்டுவிட வேண்டியதுதான்.

''எங்க பொண்ணு வீட்டுல ஒரு அவசரம். நேத்து வந்து கேட்டா. அவ மாமனார ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்காளாம். அதுக்குத்தான் இத தூக்கி குடுத்துட்டோம். நான் எவ்ளோ...''

மாமி பேச்சைக் கேட்கப் பிடிக்கவில்லை.

''எனக்கு அதெல்லாம் வேணாம் மாமி. வாடகை குடுங்கோ. இல்ல வீட்ட காலி பண்ணுங்கோ. நான் எங்கப்பா மாதிரி ஏமாறுறதா இல்ல. ஏதாவது ஒண்ணு கிளியரா சொல்லிடுங்கோ''.

''இப்படி திடுதிடுப்புன்னு வந்து வாடகைய குடுன்னா, நாங்க வெச்சிண்டு காத்திருக்க முடியுமான்னா? நீங்க இன்னிக்கு வருவீங்கன்னு யாருக்குத் தெரியும்?''

கதவோரம் நின்றிருந்த பெண்தான் விலுக்கென முன்னால் வந்து பேசியது.

''ஆனா, மாசாமாசம் வாடகை குடுக்கணும்னு தெரியுமில்லயா? இந்த மாசத்தோட சேர்த்து நீங்க நாலு மாசம் பாக்கி. அது தெரியுமா? வருவீங்கன்னு தெரியுமான்னு கேக்கறீங்களே, நீங்க ஒழுங்கா வாடகை இன்ன தேதியில குடுக்கறேன்னு சொல்ல வேண்டியதுதானே. அதுக்கு வக்கில்ல''.



இத்தனைக்கும் நாலஞ்சு கடை தள்ளி தான் இவர் கடை. போக முடியலையே''.

நான் யதார்த்தமாய் தலையாட்டிக் கொண்டிருந்தேன்.

''சரி, இப்பவேண்ணா குடுங்க. நான் வாங்கிண்டு போறேன்'' என்றேன் நான்.

''இல்ல. என்னத்தான் வாங்கிண்டு வரச்சொல்லி யிருக்காங்க''.

என்னையறியாமல், என் குரூரம் வெளிப்பட்டது. பிடிவாதமும்.

''நான் நார்மலா அப்பாகிட்டதான் குடுக்கறது. அப்படியே கொஞ்ச நேரம் பேசிண்டு இருப்போம்''.

படபடவென பொறிந்துவிட்டேன். மாமி பெண்ணின் கையைப் பிடித்து

அமுக்க, அவர் தலை கவிழ்ந்து கொண்டிருந்தார். பின் தலை நிமிர்ந்தவர் நெற்றியில் சுருக்கங்கள், கண்களில் இருட்டு.

''நீங்க வாடகை வாங்கறதவிட, சண்டை போடதான் வந்திருக்கேள் போலிருக்கு'' என்றார்.

''நீங்க ஒழுங்கா வாடகைய குடுத்தா, நான் ஏன் சண்ட போடறேன்?'' கொஞ்சம் மூச்சு வாங்கிவிட்டு,

''எனக்கு ஒண்ணும் உங்களோட சண்டை போடணும் ஆசையில்ல சார். நீங்கதான் சண்டை கிண்டையினு எல்லாம் பெரிய வார்த்தைய சொல்றீங்க'' என்றேன்.

''ஆமா, நீ பேசினது சண்ட போடற மாதிரிதான் இருக்கு. அதுவும் அந்தச் சின்ன பொண்ணுகிட்ட போய் கத்தற. நாங்க பெரியவரா எல்லாம் இங்க பேசிண்டிருக்கும் போது, அதுகிட்ட போய் கத்தினா என்ன அர்த்தம்?''

''யார்? உங்க பொண்ணு தான் மொதல்ல கத்தினா. நானா கத்தினேன். நான் பதில்தான் சொன்னேன். நான் வீட்டுக்காரன். வாடகைய கேக்கறேன். எனக்கு வாடகை வேணும். அவ்வளவுதான்''.

வாடகை வாங்காமல் கிளம்புவதில்லை. என்னவானாலும் பரவாயில்லை. அவர் முகத்தில் கவலை போன்ற சாயல்.

பின் சட்டென வீராப்புடன் அவர் எழுந்துகொண்டார்.

''வாடகைய தர முடியாது. என்ன பண்ணுவியோ பண்ணிக்க போ...போ.''

இந்த பதில் எதிர்பார்த்ததல்ல. ஜிவ்வென இரத்தம் தலைக்கேற எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. லேசாய் கை உதறியது.

அவர் அலட்சியமாக அடுத்த அறைக்குப் போக, மாமி மட்டும் மிரண்டு போயிருந்தாள். அப்பெண்ணும் சமையலறைக்குள் நுழைய மாமி,

''கோச்சுக்காதப்ப. அவருக்கு முன்கோபம் ஜாஸ்தி...'' என்றபடி அவசரமாய் முன்னால் வர, என்னுள் அவமானமும் கோபமும் கனன்றது. எதுவும் சொல்லாமல் விறுவிறுவென வெளியே வந்தேன்.

இத்தோடு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டேன்.

கடைக்கு வந்தவுடன், முதல் காரியமாய் அம்மாவுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னேன். அம்மா அசந்து போனாள். ''அப்படியாடா சொன்னான், அப்படியாடா சொன்னான்'' என்று புலம்பிவிட்டாள். அந்த க்ஷணமே ஏதாவது செய்துவிட வேண்டுமென்று துடித்தது. என்ன செய்வது என்று தெரியவில்லை. இதை எப்படி அணுகுவது என்றும் தெரியவில்லை. இப்போது நடந்துகொண்ட முறையும் சரியாயென்று தெரியவில்லை.

ஆனால், எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உண்டு. உடல் பரபரத்தது. என்னதான் பெரியவர், தெரிந்தவர் என்றாலும் வாடகை தரமுடியாது என்று சொல்ல முடியுமா? என்ன நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும். இவர்களை வெளியேற்றுவது ஒன்றே சிறந்த வழி. மீண்டும் போய் நிற்பது பைத்தியக்காரத்தனம்.

புத்தி சுறுசுறுப்பானது. உடனே பன்னீர் ஞாபகம் வந்தான். போலீசில் என்னவோ உயர் பதவி. அண்ணாவின் நண்பன். கடகடவென அவன் எண்ணைத் தேடி தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது,

''என்ன விஷயம்'' என்றான்.

''வீடுதான். காலி பண்ணமாட்டேங்கறாங்க''.

''அப்புறம்''

அப்புறம் என்ன சொல்வது? வீடு காலி செய்யாதது அவ்வளவு பெரிய விஷயமில்லையா?

''ஏதாவது பணம் எதிர்பார்ப்பான். கொடுத்து அனுப்பிச்சுடுங்களேன்...''

''பணம் இல்ல சார் விஷயம்''.

''அப்படின்னா!''

''வேற ஆம்பளைங்களெல்லாம் அங்க நிறைய வந்துட்டுப் போறாங்கன்னு அக்கம்பக்கத்தில பேசறாங்க''.

''ப்ராத்தலா?''

நான் ஆழமாய் ஓர் மௌனம் கைகொண்டேன். மூர்க்கம். வெறி எல்லாம் உள்ளே. முதலில் விரட்ட வேண்டும், என்ன சொல்லியாவது.

அப்புறம் நடந்தவைகளை பார்க்க நான் ஊரில் இல்லை.

எனக்கு வேலை கிடைத்தது. வட மாநிலங்களெங்கும் கிளைகள் உள்ள லாரி டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் விற்பனையாளனானேன். ஊர் ஊராய் சுற்றினேன். பல முகங்கள். பல தண்ணீர். நடுநடுவே பல நிர்வாக மேலதிகாரிகளைச் சமாதானப்படுத்தி ஆர்டர் பிடிக்க மது, மாது, வகையறாக்களை கையாளுவதும் பழக்கமானது. இதெல்லாம் விற்பனை உத்திகள் என்று எங்கள் நிறுவனம் அங்கீகரித்தது.

அப்படி ஒரு ஏற்பாட்டின் போதுதான், செகந்தராபாத்தில் பாயைச் சுருட்டிக் கொண்டு எழுந்த பெண்ணைப் பார்த்தேன். சிரித்தாள். கடமையாய் தன் காரியத்தை நிறைவேற்றினாள். பணம் பெற்றுக்கொண்டாள். வண்டியில் வரும்போது,

''இது உங்கள் கைங்கரியம் தான்'' என்றாள்.

நான் பேச்சற்றுப் போனேன்.

**– *'கரைந்தவர்கள்'* கதைத் தொகுப்பிலிருந்து.**

*வெளியீடு : மதி நிலையம்,* ***சென்னை–14.***

★ ★ ★

**செய்திச் சரம்**

## இணைய வசதிகளைப் பயன்படுத்துவதில் தமிழகம் முந்துகிறது!

வேகமாக வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பத்தில் "இணையம்" அல்லது "இன்டர்நெட்" முக்கிய இடம் வகித்து வருகிறது. இணைய வசதிகளுக்கான இணைப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு நகரத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் நவீன முன்னேற்றத்தைக் கணிக்கின்ற கணினி யுகம் இது. இந்த இணைய வசதிகளைப் பெறுவதில் இந்தியாவில் முன்னணி நகரங்களும், மாநிலங்களும் போட்டிப் போட்டுக் கொண்டு மேல்நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இன்றைய நிலையில், இந்தியாவில் 14 இலட்சத்திற்கும் மேலான இணையத் தொடர்புகள் உள்ளன. இணைய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதில் மராட்டியம் முதலிடத்தையும், டெல்லி இரண்டாவது இடத்தையும், தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. பயன்பாட்டில் உள்ள இணையத் தொடர்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு :

| | |
|---|---|
| மாராட்டிய மாநிலத்தில் | 4,52,948 |
| டெல்லியில் | 2,26,587 |
| தமிழ்நாட்டில் | 2,14,178 |
| கர்நாடகத்தில் | 1,39,370 |
| மேற்கு வங்காளத்தில் | 1,14,221 |
| ஆந்திர மாநிலத்தில் | 63,902 |

இந்தியாவில் உள்ள பெருநகரங்களை எடுத்துக் கொண்டாலும், இணையத் தொடர்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில் சென்னை மாநகரம் மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. பெருநகரங்களில் பயன்பாட்டில் உள்ள இணையத் தொடர்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு :

| | |
|---|---|
| மும்பையில் | 2,81,000 |
| டெல்லியில் | 2,26,587 |
| சென்னையில் | 1,12,000 |
| பெங்களூரில் | 85,000 |
| கல்கத்தாவில் | 80,000 |
| ஹைதராபாத்தில் | 45,000 |

இப்படி இந்தியாவில் உள்ள இணைய வசதிகளைப் பற்றிய புள்ளி விபரங்களை 3.8.2000 அன்று மாநிலங்களவையில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு பிரமோத்மகாஜன் வெளியிட்டுள்ளார். ★

## நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க கண்காணிப்புக்குழு

*தேயிலையின் விலை குறைந்ததைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கு தமிழக அரசு 21.5.2000 அன்று குழு ஒன்றை அமைத்தது. அக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் தேயிலை விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தேயிலையின் விலை படிப்படியாக உயர்ந்து வருகிறது. தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான பணிகளை விரைவுபடுத்துவதற்காக நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு கண்காணிப்புக்குழு ஒன்றை நியமித்து 3.8.2000 அன்று முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இக்குழுவில், குன்னூரில் உள்ள மத்திய தேயிலை வாரியத்தின் மண்டல தலைமை நிர்வாகி, இன்கோசர்வின் மேலாண்மை இயக்குநர், முதலமைச்சரின் செயலகத் துணைச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல், தேயிலையின் தரத்தினைக் கண்காணித்து மேம்படுத்துதல், நியாயமாகவும், சுமுகமாகவும் தேயிலைத்தூள் ஏலம் விடப்படுவதை உறுதி செய்தல் ஆகியவை இக்குழுவினால் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவைகளுடன், தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் அவசர நடவடிக்கைகளையும் இக்குழு மேற்கொள்ளும்.*

*மேலும், இக்கண்காணிப்புக்குழு அடிக்கடி கூடி தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதுடன், தேயிலை விவசாயிகள் எதிர்கொள்ளும் பல்வேறு சிரமங்களையும் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்குரிய ஆலோசனைகளையும் அரசுக்கு உடனுக்குடன் வழங்கும் என்றும் முதல்வர் கலைஞர் இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளார்.* ★

## தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்

இந்த ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு பதிலளித்து முதல்வர் கலைஞர் அவர்கள் 4.4.2000 அன்று சட்டப்பேரவையில் உரையாற்றியபொழுது, "தமிழ்நாட்டிலே உள்ள தென்னை மரங்களை நோயிலிருந்து காலத்தே காப்பாற்றவும், தென்னைச் சாகுபடியை மேம்படுத்தவும், தென்னைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுடைய நலனைக் கருத்தில் கொண்டும், தென்னை சார்ந்த உபதொழில்களை ஊக்குவிக்கவும் 12.3.2000 அன்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் என்னிடம் வைக்கப்பட்ட கோரிக்கையை ஒட்டியும், தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம் உருவாக்கப்படும்" – என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின்படி, தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் தலைமையில், "தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்" எனும் அமைப்பினை உருவாக்கி முதல்வர் கலைஞர் 3.8.2000 அன்று ஆணையிட்டுள்ளார்.

வேளாண்மைத் துறை செயலாளர், நிதித்துறைச் செயலாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், வேளாண்மை விற்பனை இயக்குநர், தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தென்னை ஆராய்ச்சி மைய இயக்குநர், கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தின் பிரதிநிதி ஆகியோரும், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களான கிணத்துக்கடவு திரு.மா.சண்முகம், பட்டுக்கோட்டை திரு.ப.பால சுப்பிரமணியம், திண்டுக்கல் திரு.இரா.மணிமாறன், விவசாயப் பிரதிநிதிகளான திரு.கே.செல்லமுத்து, திரு.கே.எம்.தங்கராஜ், திரு.க.சுந்தரம், தென்னை பதப்படுத்தும் பிரதிநிதி திரு.சின்னப்பன் ஆகியோர் இக்குழுமத்தின் உறுப்பினர்களாகச் செயல்படுவர் என்றும், வேளாண்மைத்துறை இயக்குநர் இக்குழுமத்தின் உறுப்பினர் செயலராகப் பணிபுரிவார் என்றும் முதல்வர் இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளார்.

எக்டேர் ஒன்றுக்கு 11,620 தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டு, தேங்காய் உற்பத்தித் திறனில் தமிழகம், இந்தியாவிலேயே முதலிடத்தை வகிக்கிறது. இந்நிலையில், தேங்காய் உற்பத்தியை மேலும் அதிகரித்தல், தேங்காய் மற்றும் தென்னை உபபொருட்களைப் பதப்படுத்துதல், சேமிப்பு வசதிகள், விற்பனை யுக்திகள், பொருட்களைப் பிரித்தல், விலைக் கொள்கையை உருவாக்குதல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையை வகுத்தல், உயிரியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைத்தல், தொழிற்சாலை உள்ளமைப்புகளை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப மையங்களை அமைத்தல், கடன் வசதி அளித்தல் போன்றவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இக்குழுமம் செயல்படும்.

★ ★ ★

## அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணை

தமிழக சட்டப்பேரவையில் 2000–2001–ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையை 24.3.2000 அன்று அளித்து உரையாற்றுகையில், தென்மாவட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவிடும்வண்ணம், "திருநெல்வேலி மாவட்டம் அபிஷேகப்பட்டியில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையை மேம்படுத்தி, தென்மாவட்டங்களில் கால்நடைகளின் தரத்தை உயர்த்த ஆவன செய்யப்படும். குறிப்பாக, தென் மாவட்டங்களுக்கு ஆடுகள் வளர்ப்பு மையம் ஒன்றை ஏற்படுத்துதல், அதிகப் பயன் தரும் கோழி இனங்களைக் கோழி வளர்ப்போர்க்கு அளிக்க மையம் ஒன்றை ஏற்படுத்துதல், நீலநாக்கு நோய் போன்ற கால்நடை நோய்களைச் சமாளிக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில் வட்டார ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு இந்த கால்நடைப் பண்ணையில் முக்கியத்துவம் அளிக்கப்படும்" என்று முதல்வர் கலைஞர் அறிவித்தார். அந்த அறிவிப்பின்படி, நான்கு புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் :

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் சௌக்லா இன செம்மறி ஆடுகளை வளர்ப்பதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலை உள்ளது. சௌக்லா இன செம்மறி ஆடுகளின் உரோமம் கம்பளி, தரை விரிப்புகள் முதலியவற்றைத் தயாரிக்கவும், இவ்வகை ஆட்டின் ஆண் இனம் நாட்டுச் செம்மறி ஆடுகளின் தரத்தை உயர்த்தவும் பயன்படும். எனவே, தென் மாவட்ட மக்கள் சௌக்லா இன செம்மறி ஆடுகளை இந்தப் பகுதிகளில் வளர்த்து பொருளாதார மேம்பாடு காண முடியும் என்பதால், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையில், 13 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில், 400 சௌக்லா இன் செம்மறி ஆடுகளையும், 40 கிடாக்களையும் வளர்த்து, அவற்றின் மூலம் கிடைக்கும் 6 மாத வயதுடைய கிடா குட்டிகளை ஆண்டுக்கு 660 ஏழை விவசாயிகளுக்கு, மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் வழங்கிடவும்,

அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் மாதம் ஒன்றுக்கு 25 விவசாயிகள் வீதம் ஆண்டுக்கு 300 விவசாயிகளுக்கு 22 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் விஞ்ஞான முறையில் கால்நடைகளின் இனப்பெருக்கம், தீவனம், பராமரிப்பு போன்றவைகளில் தென்மாவட்டங்களில் உள்ள கிராமப்புற விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்தை 5 ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தவும்,

23 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில், அதிக அளவில் பயன்தரும் கிரிராஜா இனத்தைச் சேர்ந்த, ஒருநாள் வயதுடைய 2000 கோழிக் குஞ்சுகளை மாதந்தோறும் வாங்கி, அபிஷேகப்பட்டி பண்ணையில் உள்ள கோழிக் கொட்டகைகளில் பனிரெண்டு வாரகாலம் வரை வளர்த்து, மாதந்தோறும் 200 ஏழை விவசாயிகளுக்கு தலா 10 குஞ்சுகள் வீதம் மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் வழங்கிடவும்,

தென்மாவட்டங்களில் ஆடுகளை அதிக அளவில் தாக்கி, அங்கு வாழும் கிராம மக்களுக்கு மிகுந்த பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் நீலநாக்கு நோயிலிருந்து ஆடுகளை காப்பதற்கு உதவும் வகையில், நீலநாக்கு நோயின் தன்மை, அந்நோயைப் பரப்பும் நச்சுயிரி, அந்நோய் குறித்த கண்காணிப்பு, கொசு ஒழிக்கும் முறைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 16 இலட்ச ரூபாய் செலவில் அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் மண்டல ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவுவதற்கும்,

ஆக மொத்தம் 75 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் நான்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். ★

குறைந்த செலவில் (Low Budget) தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடும் தயாரிப்பாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் அத்தகைய திரைப்படங்களைத் தேர்வு செய்து அரசு மானியம் வழங்கும் திட்டம் முதல்வர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு 1989–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற 1996–ஆம் ஆண்டு 28 படங்கள் தேர்வுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு மானியமாக ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1997–ஆம் ஆண்டு 11 படங்கள் தேர்வு செய்யப்பட்டு 55 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

1998–ஆம் ஆண்டுக்கான குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளிவந்துள்ள திரைப்படங்களில் தரமான திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் பொருட்டு, 1.1.1998 முதல் 31.12.1998 வரை வெளிவந்துள்ள தமிழ்த் திரைப்படங்களில் தரமான படத்தைத் தேர்வு செய்து அரசுக்கு பரிந்துரைக்க நீதியரசர் கே.எஸ்.பக்தவச்சலம் அவர்கள் தலைமையில் எட்டு உறுப்பினர்கள் கொண்ட தேர்வுக்குழுவை அரசு 21.6.1999 அன்று அமைத்தது.

1998–ஆம் ஆண்டில் மொத்தம் 70 தமிழ் திரைப்படங்கள் வெளிவந்தன. மானியத்தொகை கோரி வரப்பெற்ற 23 விண்ணப்பங்களும் பதிவு செய்யப்பட்டு, அரசு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற 22 திரைப்படங்கள் மட்டும் தேர்வுக் குழுவினரால் பார்வையிடப்பட்டு, அவற்றில் 15 திரைப்படங்களுக்கு மானியம் வழங்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேர்வுக்குழுவினரின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள், அக்குழுவினரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள படங்களான,

1. சொர்ணமுகி
2. கிழக்கும் மேற்கும்
3. சேரன் சோழன் பாண்டியன்
4. குருபார்வை
5. பகவத்சிங்
6. கும்பகோணம் கோபாலு
7. கோல்மால்
8. கவலைப்படாதே சகோதரா

**1998–ஆம் ஆண்டில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியான 15 திரைப்படங்களுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் அரசு மானியம்**

9. வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு
10. உயிரோடு உயிராக
11. பொன்மானைத் தேடி
12. இனி எல்லாம் சுகமே
13. கலர் கனவுகள்
14. சந்தோஷம்
15. நிலாவே வா

ஆகிய பதினைந்து படங்களுக்கு தலா 5 இலட்ச ரூபாய் வீதம் 75 இலட்சம் ரூபாயினை வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

10.8.2000 அன்று சென்னை – வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில், திரைப்படங்களுக்கு அரசு வழங்கிடும் இந்த மானியத் தொகை வழங்கப்பட்டது.

★ ★ ★

## 960 தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டடங்கள்

தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் போதுமான கட்டட வசதிகள் இல்லாத நிலையில் செயல்பட்டுவரும் 960 தொடக்கப் பள்ளிகளுக்கு தாழ்வாரத்துடனும், கழிப்பறைகளுடனும் கூடிய புதிய கட்டடங்களை 30 கோடியே 29 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு அனுமதி வழங்கி முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

★ ★ ★

# ஆலந்தூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை

ஆலந்தூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 19.5 சதுர கிலோ மீட்டர் ஆகும். நகரத்தின் தற்போதைய மக்கள் தொகை 1,65,000 ஆகும். நகராட்சி பகுதியிலுள்ள 135 கி.மீ. நீளமுள்ள 755 சாலைகள் மற்றும் தெருக்களிலிருந்து தினசரி 65 மெ.டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள 287 துப்புரவு பணியாளர்களும், 15 வாகனங்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

நகராட்சிக்குட்பட்ட பத்து குடியிருப்பு பகுதிகளில் 'பை மூலம் குப்பை சேகரிக்கும் முறை' ( Carry bag system) அறிமுகப்படுத்தப்பட்டு குடியிருப்பாளர்களது வீட்டிற்கே சென்று குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் வார்டு 14, 20 மற்றும் 21–இல் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மாட்டு வண்டிகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு 25 மூன்று சக்கர சைக்கிள் (TRI CYCLES) மூலமாக குடிசைப் பகுதிகளிலும், குறுகிய தெருக்கள் மற்றும் சந்துகளிலிருந்தும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் விமான போக்குவரத்துத்துறையினரது வேண்டுகோளுக்கிணங்க நகராட்சி எல்லைக்குள் குப்பைகளை சேகரிக்க இயலாத நிலையில் சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ள பள்ளிக்கரணையில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் குப்பையை உரமாக்கும் பணியினை மேற்கொள்ள உரத்திடலுக்காக (Compost Yard) இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சி வாகனங்கள் மூலமாக கொண்டு வரப்பட்டு சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி உரத்திடலில் கட்டி, இயக்கி, ஒப்படைத்தல் அடிப்படையில் (BOT Basis) குப்பைகளிடமிருந்து உரம் உற்பத்தி செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மெஸர்ஸ்.ஹீலிங் மெடிகேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை–4 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி உரத்திடலின் முன்புறம் நகராட்சியின் சார்பில் சுற்றுச் சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் மீதமுள்ள மூன்று பக்கங்களிலும் மேற்படி நிறுவனமே சுற்றுச் சுவர் கட்டித்தர முன்வந்துள்ளது. உரத்திடலுக்கு கொண்டு வரப்படும் குப்பைகளின் அளவுகளைக் கணக்கீடு செய்ய கணினி எந்திரத்துடன் கூடிய எடை மேடை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆலந்தூர் நகரத்தையொட்டியுள்ள உள்ளகரம், புழுதிவாக்கம் மற்றும் பள்ளிக்கரணை பேரூராட்சிகளிலிருந்தும், மடிப்பாக்கம் பஞ்சாயத்திலிருந்தும், பல்லவபுரம் நகராட்சி, பரங்கிமலை கண்டோன்மென்ட் போர்டு ஆகிய உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் குப்பைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மேற்படி உரத்திடல் 15 வருட காலத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியினால் வழங்கப்படும் குப்பைகளுக்கு ஒரு மெ.டன்னுக்கு ரூ.3.50 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.84,000 வருவாய் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி உரத்திடலில் பணிகளைத் துவக்குவதற்கான வேலை உத்தரவு 22.8.2000 அன்று மெஸர்ஸ்.ஹீலிங் மெடிகேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை–4 நிறுவனத்திற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி.மணி அவர்களால் வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் 1.9.2000 அன்று கட்டுமானப் பணிகளைத்துவக்கி 1.3.2001 முதல் உர உற்பத்தியைத் (Organic manure) துவங்க உள்ளது. ★




★ **அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்** கீழ் 1997–98 முதல் 1999–2000 வரை, 19 ஊராட்சிகளில் ரூ.9.78 கோடி செலவில் 1,192 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 6 ஊராட்சிகளில் ரூ.2.72 கோடி மதிப்பீட்டில் 210 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ **பெரியார் நினைவு சமத்துவபுரம்** திருமருகல் ஊராட்சி ஒன்றியம் பனங்குடி, நாகை ஒன்றியம் பாப்பாக்கோயில், செம்பனார் கோயில் ஒன்றியம் காட்டுச்சேரி ஆகிய ஊராட்சிகளில் ரூ.3 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

**திருக்குவளையில்** சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் சமத்துவபுரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

★ **நமக்கு நாமே** திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.4.33 கோடி மதிப்பீட்டில் 288 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நாகை கடற்கரை அபிவிருத்தி சாலை மேம்பாடு மற்றும் சிறுவர் பூங்கா அமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ரூ.84.94 இலட்சம் செலவில் 47 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ **வருமுன் காப்போம்** திட்டத்தின் கீழ் இதுவரை 109 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 1,17,150 நபர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இலவச மருத்துவ பரிசோதனை பெற்றவர்களில் 41,760 பேர் ஆண்களும், 46,935 பேர் பெண்களும், 27,825 பேர் குழந்தைகளும் ஆவார்கள்.

மருத்துவ பரிசோதனை வசதி பெற்றவர்களில் 9,107 பேர், மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டு, தொடர் சிகிச்சை பெறுகின்றனர்.



# நாகப்பட்டினம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

★ **வாழ்வொளித் திட்டத்தின் கீழ்** 1,140 பள்ளிகளில் படிக்கும் 1,95,455 மாணவ–மாணவிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு பயன்பெற்றுள்ளார்கள்.

★ **சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம்** திட்டத்தின்கீழ் 73 முகாம்கள் நடத்தப்பட்டு, 1,35,000 கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கப் பட்டுள்ளது.



★ நாகப்பட்டினத்தில் ரூ.16.95 இலட்சம் செலவில் **உழவர் சந்தை** அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.27,66,792 மதிப்புள்ள 3,56,356 கிலோ கிராம் காய்கறிகள் விற்பனையாகியுள்ளது. 3,639 விவசாயிகளும், 1,40,200 நுகர்வோர்களும் பயன்பெற்றுள்ளனர்.

★ **மேனிலைப்பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சி வகுப்பு** தொடங்கும் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 23 பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. நடப்பாண்டில் மேலும் ஐந்து மேனிலைப் பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.



★ நாகை மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டு காலத்தில் 13,973 **இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்** வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 6,050 பேருக்கும் – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையின் மூலம் 1,264 பேருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் வருவாய்த் துறையின் மூலம் 3,000 பேருக்கும் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் 2,000 பேருக்கும் – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் 950 பேருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவுள்ளன.

★ **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்** கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 7,190 பெண்களின் திருமணத்திற்காக ரூ.7.19 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ **அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புமண நிதி உதவித் திட்டத்தின்** கீழ் 125 தம்பதிகளுக்கு ரூ.16,25,000 வழங்கப்பட்டுள்ளது.




★ மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின் கீழ் 4,000 மகளிருக்கு ரூ.25.66 இலட்சம் கடன் வழங்கப் பட்டுள்ளது.

★ இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ரூ.27.63 கோடி செலவில் 8,844 தொகுப்பு வீடுகள் கட்டப் பட்டுள்ளன. நடப்பாண்டில் 1,275 தொகுப்பு வீடுகள் கட்டும் பணிகள் விரைந்து செயலாக்கம் பெறுகின்றன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், தாட்கோ மூலம் 19,304 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.3.20 கோடி நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

★ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம் மற்றும் தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 8,200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.23.63 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டு காலத்தில் 20,905 பேருக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு பயன் பெற்றுள்ளார்கள்.

★ கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டு காலத்தில் ரூ.38.85 கோடி செலவில் 723 குடியிருப்புகளுக்குக் குடிநீர்வசதி செய்து தரப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.10 கோடி செலவில் 192 கிராமப்புற குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

★ மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் ரூ.7.62 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 1,06,451 மீனவர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

★ வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.27.63 கோடி செலவில் 1,656 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ரூ.3.14 கோடி ஒதுக்கீட்டில் 114 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.25.94 கோடி செலவில் 6,010 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ நாகை மாவட்டத்தில், திருக்குவளை, கீழ்வேலூர் ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக்கொண்டு 2 புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.26.51 கோடி செலவில் 639.79 கி.மீ. தூரத்திற்குக் கிராமப்புறச் சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

★ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.6.49 கோடி செலவில் 324 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

★ நாகை மாவட்டத்தில் 134 இடங்களில் **விளையாட்டு மற்றும் புத்துணர்வு மையங்கள்** தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் **விளையாட்டு அரங்கம்** உருவாக்கப் பட்டுள்ளது.

★ **பொதுப்பணித் துறையின்** மூலம் ரூ.22.75 கோடி செலவில் 196 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ **மனைவரி, தலவரி ரத்து**

1996ஆம் ஆண்டு நான்காவது முறையாக முதல்வர் **கலைஞர்** அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மனைவரி, தலவரி ஆகியவற்றை ரத்து செய்து பிறப்பித்த முதல் அரசாணையின் மூலம் நாகை மாவட்டத்தில் 2,37,835 பேர் பயன் பெற்றுள்ளார்கள். இவர்களில் ஆதிதிராவிடர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் 90,793 பேர் ஆவார்கள் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

1997ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் 1407–ஆம் பசலிக்கான நிலவரி, கூடுதல் நிலவரி, தலவரி, தலமேல்வரி ஆகியவற்றை ரத்து செய்து முதல்வர் **கலைஞர்** அவர்கள் ஆணை பிறப்பித்ததின் விளைவாக நாகை மாவட்டத்தில் 1,88,037 விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள். இந்த வகையில் தள்ளுபடி செய்யப்பட்ட நிலவரியின் மொத்தத் தொகை ரூ.2 கோடியே 18 இலட்சம் ஆகும்.

★ நாகை மாவட்டத்தில் கடந்த நான்காண்டு காலத்தில் ரூ.29.19 கோடி செலவில் 3,316 கி.மீ. தூரத்திற்கு, ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் தூர் எடுக்கும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ **நெடுஞ்சாலைத்துறையின்** மூலம் கடந்த நான்காண்டுகளில் ரூ.35.04 கோடி செலவில் 636.72 கி.மீ. தூரத்திற்குச் சாலை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன. மேலும் ரூ.2.39 கோடி செலவில் 6 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ.4.61 கோடி செலவில் 7 பாலங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.



ரூ.6.58 கோடி செலவில் 168.17 கி.மீ. தூரத்திற்குச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெறுகின்றன.

**முதல்வராகக் கலைஞர்,**

**முதல் இடத்தில் தமிழகம்**

**என்ற நிலையில், வளர்ச்சிப்பாதையில் நடைபோடுகிறது நாகப்பட்டினம் மாவட்டம்.**

★ ★ ★

# தன்னிறைவைப் பெற்ற பச்சைமலைப் பகுதி

திருச்சிராப்பள்ளி மாவட்டம் வடகோடியில் உப்பிலியபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் மலைவாழ் மக்கள் 6,000 பேர் வாழ்ந்து வரும் அடர்ந்த காடுகள் அடங்கிய பச்சைமலை எனும் மலைக்கிராமங்கள் அமைந்துள்ளது. இங்கு 1996–ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் உத்தரவின்படி, மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட பல்வேறு வளர்ச்சிப்பணிகள் நிறைவேற்றப்பட்டு இன்றைய தினம், பச்சைமலைப்பகுதி கிராமங்கள் தன்னிறைவு பெற்ற கிராமங்களாகத் திகழ்கின்றன.

பச்சைமலைப் பகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வண்ணாடு ஊராட்சி, கோம்பை ஊராட்சி என இரண்டு ஊராட்சிகளும், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தென்புறநாடு ஊராட்சியும் என மொத்தம் மூன்று ஊராட்சிகள் அமைந்துள்ளது. இந்த மூன்று ஊராட்சிகளிலும் கடந்த 4 ஆண்டுகளில் சாலைகள், கழிப்பறை வசதிகள், தொகுப்பு வீடுகள், குடிநீர் வசதிகள், தெருவிளக்கு வசதிகள் என மொத்தம் 170 பணிகள் ரூ.79.38 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2000–2001–ஆம் ஆண்டில் தார்சாலைகள், கான்கிரீட் சாலைகள், பள்ளி கழிப்பறைகள் என மொத்தம் 11 பணிகள் ரூ.7.63 இலட்சம் மதிப்பீட்டிலும், தொகுப்பு வீடுகள், கான்கிரீட் சாலைகள், சமுதாயக் கட்டடங்கள் என மொத்தம் 30 பணிகள் 10 இலட்சம் மதிப்பீட்டிலும் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**குடிநீர் வசதி**

குடிநீருக்காக பல மைல் தூரம் மலைப்பாதையில் நடந்து சென்று கிணற்றுத் தண்ணீரை தூக்கிக் கொண்டு வரும் நிலையை அகற்றும் வகையில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு.வை.மூர்த்தி, இ.ஆ.ப., அவர்களும், உப்பிலியபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு டி.கருப்புசாமி அவர்களும், தமிழக முதல்வர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தவுடன், ரூ.2.30 கோடி நிதி ஒதுக்கீடு அளித்து, அனைத்து கிராமங்களும் பயன்பெற்றிடும் வகையில் 35 இடங்களில் மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் அமைத்து அதிலிருந்து குழாய்கள் மூலம் மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால், மக்கள் நடந்து சென்று தண்ணீர் தூக்கி சிரமப்படும் நிலைமாறி, தன் குடியிருப்பிற்கே வரும் தண்ணீரைப் பெற்று மனமகிழ்ந்து செல்கின்றனர்.

**நியாயவிலைக் கடை**

அதுமட்டுமல்லாமல், பல மைல் தூரம் நடந்து சென்று நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் வாங்கும் நிலையை மாற்றி 200 பேர் கொண்ட மக்களுக்கு ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை என



மகளிரே நடத்திடும் பல்வேறு பகுதிநேர நியாயவிலைக்கடை ஆங்காங்கே திறந்து, அனைத்து அத்தியாவசியப் பொருள்களையும், மக்கள் மனநிறைவுடன் வாங்கிச் செல்கின்றனர். மேலும், மலைப்பகுதியில் வசிக்கும் அனைவருக்கும், அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் உள்பட அனைத்துப் பொருள்களும் குறைவின்றி நிறைவாக மாவட்ட நிர்வாகம் மூலம் வழங்கப்பட்டு வருவதால், மக்களிடையே ஒரு மனநிறைவைக் காண முடிகிறது. இதுகுறித்து பூனாச்சி கிராமத்தில் மகளிர் குழுவை அமைத்து அதன் தலைவியாகவுள்ள கண்ணம்மா என்பவர் கூறுகையில் டாக்டர் கலைஞர் தலைமையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு எங்களுக்கு உணவுப் பொருள்கள் ஒழுங்காக வழங்கப் படுகின்றன. பள்ளிகள் ஒழுங்காக நடை பெறுகின்றன. தார்ச்சாலைகள் போடப் பட்டு போக்குவரத்து வசதிகள் செய்யப் பட்டுள்ளன. குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைத்து வருகிறது. மின்சாரம் இல்லாத பல்வேறு கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்துள்ளது என உவகை பொங்கக் கூறினார்.

**மின் வசதி**

இங்கு அமைந்துள்ள 16 கிராமங்களில் இதுவரை மின்சாரமே இல்லாமல் இருட்டி லேயே வாழ்க்கையை நகர்த்தி வந்த கிராம மக்களின், இருள் நீக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ.1.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டே இராமநாதபுரம், வல்லம், நெசக்குளம், புத்தூர், புதூர் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது. புதிதாக சிலையூருக்கு மின்சார வசதி அமைக்கப்பட்டு, இங்கு வாழ்ந்து வரும் முதியவர் வடமலை என்பவர் தனக்கு எண்பது வயதாகிறது என்றும், இனி வரும் சந்ததிகள் வாழ்க்கை விரைவில் முன்னேறிவிடும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் நாகூர், பாளையம், குண்டூர், சின்னப்பழமலை, பெரியப்பழமலை, குறிச்சி, தேன்பாடி, தாலார், வாழையூர் மற்றும் செங்காத்தூர் ஆகிய எட்டு கிராமங்களுக்கு மின்சார வசதி வழங்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கிடும் வகையில் மிகத் துரிதமாக நடைபெற்று வருகிறது.



**போக்குவரத்து வசதி**

போக்குவரத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக துறையூரிலிருந்து 3 பேருந்துகளும், சேலம் ஆத்தூரிலிருந்து ஒரு பேருந்தும் என நான்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் இங்குள்ள கிராமங்களுக்கு மலைப்பாதையில் சென்றிட புதிதாக சிற்றுந்து (மினிபஸ்) ஒன்றும் இயக்கப்பட்டு, கிராம மக்களிடையே ஒரு ஒருங்கிணைப்பையும், வளர்ச்சியையும் ஏற்படுத்தி யுள்ளது.

பச்சைமலைப் பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு அதிகமாக விளைகிறது. கிலோ ஒன்றுக்கு ரூ.1.20 என விற்பனை செய்த இதன் விலையை உயர்த்தி இன்றைய தினம் ரூ.2.20–க்கு விற்பனை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் மலைவாழ் உழவர்களுக்கு அதிக இலாபம் கிடைப்பதாகவும், இதனை சேலம் மாவட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் விற்பனை செய்திடும் வகையில் எடுத்துச் செல்ல சாலை வசதிகள் மேம்பாடு செய்துள்ளதால், லாரி போக்குவரத்திற்கு எளிதாக உள்ளதாகவும், இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். மேலும் இங்கு பலாப்பழம், முட்டைகோஸ், அன்னாசிப்பழம், சீரகச்சம்பா நெல், கொய்யா, தேங்காய் முதலியன நன்றாக விளைந்து மக்களுக்கு நல்ல இலாபம் தருகிறது. இங்கு தோட்டப்பயிர்களை விளைவித்து அதனை விற்பனை செய்திடும் வகையில் விரைவில் துறையூரில் உழவர் சந்தை அமைக்கப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**கல்வி**

கல்வியைப் பொறுத்தவரையில், டாப்செங்காட்டுப் பட்டியில் மாணவர்கள் பயில கணினி வசதியுடன் ஒரு மேல்நிலைப்பள்ளியும், செம்புளிச்சாம்பட்டியில் ஒரு உயர்நிலைப்பள்ளியும், புத்தூரில் ஒரு நடுநிலைப் பள்ளியும் அமைந்துள்ளது. நாகூரில் அமைந்துள்ள உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளியை 10.8.2000 நாளன்று நடுநிலைப்பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டதை முறைப்படி துவக்கி வைத்தார். இது தவிர 25 உண்டி/உறைவிட ஆரம்பப்பள்ளிகள்



நடைபெற்று வருகின்றன. இங்கெல்லாம் இலவச சீருடைகள், இலவச புத்தகங்கள் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதி அட்டையும் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மாணவர்களுக்கும் சாதிச்சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது. இதுநாள்வரை டாப்செங்காட்டுப் பட்டி மேல்நிலைப்பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள், உப்பிலியபுரம், துறையூர் ஆகிய இடங்களில் அரசுத் தேர்வு எழுதி வருவதை மாற்றி இந்த ஆண்டு முதல், டாப்செங்காட்டுப்பட்டி கிராமத்திலேயே அரசுத் தேர்வு எழுதிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அங்குள்ள 56 கிராமங்களில் வசிப்போரில் 50 கிராமங்களில் வசிக்கும் 5500 பேருக்கு சாதிச்சான்றிதழ் வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 6 கிராமங்களில் வசிக்கும் 500 பேருக்கும் செப்டம்பர் மாத இறுதிக்குள் சாதிச்சான்றிதழ் வழங்கப்பட்டுவிடும்.

மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் நிறைவேறும்வரை ஓயமாட்டோம் என்கிற தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் கொள்கைப்படி, இந்த மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது என் சொன்னால் அது மிகையாகாது.

**– துரை. தாமரைச்செல்வம்**
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருச்சிராப்பள்ளி மாவட்டம்.*



# ஈரோடு மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட மாவட்ட ஆட்சியர் திரு ச.கருத்தையா பாண்டியன்,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் செய்தியாளர்கள் குழு ஈரோடு, பவானி, கோபி ஆகிய ஒன்றியங்களுக்கு பயணம் மேற்கொண்டது. முதலில் ஈரோடு ஒன்றியத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமமான வில்லரசம்பட்டிக்குச் சென்றபோது, இந்த ஊராட்சியில் தார்சாலைகள் அமைத்தல், நியாயவிலைக் கடைகள் கட்டுதல், தடுப்புச் சுவர் கட்டுதல், கான்கிரீட் சாலை அமைத்தல், சிறுபாலம் அமைத்தல், வடிகால் அமைத்தல் போன்ற 20 பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பிலும், 14 குக்கிராமங்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 14 பணிகள் ரூ.54.19 இலட்சம் மதிப்பிலும் நடைபெற்றுள்ளது. மேலும் இந்த ஊராட்சியில் 24 கைப்பம்புகள், 7 விசைப்பம்புகள், 7 திறந்தவெளி கிணறுகள், 7 தரைமட்டத் தொட்டிகள், 3 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்குச் சீரான முறையில் குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளைப் பார்வையிட்ட செய்தியாளர்கள் அப்பகுதி பொதுமக்களான திருமதி.சரஸ்வதி, திருமதி.பழனியம்மாள், திரு.சந்திரன் ஆகியோரைச் சந்தித்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றிக் கேட்டபோது, "இந்தப் பகுதியில் எவ்வித அடிப்படை வசதியும் இன்றி நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். ஆனால் இந்தத் திட்டம் கொண்டு வந்ததின் மூலம் குடிநீர்வசதி, சாலைவசதி, சாக்கடை போன்ற அடிப்படை வசதிகள் எல்லாம் எங்களுக்கு தற்போது கிடைத்துள்ளது. இந்தத் திட்டம் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றனர்.

"அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 1997–98–ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 11 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டது. ரூ.1,197.36 இலட்சம் செலவில் 1,248 பணிகள் செய்து முடிக்கப்பட்டது. 1998–99–ஆம் ஆண்டில் 10 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.1327.82 இலட்சம் செலவில் 1,168 பணிகள் முடிக்கப்பட்டது. 1999–2000–ஆம் ஆண்டில் 11 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.825.48 இலட்சத்தில் 950 பணிகள் முடியும் நிலையில் உள்ளன" என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் செயல்படும் கருவல்பாறைவலசு கிராமத்திற்குச் சென்ற போது, 11 மகளிர்களைக் கொண்டு இயங்கும் அமுதம் சுயஉதவிக் குழுவைச் செய்தியாளர்கள் பார்வையிட்டனர். குழுவில் உள்ள அனைவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள விவசாயக் கூலிகள். ஒவ்வொரு மாதமும் தலா ரூ.250 வீதம் அனைவரும் சுயமாகச் சேமித்து வருகின்றனர். மாதம் இரண்டு முறை குழுக்கூட்டம் நடத்தி வருகின்றனர். தற்போது குழு சேமிப்புக் கணக்கில் ரூ.14,787 உள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் சுழல் நிதியாக ரூ.10 ஆயிரமும், வங்கி மூலம் ரூ.15 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவி திருமதி இந்திராணி செய்தியாளர்களிடம் பேசும்பொழுது, இக்குழுவில் உள்ள நாங்கள் 11 பேரும் தையல் பயிற்சி பெற்றுள்ளோம். தையல் எந்திரமும் துணிகளும் வாங்கி ஆயத்த ஆடைகள் தயார் செய்து ஈரோட்டில் விற்பனை செய்திட உள்ளோம். இதனால் எங்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.2,000 முதல் ரூ.3,000 வரை கூடுதல் வருமானம் கிடைக்கும். குடும்ப செலவு போக மாதம் ரூ.1,000 வரை சேமிக்க வாய்ப்புள்ளது என்று தெரிவித்தனர்.

### விதைச் சுத்திகரிப்பு நிலையம், பவானி

தமிழக வேளாண் பெருங்குடி மக்களுக்கு தரமான விதைகளை விநியோகிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்விதைச் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, அரசு விதைப் பண்ணைகளிலிருந்தும், விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளிலிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டு



"பெட்கஸ் இயந்திரம்" மூலம் தரமான விதைகளை மட்டுமே தனியே பிரித்தெடுத்து, அதில் விதைச்சான்று அலுவலரால் மாதிரி எடுக்கப்பட்டு, கோவையில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, விதைகளின் தரமும், முளைப்புத் திறனும் நன்கு பரிசோதிக்கப்பட்டு, தரமான விதைகள் விதைப் பரிசோதனை முடிவில் தேறும் பட்சத்தில் சான்றளிக்கப்பட்ட பின்பு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதன்மூலம் விவசாயிகளுக்கு சுத்தமானதாகவும், கலப்பில்லாமலும், நன்கு முளைப்பு திறன் உள்ளதாகவும், சரியான ஈரப்பதம் உள்ளதாகவும், தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்படும் சான்று அட்டைகள் பொருத்தப்பட்டு, சான்று விதைகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் வேளாண் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பாக உள்ளது.

**நெடுஞ்சாலை**

கடந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் நெடுஞ்சாலைகள் துறையின் சார்பில் எந்திரத்தின் மூலம் 30 கி.மீ தார் சாலைகள் அமைக்க ரூ.412 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, 12 கி.மீ. சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.214 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் கோபியிலிருந்து சித்தோடு வரை 22 கி.மீ. சாலைகள் ரூ.318 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது. 1999–2000–ஆம் ஆண்டில் சித்தோட்டிலிருந்து ஈரோடு பேருந்து நிலையம் வரை மற்றும் ஈரோட்டிலிருந்து அரச்சலூர் வரை 52 கி.மீ. தார்சாலைகள் அமைக்க ரூ.840 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 22 கி.மீ. தார்சாலைகள் அமைக்கும் பணி முடிவு பெற்றுள்ளது. இதுவரை இதற்காக ரூ.390 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் அடுத்த ஆண்டில் அரச்சலூரிலிருந்து தாராபுரம் வரையிலும், ஈரோட்டிலிருந்து கரூர் செல்லும் சாலை நொய்யல் வரையிலும் ஆக 77 கி.மீ. தார்சாலைகள் அமைக்க ரூ.1432 இலட்சம் நிதி கோரப்பட்டுள்ளது.

நபார்டு திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு மலையம்பாளையம், தாமரைப்பாளையம் சாலை அமைக்கப்பட்டும், ஈரோடு, சென்னிமலை ரோடு, கனகபுரம் வரை உள்ள சாலை அமைக்கவும், ஊதியூர் தாசநாயக்கன்பட்டி சாலை அகலப்படுத்தவும் ஆக 22.8 கி.மீ. தார்சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ.182 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் 127 கி.மீ. பிற மாவட்ட சாலைகள் பராமரிக்கவும், செப்பனிடவும், ஈரோடு கோட்டத்திற்கு ரூ.461 இலட்சமும், கோபி கோட்டத்திற்கு ரூ.300 இலட்சமும் ஆக ரூ.761 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் தூர்வாரும் பணி**

கடந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் உள்ள கால்வாய்கள் தூர்வாரி சீரமைக்க ரூ.10 கோடி நிதி பெறப்பட்டு, அதில் கீழ்பவானி கால்வாய் தூர்வாரி சீரமைக்கப்பட்டது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாய் தூர்வாரி சீரமைக்க ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இந்த ஆண்டும் ரூ.10 கோடி பெறப்பட்டு கால்வாய் தூர்வாரி சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.



மேலும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள கீழ்பவானி பாசன கால்வாய், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாய், காளிங்கராயன் மற்றும் இதர கால்வாய்கள் நிரந்தரமாக சீரமைத்து நவீனப்படுத்த ரூ.800 கோடி அரசிடம் நிதி ஒதுக்கீடு கோரப் பட்டுள்ளது. இந்த ஆண்டு கீழ்பவானி பாசன கால்வாயில் 23,000 ஏக்கர் கூடுதலாக பாசன வசதி பெறுவதற்கு அரசு உத்திர விட்டுள்ளது.

தடப்பள்ளியில் கால்வாய் தூர்வாரும் பணியை பார்வையிட செய்தியாளர்கள் சென்றிருந்தபோது, கால்வாய் பாசன விவசாயி திரு.மு.ரங்கசாமி செய்தியாளரிடம் தெரிவித்ததாவது :

*"40 ஆண்டுகளுக்கு முன்பு பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி அரக்கன்கோட்டை பகுதி விவசாயிகளுக்காக இந்த கால்வாய் அமைக்கப்பட்டது. சுயநலம் கருதி சில விவசாயிகள் கால்வாய் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து முறைகேடாக பயன்படுத்தினர். மண்மூடி தூர்ந்து போன கால்வாயைத் தூர்வாரி செப்பனிட 15 ஆண்டுகளாக கோரிக்கை வைத்தோம். முதல்வர் கலைஞர் எங்களின் கோரிக்கையை ஏற்று ஆக்கிரமிக்கப்பட்ட கால்வாய் பகுதிகளை மீட்டு, கால்வாயை தூர்வாரி, கரைகளை அகலப்படுத்தி வருகிறார்கள். இதனால் எங்கள் நிலப்பகுதிக்கு நீர்வரத்து தங்குதடையின்றி கிடைக்கும். மேலும் கூடுதல் நிலங்கள் பாசனவசதி பெறும். இந்த சிறப்பான திட்டத்தை எங்கள் பகுதிக்கு செயல்படுத்திய விவசாயிகளின் தோழன் முதல்வர் கலைஞருக்கு என்றும் நன்றி கூற*

*கடமைப்பட்டுள்ளோம். இதை சிறப்பாக நிறைவேற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவிக்கிறோம்"* என்று கூறினார்.

**குளம் பராமரிப்பு**

ஈரோடு ஊராட்சி ஒன்றியம் பேரோடு அருகிலுள்ள துயிர்பாளையத்தில் உள்ள குளம் ரூ.5 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்றுள்ளது. இந்த குளத்தின் மேற்குபுறத்தில் புதிதாக கரைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இருந்த கரைகள் பலப்படுத்தப்பட்டு, பக்க தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. குளம், தூர் வாரப்பட்டு மேலும் ஆழப்படுத்தப்பட்டுள்ளது. அதிகப்படியான நீர் வழிந்தோட கலிங்குச் சுவர் சுமார் 9 மீ. நீளத்திற்குப் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கீழ்பவானி பாசன வாய்க்காலில் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டது போக எஞ்சிய நீரும் மழைநீரும் வீணாவது தடுக்கப்பட்டு, தேக்கி வைக்கப் படுகிறது. இந்த தேக்க நீரினால் கோடைக்காலங்களில் கிணறுகளில் நீர் உயருவதற்கு மிகவும் உதவியாக உள்ளது. இக்குளத்தில் தற்போது மீன்வளர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. இதனால் கிடைக்கும் வருவாய் ஊராட்சியின் மேம்பாட்டுப் பணிகளுக்கும் உதவுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.



**தளவாய்பேட்டை துணை மின்நிலையம்**

ஈரோடு மாவட்டம் பவானி வட்டத்தைச் சேர்ந்த ஜம்பை, தளவாய்பேட்டை, ஒரிச்சேரி, புன்னம், தொட்டிபாளையம், வைரமங்கலம், சின்னபுலியூர், ஆப்பக்கூடல், கூத்தம்பூண்டி ஆகிய கிராமங்களுக்குத் தற்போது சித்தோடு, சூரியம்பாளையம், அந்தியூர், கவுந்தப்பாடி ஆகிய 110/22 கிலோவோல்ட் துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி கிராமங்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட துணை மின்நிலையங்களின் கடைநிலைப் பகுதியில் உள்ளதால், மேற்படி கிராமங்களில் மின் அழுத்தம் குறைவாக இருந்த காரணத்தால், அம்மின்னழுத்தக் குறைபாடுகளைச் சரிசெய்யும் பொருட்டு, மேற்சொன்ன பகுதிகளின் மையப்பகுதியான ஒரிச்சேரி கிராமம், தளவாய்ப்பேட்டை பகுதிகளில் புதியதாக ஒரு 110/22 கிலோவோல்ட் துணை மின்நிலையம் ரூ.431.20 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

தளவாய்பேட்டை புதிய துணை மின்நிலையத்திற்கான நிலம் மற்றும் கட்டுப்பாடு அறை, வாரியப் பணியாளர்கள் குடியிருப்பு வீடுகள் ஆகியவை அமைக்கும் பணிகளுக்காக ரூ.49.91 இலட்சம் ஒதுக்கப்பட்டு, கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அந்தியூர் துணை மின்நிலையத்திலிருந்து தளவாய்பேட்டை துணை மின்நிலையத்திற்கு 13 கி.மீ. தூரத்திற்கு 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட மிக உயரழுத்த மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி புதிய துணை மின்நிலையத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தூரத்திற்கு 22 கிலோ வோல்ட் உயரழுத்த இணைப்பு மண் பாதைகள் அமைக்கப்படவுள்ளன. மேற்படி மின்பாதைகள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.146.80 இலட்சம் செலவில் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி தளவாய்பேட்டை துணை மின்நிலையத்தில் 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின் மாற்றிகள் (மொத்த திறன் 20 எம்.வி.ஏ.) ரூ.117.05 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளன. இதர மின் உபகரணங்கள் மற்றும் மின் நிலைய துணை உபகரணங்கள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.117.44 இலட்சம் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பொதுப்பணித்துறை**

ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி அரசு மருத்துவமனையில் 12 படுக்கைகள் கொண்ட மகப்பேறு அறையுடன் கூடிய பிரசவ அறையும் மற்றும் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் காப்பகம் அறை கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு ரூ.44 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, முழுமையாக முடிக்கப்பட்டு, 11.12.99 அன்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த கட்டுமானப் பணியையும் செய்தியாளர்கள் பார்வையிட்டனர்.

இப்பயணத்தின் போது மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறையை சார்ந்த அலுவலர்களும் கலந்துக் கொண்டனர்.

**– தா. மனோகரன்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு மாவட்டம். ★

மக்களின் அடிப்படைத்தேவையான, குடிநீர் வசதியை செய்துதர தமிழக அரசு பல்வேறு குடிநீர்த்திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது. அதேபோல், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிடைக்கின்ற நீர் ஆதாரங்களைக் கொண்டு, தீவிரத்திட்டங்கள் தீட்டப்பட்டு, மக்களுக்கு குடிநீர் வசதிகள் செய்துதரப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சுகுமாரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடிநீர் வசதி

## நகர குடிநீர்த்திட்டங்கள்

நகர குடிநீர்த்திட்டங்களைப் பொறுத்தவரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் 6 நகராட்சிகளும், 28 பேரூராட்சிகளும் உள்ளன. இவற்றில் காஞ்சிபுரம் நகராட்சிக்கு மட்டும் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மதுராந்தகம் நகராட்சிக்கு தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 50 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. முழுமையான அளவான 90 லிட்டர் குடிநீர் வழங்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. 1996 முதல் 2000 வரை 9 திட்டங்கள் ரூ.17.11 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டுள்ளது. செங்கல்பட்டு நகராட்சி, உத்திரமேரூர் பேரூராட்சி, செய்யூர் ஊராட்சி, பெருங்களத்தூர் பேரூராட்சி, திருநீர்மலை பேரூராட்சி, திருப்பெரும்புதூர் பேரூராட்சி, நந்திவரம் கூடுவாஞ்சேரி, திருக்கழுக்குன்றம், சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் 9 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. இத்திட்டங்களினால் அந்தந்தப்பகுதியில் வாழும், 1,77,140 பொதுமக்கள் பயன்பெறுகின்றனர்.

நடப்பு நிதியாண்டில், செவிலிமேடு பேரூராட்சி, வாலாஜாபாத் பேரூராட்சி, சிட்லபாக்கம் பேரூராட்சி, குன்றத்தூர் பேரூராட்சி, பீர்க்கன்கரணை பேரூராட்சி, செம்பாக்கம் பேரூராட்சி, மாங்காடு பேரூராட்சி, நந்திவரம் கூடுவாஞ்சேரி ஆகிய 8 பேரூராட்சிகளில் ரூ.13.30 கோடி மதிப்பீட்டில், 1,23,640 நபர்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் விநியோகத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் குன்றத்தூர், பீர்க்கன்கரணைத் திட்டங்களைத் தவிர ஏனைய 6 பேரூராட்சிகளின் அனைத்துப் மேம்பாட்டுப் பணிகளும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு விடும். இதுபோக ரூ.2.02 கோடி மதிப்பில் மதுராந்தகம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், ரூ.2.64 கோடி மதிப்பில் மாடம்பாக்கம் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டமும், மாமல்லபுரம் பேரூராட்சியில் ரூ.1.6 கோடியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் ரூ.6.75 கோடி மதிப்பில் குடிநீர் மேம்பாட்டு திட்டமும், நடப்பு ஆண்டில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.



சோழிங்கநல்லூர் பேரூராட்சியில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில், சோழிங்கநல்லூரில் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பகுதி-1 மேனிலைத் தொட்டியும், பகுதி-2இல் எம்.ஜி.ஆர். நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேனிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 9.80 இலட்சம் லிட்டர் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும். நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் வரை குடிநீர் கிடைக்க ஆவண செய்யப்பட்டுள்ளது.

**ஊரக குடிநீர்த் திட்டம்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் 648 ஊராட்சிகள் உள்ளடங்கிய 3,346 குடியிருப்புகள் உள்ளன. 1996-ஆம் ஆண்டு முதல் 2000 வரை, 993 குடியிருப்புகளுக்கு ரூ.41.55 கோடி மதிப்பில் குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், இம்மாவட்டத்தில் மொத்தம் 225 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.11.55 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்க திட்டம் தீட்டப்பட்டு 97 குடியிருப்புகளுக்கான பணிகள் முழுமையாக ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இது தவிர, ரூ.3.07 கோடி மதிப்பீட்டில் முள்ளி மேல்மருவத்தூர் மற்றும் இரண்டு குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர்த்திட்டமும், ரூ.66.7 இலட்சம் மதிப்பில் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மலையான்குளம் மற்றும் 10 குடியிருப்புகளுக்கு கூட்டு குடிநீர்த்திட்டமும், ரூ.52.2 இலட்சம் மதிப்பில், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெருநகர் மற்றும் 9 குடியிருப்புகளுக்கு கூட்டு குடிநீர்த்திட்டமும், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஏகாட்டூர் மற்றும் 3 குடியிருப்புகளுக்கு ரூ.31.4 இலட்சம் மதிப்பீட்டில் கூட்டு குடிநீர்த் திட்டம், இதுபோன்ற பெரிய அளவிலான ஊரக கூட்டு குடிநீர்த்திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் 1999-2000 ஆண்டில், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரசங்கால் கிராமத்தில் ரூ.10.57 இலட்சம் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் சித்தேரிமேட்டில் ரூ.6.43 இலட்சம் மதிப்பீட்டிலும், சமத்துவபுரங்களில் குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.



2000-2001-ஆம் ஆண்டில் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் புக்கத்துரை, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் மாம்பாக்கம் ஆகிய இடங்களில், சமத்துவபுரங்களின் பணிகள் தொடர்பாக ஆரம்ப பணிகள் நடந்து வருகின்றன.

புனித தோமையர்மலை ஊராட்சி ஒன்றியம், ஒக்கியம் துரைப்பாக்கம், கணேஷ்நகர மற்றும் பாண்டியன் நகரில் ரூ.11.95 இலட்சம் மதிப்பில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டமும் மற்றும் இதே ஊராட்சி ஒன்றியம் சார்ந்த ஒக்கியம்துரைப்பாக்கம், திருவள்ளுவர் நகர் மற்றும் மகாத்மாகாந்தி நகரில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.13.74 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் தீட்டி முடிக்கப்பட்டு மக்கள் உபயோகத்தில் உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தருவதில் மாவட்ட நிர்வாகம் முனைப்போடு செயல்பட்டு பொதுமக்களின் பாராட்டினை பெற்றுள்ளது.

**- பா. நாராயணமூர்த்தி,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

★ ★ ★

# திரைப்பட விருதுகள் வழங்கும் விழா : பரிசுத்தொகை உயர்வு

முதல்வர் கலைஞர் அறிவிப்பு

இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்தக் கலை விழாவில் - சிறந்த நடிகர்கள், சிறந்த திரைப்படங்கள் - திரைப்படங்கள் வெற்றி பெற ஒத்துழைத்த சிறந்த கலைஞர் ஆகியோருக் கெல்லாம் பரிசுகள், விருதுகள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவைகளை வழங்கியதிலும் இந்த இனிய விழாவைக் கண்ணுறுகின்ற வாய்ப்பைப் பெற்றதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் அவர்கள் தனக்குக் கிடைத்துள்ள இந்த விருது பற்றி எந்தப் படத்திற்கு இது கிடைத்தது, எத்தனையாவது முறையாக சிறந்த நடிகருக்கான விருதைப் பெறுகிறேன் என்றெல்லாம் குறிப்பிட்டார். அவர் நான் பேசிய ஒரு பேச்சை நினைவூட்டி ஒரு புத்தகத்தில் இதைப் படித்தேன் என்றும் குறிப்பிட்டார். சரத்குமார் போன்றவர்கள் கள்ளங்கபடம் இல்லாதவர்கள் என்பதற்கு இது ஒரு சான்று. சிலபேர் அந்தக் கருத்தை அப்படியே சொல்லி அதை தானே சொல்லிய கருத்து போல உங்களுடைய கைதட்டலைப் பெற்றுக்கொண்டு போவார்கள். ஆனால் எது தனக்குச் சொந்தம், எது தனக்குச் சொந்தமில்லை என்பதை வெளிப் படையாகச் சொல்கின்ற அந்த வெள்ளை உள்ளத்தை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

பொதுவாகவே கலைஞர்கள் என்றாலே அவர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் அதற்கு உதாரணமாகத் திகழ்கிறார்.

அடுத்து சிறந்த நடிகர் என்ற விருதினைப் பெற்றவர் தம்பி கார்த்திக். கார்த்திக் நடித்த ஏராளமான படங்களை நான் பார்த்திருக்கிறேன். இப்போது வீட்டில் உள்ள தொலைக்காட்சிகளின் மூலமாக அவருடைய பழைய படங்களைக் காணும் வாய்ப்பு ஏற்படும்போது, இவ்வளவு ஆற்றல் படைத்த இந்த நடிகன் இன்னும் ஏற வேண்டிய உச்சியிலே ஏறவில்லையே என்று நான் ஏங்கியதுண்டு. அந்த ஏக்கத்தைப்



23 படங்களிலே 15 படங்களைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்.

அதிலே நம்முடைய தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் தம்பி விஜயகாந்துக்கு ஒரு குறை, இன்னும் எட்டுப் படங்களை ஏன் விட்டு விட்டீர்கள் என்று.

போக்கும் வகையில் தம்பி கார்த்திக் கலையுலகத்திலே வளரவேண்டும். அதற்கான முயற்சிகளை மேலும் மேற்கொள்ள வேண்டுமென்று அண்ணன் என்ற உரிமையோடு நான் தம்பி கார்த்திக்கிற்குச் சொல்லிக் கொள்கிறேன்.

சிறந்த நடிகை என்ற விருதை செல்வி ரோஜா பெற்றிருக்கிறார். இந்த் விருதை அவருக்கு தமிழக அரசு கொடுத்தது மாத்திரமல்ல, நீதிமன்றமும் சேர்ந்து கொடுத்திருக்கின்ற விருது. ஆகவே நீதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர் இந்த விருதைப் பெறுவதற்கு. செல்வி ரோஜா கவர்ச்சியான பாத்திரங்களை மாத்திரம் ஏற்றுக் கொண்டு நடிப்பவர் என்று யாராவது கருதினால் அதற்கு விதிவிலக்காக அவர் மிக எளிமையான ஒரு ஏழை வீட்டுப் பெண்ணாக, நாடோடிப் பெண்ணாகக் கூட நடிக்க முடியும். திறமையாக நடிக்க முடியும் என்பதை மெய்ப்பித் திருக்கிறார்.

இவர்களுக்கும் மற்றும் விருது பெற்ற அனைத்துக் கலைஞர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை இங்கே வழங்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மலிவான செலவிலே எடுக்கப்பட்ட தரமான படங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு நீதிபதியாக நம்முடைய பக்தவத்சலம் அவர்கள் அமர்ந்து ஒரு குழு அதிலே கலந்துகொண்டு அவர்கள் எல்லாம் தேர்வு செய்து வருகிற எல்லா படங்களையும் தேர்வு செய்வதென்றால் அதற்கு நீதிபதியும் குழுவும் தேவையில்லை. ஒரு நீதிபதியை உட்கார வைத்துவிட்டு 23 படங்களுக்கும் நீங்கள் பரிசு கொடுங்கள் என்று சொன்னால் அதையே ஒரு வழக்கமாகக் கொண்டால் அடுத்த முறை தேர்வுக் குழுவே இல்லாமல் போய்விடும்.

தம்பி விஜயகாந்துக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். வெறும் தம்பி விஜயகாந்தாக மட்டும் இருந்திருந்தால் பரவாயில்லை என்று பதில் சொல்லாமல் இருந்திருப்பேன். ஒரு பெரிய அமைப்பின் தலைவராக அவர் இன்றைக்கிருக்கிறார். தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவராகவும் அவர் இருப்பதால் நான் அவருக்குப் பதில் சொல்வது என்னுடைய பொறுப்பும் கடமையும் ஆகும். 23 படங்களையும் தேர்ந்தெடுக்க முடியாததற்குக் காரணம் ஆரம்பத்திலேயே நிபந்தனைகளில் குறைந்த செலவிலே எடுக்கப்பட்ட தரமான படங்கள் என்று விளம்பரப்படுத்தி யிருக்கிறோம். அதற்குப் பிறகுதான் தேர்வுக்கு 23 படங்கள் வந்தன. நீதிபதியும் அவரோடு இணைந்து தேர்வு செய்த குழுவினரும் குறைந்த செலவை மாத்திரம் பார்க்காமல், தரமான படமா என்றும் பார்த்து தேர்ந்தெடுத் திருக்கிறார்கள்.

இவ்வளவு கண்டிப்பாக இருந்தால்தான் அடுத்த முறை குறைந்த செலவிலே மாத்திரமல்ல; தரமான படங்களையும் எடுக்க வேண்டுமென்ற எண்ணம் படம் எடுப்பவர்களுக்குத் தோன்றும் என்பதற்காகத் தான் 23-ல் பதினைந்தை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இன்னும் சொல்ல வேண்டுமானால் எந்தப் படத்தைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அவர்களுடைய தேர்வு முடிந்த பிறகு ஒட்டப்பட்ட அரக்கு முத்திரையிட்ட ஒரு கவரில் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களின் பெயர்கள் எனக்கு அனுப்பப்படும். அதைப் பிரித்துப் பார்த்து ஒப்புக் கொள்வதுதான் என்னுடைய பணி. ஒரு தகவல் என்ற அளவிற்குத்தான் அந்தப் பட்டியல் எனக்கு அனுப்பப்பட்டன. அதை நான் ஏற்றுக்கொண்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே நீதியரசர் பாஸ்கரன் அவர்கள் நீதிபதியாக இருந்து தேர்வு செய்த பட்டியல்கூட அப்படித் தான் வெளியிடப்படும்.

### அண்ணா அறிமுகப்படுத்திய திரைப்பட விருது வழங்கும் திட்டம்

திரைப்படங்களுடைய வளர்ச்சியையும் தரத்தையும் உயர்த்தும் நோக்கத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த 67 - 68ஆம் ஆண்டுக் காலத்திலேதான் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த கலைஞர்கள், சிறந்த தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தினார்கள். அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

### பரிசுத்தொகை உயர்வு

அந்தத் திட்டத்தின்படிதான் இப்போது சிறந்த தமிழ்ப் படங்களுக்கு மூன்று பரிசுகளும், சிறப்புப் பரிசு ஒன்றுமாக நான்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசுக்குரிய படத்திற்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசுக்குரிய படத்திற்கு 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசுக்குரிய படத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பரிசு பெறும் படத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகின்றன. இதைச் சற்று உயர்த்தலாமே என்ற எண்ணம் தம்பி விஜயகாந்த் போன்றவர்களுக்கு உண்டு. என்னிடத்திலே பலமுறை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

எனவே அவர்களுடைய முறையீட்டிற்கு அல்ல அல்ல வேண்டுகோளுக்கு அல்ல அல்ல, அன்புக் கட்டளைக்கு உடன்பட்டு முதல் பரிசுக்குரிய படத்திற்கு இனிமேல் இரண்டு இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசுக்குரிய படத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசுக்குரிய படத்திற்கு 75 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பரிசு பெறும் படத்திற்கு 75 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

சிறந்த படங்கள், சிறந்த நடிகர்கள் விருது பெறுவது மாத்திரமல்ல. இந்த ஆண்டு தம்பி சரத்குமார் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல திரைப்படக்கல்லூரி மாணவர்களுடைய திறமைக்கும் நாம் மதிப்பளித்திருக்கிறோம். மாணவர்களை மதிக்கிறோம் என்றதும் மாணவர்கள் நிறையப்பேர் இங்கே வந்திருக் கிறார்கள் என்பது கையொலியிலிருந்தே தெரிகிறது. அந்த மாணவர்களை எல்லாம் நான் வரவேற்கிறேன். அவர்களுடைய ஆர்வத்தை நான் போற்றுகிறேன், புகழ்கிறேன், பாராட்டுகிறேன்.



தமிழ்நாடு திரைப்படக்கல்லூரியின் வரலாற்றில் முதல் முறையாக 96-97ஆம் ஆண்டில். இந்நிறுவன மாணவர்கள் தயாரித்த ஆறு பட்டயப் படங்களைத் தேசிய திரைப்பட விழாவிலே பங்கேற்கச் செய்ததோடு திரு.வெங்கடேஷ் எனும் கலைஞருடைய பட்டயப் படமான "விடியலை நோக்கி" எனும் படம் சிறந்த படத்திற்கான விருதையும், சிறந்த இயக்குநருக்கான விருதையும் பெற ஊக்கமளித்து உறுதுணை புரிந்தது இயக்குநர் அமிர்தம் என்பதை சுப்ரீம் ஸ்டார் இங்கே சுட்டிக்காட்டினார்.



## "அண்ணா வாழ்கின்றார்" படத்திற்கு தேசிய விருது

அமிர்தம் மாத்திரம் செய்துவிடவில்லை. தமிழக அரசு பின்னால் இருந்து ஊக்குவித்த காரணத்தால் அவர்கள் இந்தச் சிறப்பினைப் பெற்றார்கள். மேலும் மாதவ கிருஷ்ணனின் 'மல்லி' என்ற படமும், திரைப்படப்பிரிவின் சார்பிலே இயக்குநர் அமிர்தம் தயாரித்த "அண்ணா வாழ்கின்றார்" என்ற படமும் தேசிய அளவிலே விருதுகள் பெற்றன என்பது இந்த ஆண்டின் முக்கியத்துவமான செய்தியாகும்.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு வழங்கப்பட்ட மானிய உதவி கூட ஏற்கெனவே மூன்று இலட்ச ரூபாய் என்றிருந்து பிறகு இந்த ஆட்சியிலே ஐந்து இலட்ச ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு எட்டு திரைப்படங்களுக்கு 96இல் ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் நாற்பது இலட்சம் ரூபாயும், 97ஆம் ஆண்டில் 11 படங்களுக்கு ஐம்பத்தி ஐந்து இலட்சம் ரூபாயும் மானியமாக வழங்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு பதினைந்து படங்களுக்கு அந்த மானியங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன.

திரைப்படப்பிடிப்பில் இறந்து போகும் தொழிலாளர் குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் நிதி வழங்கும் திட்டத்தை 89-90ஆம் ஆண்டில் கொண்டுவந்ததும் நடைமுறைப்படுத்தியதும் இந்த அரசுதான்.

## திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்து காப்புறுதி திட்டம்

96-97ஆம் ஆண்டில் திரைப்படத் தொழிலாளர் களுக்கு மேலும் நன்மை உண்டாக்கும் விதத்தில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் 50 ஆயிரம் ரூபாய்க்கு காப்புறுதி செய்யக்கூடிய "விபத்து காப்புறுதித் திட்டம்" ஒன்றை நடைமுறைப் படுத்தியதும் இந்த அரசுதான். இத்திட்டத்தின் கீழ் விபத்திலே இறக்கும் திரைப்படத் தொழிலாளர் களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்படுகிறது.

உடல் ஊனமுறும் தொழிலாளர்களுக்கு அதற்குத் தகுந்தாற் போல் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. சண்டைக் காட்சியில் நடிக்கும் நடிகர்கள், பயிற்சியாளர்கள் உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாயும், அவர்கள் ஊனமுற்றால் 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இது 96-97ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வரும் திட்டமாகும்.

கேளிக்கை வரியிலிருந்து சில முக்கியமான படங்களுக்கு - தரமான படங்களுக்கு, சில குறிப்பிட்ட குறிக்கோளுக்காக எடுக்கப்பட்ட படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மை இந்தியா, சாதி ஜனம், புதல்வன், குடும்பச் சங்கிலி, எல்லாம் பணத்துக்காக, நீதியின் வாசலிலே, ஹவுஸ்புல் என்ற இந்தப் படங்களுக்கும், உயிரின் உயிரே என்ற இந்தி மொழியிலேயிருந்து டப் செய்யப் பட்ட படத்திற்கும் முழு வரிவிலக்குச் செய்யப் பட்டது.

கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் முதலில் 54 விழுக்காடு என்றிருந்ததை, 1989-ஆம் ஆண்டு 40 சதவிகிதமாகக் குறைத்தேன் என்பது உங்களுக்கும் தெரியும். அந்தக் கேளிக்கை வரியை 40 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாக 1.8.98 முதலும், மேலும் இந்த ஆண்டு 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், பத்தாண்டுகளுக்கு முன் வெளிவந்த திரைப்படங்களுக்கான கேளிக்கை வரியை 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக் குறைத்தது இந்த அரசு. மொழி மாற்றம் செய்யப்பட்ட படங்களுக்கும், பிற தமிழ்ப் படங்களுக்குக் குறைக்கப்பட்டதுபோல் கேளிக்கை வரி 1.8.98. முதல் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல இணைக்க வரிமுறையும் அதற்கேற்றாற் போல் குறைக்கப் பட்டுள்ளது. இந்த வரிக் குறைப்புகள் மூலம் திரைப்படத் துறையினருக்கு நாற்பது கோடி ரூபாய் அளவிற்கு இந்த அரசு சலுகைகளை வழங்கியிருக்கின்றது.

விற்பனை வரிச் சட்டத்தின்படி திரைப்படங் களுக்கான உரிமை மாற்றம் மீது, 1.4.1986 முதல் 11.11.1999 வரை வணிகர்கள் செலுத்த வேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததோடு, உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12.11.1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு எனவும் இந்த அரசு குறைத்திருக்கிறது.

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த அரசின் பல்வேறு துறைகளுக்கும் சென்று அனுமதி பெற வேண்டிய சிரமத்தைப் போக்க அதற்கு ஒரே இடத்தில் அனுமதி வாங்கலாம் என்று தடைகளையெல்லாம் விலக்கி எளிதாக ஆக்கித் தந்துள்ள அரசும் இந்த அரசுதான். இந்த நடைமுறைகளால் தயாரிப்பாளர்களுக்குச் சிரமங்களைப் போக்கிடும் வண்ணம் தடையில்லாச் சான்றிதழ் இன்றி அரசுக்குச் சொந்தமான அனைத்து இடங்களிலும் படப்பிடிப்பு நடத்துவதற்கு ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் ஒற்றைச் சாளரத் திட்டத்தை 96 - 97இல் இந்த அரசு நடைமுறைப் படுத்தியிருக்கின்றது.



ஒரு நாளைக்கு வெளிப்புறப் படக்காட்சி எடுக்க 5,000 ரூபாய் என்று இருந்ததை 1,000 ரூபாய் என்றும், 2,500 ரூபாய் என்றிருந்ததை 500 ரூபாய் என்றும் 96ஆம் ஆண்டிலிருந்து குறைத்து ஆணையிட்டதும் இந்த அரசுதான்.

மிக முக்கியமாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு - நான் இப்போது பொறுப்பேற்ற பிறகு என்று

சொல்லவில்லை. கடந்த காலத்தில் பொறுப்பேற்ற அந்தக் காலக் கட்டத்திலேயே கலைத்துறை வித்தகர்கள் பெயரால் சில விருதுகள் வழங்கப்பட்டன.



நல்ல திறமையான இயக்குநர்களுக்கு, பழம்பெரும் ராஜா சாண்டோ அவர்களுடைய பெயரால் ராஜா சாண்டோ விருதும், கலைத்துறையிலே புரட்சி செய்தவர்களுக்கு, கலைத் துறையிலே திருப்பத்தை ஏற்படுத்திய வர்களுக்கு, கலைத் துறையிலே வித்தகர்களாக திகழ்பவர்களுக்குக் கலைவாணர் என்.எஸ்.கே. பெயரால் விருதும், திரைப்படத் துறையிலே சாதனை பல புரிந்தவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா விருதும், அதைப் போலவே கலைத்துறையிலே புகழ்பெற்ற நடிகர்களுக்கு மக்கள் திலகம் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரால் எம்.ஜி.ஆர். விருதும், நல்ல கவிஞர்களுக்கு கவிஞர் கண்ணதாசன் விருதும் வழங்கப்பட்டு வருகின்றது.

**சிவாஜி கணேசன் விருதும்**
**தியாகராஜ பாகவதர் விருதும்**

அதைப்போலவே நடிகர் திலகம் சிவாஜி விருதும் வழங்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்து - ஆனால் அது எந்த விழாவிலும் வழங்கப்படவில்லை. எனவே கடந்த முறை நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலே அதைக் குறிப்பிட்டேன்.

**நடிகர் திலகம் சிவாஜியின் பெயரால்**
**வழங்கப்படும் என்று அறிவித்தேன்**

அதற்கேற்ப வருகின்ற டிசம்பர் அல்லது ஜனவரித் திங்களில் 1999-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்குகின்ற விழாவில் நடிகர் திலகம் சிவாஜி விருதும் ஒருவருக்கு வழங்கப்படும் என்பதோடு நல்ல பின்னணிப் பாடகருக்கு எம்.கே.தியாகராஜ பாகவதர் பெயரால் தியாகராஜ பாகவதர் விருதும் வழங்கப்படும் என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விருதும், ஐந்து பவுன் எடையுள்ள தங்கப் பதக்கமும் கேடயமும் அவர்களுக்குப் பரிசாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த நல்ல விழாவிலே நான் நம்முடைய கலையுலகப் பெருமக்களையெல்லாம் கேட்டுக் கொள்வது ஒன்றுண்டு. இன்று காலையிலே ஒரு செய்தி பார்த்தேன். தம்பி விஜயகாந்த் அவர்கள் சாதிகளின் ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக ஒரு பயணம் நடைபெற்று அதிலே கலந்துகொண்ட நண்பர்களுக்கெல்லாம் பரிசுகளை வழங்கிப் பாராட்டிப் பேசிய பேச்சை நான் பத்திரிகையிலே படித்துப் பார்த்தேன்.

கலையுலகத்திலே உள்ளவர்கள் முயன்றால் சாதி மதச் சச்சரவுகளை வீழ்த்தி மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சாதிகளால் ஏற்படக்கூடிய சண்டையை நிறுத்தி சமரச உணர்வை எங்கும் உருவாக்க முடியும். அதற்கு கலைஞர்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை. ஏனென்றால் இனிப்போடு கலந்துதான் சில மருந்துகளைத் தர வேண்டி யிருக்கின்றது. எனவே கலையுணர்வோடு கூடிய கருத்து மருந்துகளைத் தர கலையுலக நண்பர்கள் எல்லாம் என்னோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விருது பெற்றவர்களுக்கெல்லாம் என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து இந்த அளவில் விடை பெறுகிறேன்.

- வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 10-8-2000 ஆற்றிய உரை

• • •

# போதுமான தண்ணீர் பருகாமையால் தோன்றும் நோய்கள்

— E.V.S. சுந்தரம்

அன்றாடம் ஒவ்வொருவரும் போதுமான நீரைப்பருக வேண்டும். அங்ஙனமின்றிப் போதுமான நீர் பருகாமையால் நிணநீர் சரிவர மென்மையாக்கப்படாமல் கெட்டியாகிவிடுகிறது. அதனால் நிணநீர் குழாய்களின் மூலம் பாய்ந்தோட முடியாமல் போய்விடுகிறது. இங்ஙனம் படிந்த கழிவுகளைக் காலி செய்வது உடலின் இயல்பான வேலைகளில் ஒன்று. இக்கழிவுகளே, காதுகளிலிருந்து குறும்பையாகவும் கண்களிலிருந்து பீழையாகவும், மூக்கிலிருந்து சளியாகவும் வெளிப்படுகின்றது. இக்கழிவுப் பொருட்கள் வெளியேறாவிடின் அவையே பல்வேறு நோய்களுக்கு மூல காரணமாய் அமைந்து விடுகின்றன.

அப்போதும் உடலின் கழிவுப் பொருட்கள் வெளியேறாவிடில் தான் கொப்புளங்கள் தோன்றுகின்றன. இந்நோய்க்கும் நம் முன்னோர்கள் கையாண்ட வழியே சிறப்பானதாகும். இந்த நோய் கண்டவர்களுக்கு உடலுக்குக் குளிர்ச்சி ஊட்டக்கூடிய இளநீர், மோர், நீராகாரம், பழச்சாறு முதலியவற்றையே கொடுத்து வந்தனர். இங்ஙனம் நீர்ச்சத்து நிரம்பிய உணவின் மூலமும் போதிய தண்ணீரைப் பருகுவதன் மூலமும் இந்நோயை நம் முன்னோர்கள் கட்டுப்படுத்தினர்.




**மஞ்சக் காமாலை**

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் மஞ்சள் நிறம் அடைகிறது. சிறுநீர் மஞ்சளாக வெளியேறுகிறது. கல்லீரலில் இருக்கும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக இந்நோய் உடலில் தோன்றுகிறது.

மஞ்சக் காமாலை நோயை மருந்துகளின் மூலம் குணப்படுத்த முயல்வது சில சமயம் பேராபத்தை விளைவிக்கின்றது. நோயாளிகளுக்குப் பசி இராதாகையால் உணவை வற்புறுத்தி அளிக்கக்கூடாது. பழச்சாற்றையும், தண்ணீரையும் நிறைய உட்கொள்ளுதல் வேண்டும். தண்ணீர் ஒன்றே உடலின் வெப்பத்தை தணித்து, சிறுநீரின் மஞ்சள் நிறத்தையும் மாற்றிவிடும்.

இந்நோய்களைத் தவிர மலேரியா, டைபாயிடு, பிளேக் முதலிய நோய்களை நீக்கவும் தண்ணீர் பெரிதும் உதவுகிறது.

**காய்ச்சல்**

வேண்டாத கழிவுப் பொருள்களை உடல் வெளியேற்ற முனைகிறது. அளவுக்கு மீறி உள்ள நிணநீரை உடல் எரித்து வெளியேற்ற விரும்புகிறது. அத்தகைய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதற்குக் கடும் காய்ச்சலும், வேகமான இதயத் துடிப்பும், அதிகமாக மூச்சு வாங்குதலும், மிகுந்த தாகமும் அறிகுறிகள் ஆகும்.

காய்ச்சல் இருக்கும் போது உடலின் வெப்பம் தணிவதற்கு நீர் பெரிதும் பயன்படும். இது இதயத் துடிப்பை நிதானமாக்கி, சுவாசத்தைச் சீராக்குகின்றது. மஞ்சள் நிறமாகச் செல்லும் சிறுநீர் தண்ணீரால் நிறம் மாறுகிறது. காய்ச்சல் தணிகிறது.

**பெரிய அம்மை**

பெரிய அம்மை தோன்றுவதற்கு முன் இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடும் ஜுரம் ஏற்படுகின்றது.

**ஹெர்னியா**

'ஹெர்னியா' என்ற குடலிறக்க நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை ஒன்றே

வழியாகும் என்று இன்றைய அல்லோபதி மருத்துவம் கூறுகிறது. குடலிறக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களை அதிகப்படியான தண்ணீர் குடிக்க வைத்தும் உணவைக் குறைத்தும், முக்கியமாகப் புரதச்சத்துள்ள உணவைக் குறைத்தும் சிகிச்சை செய்தால் குணமாக்கிவிட முடியும்.

**நரம்பு மண்டலம்**

மேலும் மூளையும் நரம்பு மண்டலமும் இரத்த ஓட்டத்தினாலும் நிணநீர் ஓட்டத்தினாலும் எப்போதும் ஈரப்பசை உள்ளனவாக இருக்கின்றன. நம் உடலில் உள்ள எல்லா உயிர் அணுக்களுக்கும் செல்கின்ற இரத்தத்தில் ஆறில் ஒரு பங்கு இரத்தம் மூளைக்குச் செல்கிறது. மூளையும் நரம்பு மண்டலமும் ஈரப்பசையுடன் இருப்பதால் உடலுக்கு அதிர்ச்சிகளைத் தாங்கும் சக்தி அதிகரிக்கின்றது. இந்த ஈரப்பசை எப்போதும் வறண்டு விடாமல் இருக்க நிணநீரும், இரத்தமும் அப்பகுதியில் நன்கு பாய்ந்து செல்ல வேண்டும். இதற்குப் போதிய நீர் பருகுவது இன்றியமையாததாகும்.

இவை தவிர சிறுநீரக நோய், சிறுநீரகப் பையில் கல் இருத்தல், வயிற்றில் வாயு சம்பந்தமாக ஏற்படும் நோய்கள், குடல் வீக்கங்கள், குடல் புண்கள், நெஞ்சுக் கரிப்புகள் முதலிய தொல்லைகளும் வேண்டிய அளவு நீரை உட்கொள்ளாதிருப்பதினால் விளைகின்றன.

**குழந்தைப் பருவ நோய்கள்**

சிறு குழந்தைகளுக்கு வரும் அனைத்து நோய்களுமே மருந்தின்றி குணமாகக் கூடியன. ஏனெனில் குழந்தைகளின் உடலில் தடுப்பாற்றல் நிறைய இருக்கின்றது. உதாரணமாக, சின்னம்மை, வீக்கங்கள், சிரங்குகள், வேனிற் கட்டிகள், பெரியம்மை, அக்கி முதலியன கடும் காய்ச்சலுடனோ குறைந்த காய்ச்சலுடனோ அடிக்கடி குழந்தைகளுக்கு வருகின்றன. அவற்றின் மூலம் உடலில் சேர்ந்துள்ள கழிவுப் பொருட்களும், நச்சுப் பொருட்களும் அடியோடு நீக்கப் படுகின்றன. இவற்றில் பெரும்பான்மை யானவை, உரிய நேரங்களில் போதுமான அளவு நீரைக் குழந்தைகளுக்குத் தராததாலேயே ஏற்படுகின்றன.

**நீரும் மண்ணீரலும்**

அதிகப்படியாக உள்ள நிணநீர் மண்ணீரலில் சேமிக்கப்படுகிறது. அது பின்னர் உணவில் குறைந்த அளவு மாவுப்பண்ட சத்து இருக்கும் போதும், பட்டினி கிடக்கும் போதும் பயன்படுத்தப்படுகிறது. அப்படிப் பயன்படுத்தப் போதிய தண்ணீர் வேண்டற்பாலதாகும்.

**நீரும் பித்தநீரும்**

பித்தநீர் பைக்குள் உற்பத்தி ஆகும் பித்த நீர் சிறு குடல்மேல் முனைக்குள் செல்ல வேண்டும். அங்ஙனம் செல்ல வேண்டுமாயின் பித்தநீர் மிகவும் திரவ நிலையில் இருக்க வேண்டும். இல்லாது போனால் பித்தநீர், பைக்குள்ளேயே தங்கி அழுகிக் கெட்டுப் போய் இறுகிக் கல்லாகி விடும். எனவே பித்த நீர் திரவநிலை அடைந்து நுண்துளை வழியே செல்வதற்குத் தண்ணீர் இன்றியமையாததாகிறது.

**நீரும் கல்லீரலும்**

கல்லீரலில் சுரக்கும் திரவம் தடைப்பட்டால் செரிப்பு வேலை சரிவர நடைபெறாது. அப்போது மலம் நிறம் வெளுத்து வெண்மையாக இருக்கிறது. கல்லீரலில் சுரக்கும் திரவம் மலத்தின் நாற்றத்தை மாற்றக் கூடியது. இதற்கெல்லாம் போதிய நீர் பருகுதல் வேண்டத் தக்கதாகும்.



மேலும் மஞ்சக் காமாலையில், இரத்தம் மஞ்சள் நிற திரவத்தால் நிரப்பப்படுவதால் உடல் முழுவதுமே மஞ்சள் நிறமாகிறது. திரவப் பொருள் குறைவினால் கல்லீரல் செயலற்றுவிடுவதே இதற்குக் காரணம்.

### நீரும் சிறுகுடலும்

இரைப்பையில் பதமாக்கப்பட்ட உணவுப் பொருள் மேற்கொண்டு நன்கு ஜீரணம் ஆவதற்குரிய வேலை சிறு குடலில் நடைபெறுகின்றது. போதிய நீர் இல்லாவிடின் ஜீரண வேலை தடைப்பட்டு, உணவுப் பொருள் சிறு குடலிலேயே தங்கி விடும். அப்பொருள்கள் குடலில் புண் ஏற்படவும், வீக்கங்கள் ஏற்படவும் காரணமாகின்றன. இதனால் சிறுகுடலின் சில பாகங்கள் தமது விரைப்பை இழந்து விடுகின்றன.

இதுவரை கூறப்பட்டவையால் நீரின் இன்றியமையாமையைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். குடிநீர் கொண்டு பல நோய்களைக் குணமாக்கிக் கொள்ள முடியும் என்பதனையும், போதிய நீர் பருகாமையே பல நோய்களுக்கு மூல காரணம் என்பதனையும், உடலின் பல்வேறு உறுப்புக்கள் நீரோடு கொண்டுள்ள தொடர்பினையும், செரிப்புக்கு நீர் உதவும் தன்மையினையும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

### உமிழ்நீர்

வாயில் சுரக்கும் உமிழ் நீரில் 95% நீர் கலந்துள்ளது. வாயில் இடப்படும் உணவுப் பொருளுடன் உமிழ்நீர் நன்கு கலப்பது செரிப்பு வேலையை எளிமையாக்கும். சாதாரணமாக எச்சில் என்று இகழப்படும் இவ்வுமிழ்நீர் கிருமி நாசினியாகப் பயன்படுகின்றது. தமிழ்நாட்டுச் சித்தர்கள் தம் உடலில் சிறு சிராய்ப்பு ஏற்பட்டு, இரத்தம் கசிந்து புண் உண்டாயின், இயற்கை முறையில் உமிழ் நீரை அதன்மீது தடவி வந்தனர். இவ்வுமிழ் நீர் நச்சுக் கொல்லியாகச் செயல்பட்டு அக்காயத்தை ஆற்றி வந்தது.

பசு, நாய், பூனை முதலிய விலங்குகள் தம் உடலை நாவால் நக்கித்தூய்மை செய்து கொள்வதை நாம் அன்றாடம் காண்கிறோம். மேலும் அவைகள் தம் உடலில் உண்டாகும் காயங்களையும் நாக்கால் நக்கி நீக்கிக் கொள்வதைக் காணலாம்.

இளமையில் ஏற்படும் முகப்பருவுக்கு நல்ல மருந்து உமிழ் நீராகும். காலையில் முகப்பருவின் மேல் உமிழ் நீரைத் தடவி, சற்று நேரம் காயவைத்து, அதற்குப் பின் குளிக்க வேண்டும். மாலையிலும் இங்ஙனம் செய்து முகத்தைக் கழுவிக்கொள்ளலாம். காசு செலவாகாத இயற்கை வைத்தியமாகும் இது.

ஒவ்வொருவரும் தம்முடைய உமிழ் நீரையே தடவிக் கொள்ள வேண்டும். ஒருவர் எச்சில் பிறருக்கு நச்சு என்பதை அறிய வேண்டும்.

இத்தோடு உமிழ் நீரை அடிக்கடி துப்பி வீணாக்கலாகாது. இது நன்கு சுரப்பதற்கு நீர் குடிப்பது இன்றியமையாததாகும்.

### தண்ணீர் குடிப்பது பற்றிய பொதுவான தகவல்கள்

1. நாளொன்றுக்குப் பொதுவாக இரண்டு முதல் மூன்று லிட்டர் வரை நீர் பருகலாம். அதாவது எட்டு முதல் பன்னிரெண்டு குவளை நீர் குடிக்கலாம். குளிர், மழைக்காலத்தில் இரண்டு லிட்டரும் கோடைக் காலத்தில் மூன்று லிட்டரும் பருகலாம்.
2. உணவு உண்பதற்குக் குறைந்தபட்சம் முக்கால் மணி நேரத்திற்கு முன்னர் நீர் அருந்த வேண்டும்.
3. உட்கொள்ளும் போது நீர் அருந்துவது ஜீரணத்திற்குக் கேடு செய்யும்.
4. உண்டபின், குறைந்தபட்சம் ஒன்றரை மணி நேரத்திற்குப் பின்னரே நீரைப் பருக வேண்டும்.
5. பருகும் போது நிதானமாகவும், மெதுவாகவும், கவனமாகவும் பருகுங்கள். ஒவ்வொரு முறையும் ஒரு வாயளவே அருந்துங்கள். 'மடக்' 'மடக்' என்று வேகமாக பருகுவது நல்லதன்று.
6. தண்ணீரை வாயின் வெப்பநிலை அடையும் மட்டும் வாயில் வைத்த பின்னரே விழுங்குதல் வேண்டும்.
7. ஐஸ் வாட்டர் அல்லது மிகக் குளிர்ந்த நீர், அதிகச் சூடான நீர் உடலுக்கு ஊறு விளைவிக்கும். இது செரிப்பு வேலையைத் தடை செய்யும்.
8. சிறுநீரக நோய் உள்ளவர்கள், தொந்தி மற்றும் ஊளைச்சதை உடையவர்கள் அளவாகத் தண்ணீர் பருக வேண்டும்.
9. கடும் வெயிலிலும், சுரங்கத்திற்குள்ளும் வேலை செய்பவர்களும், மிகுதியான வியர்வை சுரக்கும் உடல் பெற்றவர்களும் சாதாரணமாக உட்கொள்ளும் அளவைவிட அதிகமாகப் பருகுதல் வேண்டும்.
10. வாந்தி, பேதி நோயின் போது அதிகத் தண்ணீரை உட்கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவை வாந்தியோ, பேதியோ ஆகும்போது உடனே ஒரு டம்ளர் நீர் அருந்துதல் வேண்டும். உடலில் நீர் வற்றிவிடும் நிலைமையைத் தோற்றுவிக்கக்கூடாது.
11. டைபாயிடு, காய்ச்சல் இருக்கும்போது தண்ணீர் குடிக்க வேண்டும்.
12. சளி, தடுமம், தும்மல், இருமல் முதலியன இருக்கும் போது வெந்நீர் குடிக்க வேண்டும்.
13. பொதுவாக, ஆறின வெந்நீரைக் குடிப்பது விஞ்ஞான முறைப்படி நல்லதாகும்.

*நன்றி : நீரமுதம்*

*வெளியீடு :*

**தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்கம், மதுரை–20.**

# ரெட்டைமலை சீனிவாசன் அஞ்சல்தலை வெளியீட்டு விழா

ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள் எந்த இழிவான சொல்லால் ஒரு சமுதாயம் அழைக்கப்படுகிறது என்று கருதப்பட்டதோ அது இழிவான சொல் அல்ல, ஏற்றமிகு சொல் என்று கருதி அதை உறுதிப்படுத்தி அந்தச் சொல்லை தனக்கு உரித்தாக்கிக் கொண்டு நான் பறையன் என்று சொன்னவர், அறிவித்தவர்.

**தீண்டத்தகாதவன் என்று எழுதிக் காட்டியவர்**

ரெட்டைமலை சீனிவாசன் 1930–ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டிற்கு அவர், டாக்டர் அம்பேத்கர், சர் ஏ. டி. பன்னீர்செல்வம், ஏ. ராமசாமி முதலியார் ஆகியோர் சென்றிருந்தபோது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அவர்களையெல்லாம் விருந்துக்கு அழைத்து ஒவ்வொருவருடைய கையையும் குலுக்கிக் கொண்டு வரும்போது ரெட்டைமலை சீனிவாசன் கைகுலுக்காமல் தன் கையை இழுத்துக் கொண்டுவிட்டார். இழுத்துக் கொண்டது மாத்திரமல்ல, திகைத்து நின்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஏன் என்று காரணம் கேட்டபோது நான் எங்கள் நாட்டில் தீண்டத்தகாதவன், என்னை நீங்கள் தீண்டக்கூடாது, நான் பறையன் என்று சொன்னது மாத்திரமல்ல, அதே வாசகங்களை எழுதி தன் கோட்டிலும் மாட்டிக் கொண்டிருந்தார். அதில் நான் பறையன், என் பெயர் ராவ் பகதூர் ரெட்டைமலை சீனிவாசன். எங்கள் நாட்டில் நான் தீண்டத்தகாதவன் என்று எழுதி மாட்டிக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் ஜார்ஜ் மன்னர் உங்கள் நாட்டில் இப்படிப்பட்டவர்கள் யாராவது கீழே விழுந்தால்கூட தூக்கிவிடமாட்டார்களா, அவர்கள் சாதியின் பெயரால் அப்படியே கிடக்கத்தான் வேண்டுமா என்று கேட்டார்.



அதற்கு ஆமாம், உங்கள் ஆட்சியிலே இந்தியாவிலே இதுதான் நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு தான் இந்தச் சமுதாயத்திலே ஒரு புரட்சி வித்து ஊன்றப்பட்டது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அந்தப் புரட்சிக்கு வித்தூன்றிய பெருமகன்தான் மறைந்தும் மறையாத மாணிக்கமாக ஜொலித்துக் கொண்டிருக்கின்ற ரெட்டைமலை சீனிவாசன் என்று சொன்னால் அது மிகையாகாது.

அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளைப் படித்துப் பார்க்கும்போது தீண்டாமை கொடுமை காரணமாக அவர் பட்டபாடு கொஞ்சம் நஞ்சமல்ல. அவர் தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில், கோழியாளம் கிராமத்தில் **7.7.1859**–இல் பிறந்தார். எல்லோரும் எண்ணிக் கொண்டிருப்பார்கள், நான் ராஜ்பவனிலிருந்து வருகிற வழியிலே கூட நம்முடைய அமைச்சர் தமிழ்க்குடிமகன் முற்றும் கற்றவர், இருந்தாலும் அடுத்த நிகழ்ச்சி என்ன என்று கேட்டபோது ரெட்டைமலை சீனிவாசன் நிகழ்ச்சி என்று சொன்னேன். அதற்கு அவர் ஓ, அதுவா, செங்கற்பட்டு மாவட்டத்தில் ரெட்டைமலை என்ற ஊரில் பிறந்தவர் அவர் என்றார். நான் சிரித்துக் கொண்டே சும்மாயிருந்தேன். இதை தம்பி துரைமுருகனுக்கும், வீராசாமிக்கும்கூட அவர் விளக்கி ரெட்டைமலை என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் பிறந்தவர் அவர் என்று சொன்னார்.

நான் பிறகு கோபாலபுரம் வந்து விட்டு மீண்டும் இந்த விழாவிற்கு வருகிற வழியிலேதான் சொன்னேன், என்ன புலவர், ரெட்டைமலை என்பது ஊரா என்று கேட்டேன். ஆமாம் அண்ணே என்றார். அது ஊரல்ல, ரெட்டைமலை என்பது அவருடைய தந்தையின் பெயர். தந்தையின் பெயரையும் இணைத்து வைத்துக் கொண்டவர் ரெட்டைமலை சீனிவாசன், அதனால்தான் அவரை எல்லோரும் தாத்தா என்று அழைக்கிறார்கள் என்று கூட நான் கற்பனை செய்து கொண்டேன். அவரை தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் என்று தான் அந்தச் சமுதாயமக்கள், பெரியவர்கள், படித்த இளைஞர்கள் எல்லாம் அழைப்பார்கள். இங்கே கூட இளையபெருமாள் பேசும்போது அப்படி அழைத்ததைக் கண்டீர்கள். தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் என்றும் தந்தை சிவராஜ் என்றும் அழைப்பார்கள். அந்த அளவிற்கு அந்தச் சமுதாயத்திற்காகப் பாடுபட்ட பெருமகன் ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள்.

## சமுதாயத் தொண்டிலும் பொதுத்தொண்டிலும் ஈடுபட்டார்

அவர்கள் **1865** முதல் **1878** வரையில் தஞ்சாவூருக்கு வந்து வாழ்ந்தார். காரணம் தீண்டாமைக் கொடுமை காரணமாக செங்கற்பட்டில் வாழப் பிடிக்காமல் தஞ்சைக்கு வந்தார். அங்கென்ன வாழ்கிறது? அங்கேயும் இந்தக் கொடுமை. பிறகு அங்கிருந்து கோவைக்குச் சென்று படிப்பைத் தொடர்ந்தார். அங்கேயும் தீண்டாமைக் கொடுமை காரணமாக பாதியிலேயே படிப்பை நிறுத்திவிட்டு, அதன் பின்னர் ஊட்டியில் **10** ஆண்டு காலம் கணக்கராக வேலை செய்தார். **1890**–இல் சென்னையில் குடியேறினார். பிறகு, பல அரசாங்கக் குறிப்பேடுகளையும், வரலாற்று நூல்களையும் கல்வெட்டுக்களையும் ஆராய்ந்தார். தென்னிந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்து, மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைகளை நேரில் கண்டறிந்தார். அப்படி கண்டறிந்ததின் விளைவுதான் சமுதாயத் தொண்டில், பொதுத் தொண்டில் ஈடுபடத் தொடங்கினார்.

சென்னையில் "ஆதிதிராவிட மகாஜன சபை" என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். **1893**–இல் பத்திரிகையைத் தொடங்கினார். எவ்வளவு துணிவோடு என்று பாருங்கள். வேதனையை உள்ளத்திலே அடக்கிக் கொண்டு எரிமலை உணர்வோடு அவர் தொடங்கிய பத்திரிக்கைக்குப் பெயர் பறையன். அதே ஆண்டில், சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் இந்தியாவிலேயே முதன் முறையாக ஆதிதிராவிட மக்களின் மாநாட்டைக் கூட்டிய பெருமை ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்குத்தான் உண்டு. அதன் பிறகு **1895**–இல் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்து தனித்தன்மையோடு போராட வேண்டும் என்று ஒரு உணர்வை ஏற்படுத்தினார். அன்றைக்கு சென்னையிலே இருந்த எல்ஜின் பிரபுவிடம் ஒரு குழுவாக ரெட்டைமலை சீனிவாசன் தலைமையிலே சென்று "ஆதி திராவிட மக்கள் சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும், அனைத்துச் சமூகத்தினருக்கும் சரி நிகர் சமானமாக வாழ வழி செய்துதர வேண்டும்" என்ற கோரிக்கை மனு ஒன்றை அன்றைக்கு எல்ஜின் பிரபுவிடம் கொடுத்தார்கள். அதன்பின், **1903** வரை பல மாநாடுகளை நடத்தி, தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மக்களின் நலன்களைப் பாதுகாக்க ஆங்கில அரசுடன் தொடர்ந்து போராடினார் என்பதுதான் அவருடைய வாழ்க்கைக் குறிப்பு.

## தென்னாப்பிரிக்கா நீதிமன்றத்தின் மொழிபெயர்ப்பாளர்

பின்னர், தென்னாப்பிரிக்கா சென்று நேட்டாலில் தங்கி, நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அங்கே காந்தியடிகளும் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரிந்த கால கட்டம் அது. அப்பொழுதுதான் அண்ணல் காந்தியடிகளுக்குத் தமிழில் கையெழுத்திடக் கற்றுக் கொடுத்தார். குறளின் அருமைபெருமைகளையெல்லாம் சொல்லிக் கொடுத்தார் என்றெல்லாம் சரித்திரக் குறிப்புகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. **1921**–ஆம் ஆண்டு இந்தியா திரும்பி சமுதாய நலப்பணிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று அவர் முடிவு கட்டியபோது சமுதாயத்திற்காகப் பாடுபடக் கூடிய கட்சி எது என்று தேடிப்பார்த்து அவருடைய கண்ணெதிரே தென்பட்டது நீதிக்கட்சிதான் என்ற காரணத்தால் இன்றைய திராவிட இயக்கம், அன்றைய நீதிக்கட்சியிலே சேர்ந்து சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

சென்னை மாகாண சட்டமன்றத்தில் **15** ஆண்டுகள் அவர் பணியாற்றியிருக்கிறார். அந்தப் பொறுப்பை தன்னுடைய சமுதாய மக்களின் நல்வாழ்வுக்கு

எப்படியெல்லாம் செலவிட வேண்டுமோ அந்த அளவிற்கு அவர் செலவிட்டார். அப்பொழுதுதான் அவருடைய துணைவியார் ரங்கநாயகி அம்மாள் அவர் அளவிற்குச் சமுதாயச் சீர்திருத்தத்திலே நாட்டம் கொண்டவர்கள். அவரையொத்த சமூகப் புரட்சியாளராக அம்மையார் திகழ்ந்தார். அவருடைய தூண்டுதலின்படி சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை ரெட்டைமலை சீனிவாசன் கொண்டு வந்தார். அதுதான் சம உரிமை எல்லா மக்களுக்கும் வேண்டும். தொட்டால் தீட்டு, தண்ணீர் எடுத்தால் தீட்டு என்ற அநியாயங்கள் எல்லாம் ஒழிய வேண்டும் என்ற வகையில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மான வாசகத்தை தன்னுடைய துணைவியார் இறந்த கல்லறையின் மீது கல்வெட்டுக்களாகப் பொறித்த பெருமையும் ராவ் பகதூர் ரெட்டை மலை சீனிவாசன் அவர்களுக்குண்டு.



1928–ஆம் ஆண்டு சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் ஐக்கிய மகாசபை (Madras Depressed Classes Federation) தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்குப் பிறகுதான் அவர் இலண்டன் வட்டமேஜை மாநாட்டிற்கு ஒரு முறையல்ல – 30–ஆம் ஆண்டும், 31–ஆம் ஆண்டும் இரண்டு முறை இலண்டன் மாநகர் சென்று வட்டமேஜை மாநாட்டிலே கலந்து கொண்டு இந்திய மக்களுக்கும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் சம உரிமை பெற வேண்டும் என்பதற்காகவும் அயராது தொண்டினை ஆற்றியிருக்கிறார், குரல் கொடுத்திருக்கிறார். இவருக்குப் பல பட்டங்கள் வழங்கப்பட்டன. ராவ் சாகிப், ராவ் பகதூர், அதன் பிறகு திவான் பகதூர் என்ற பட்டங்கள் எல்லாம் அவருக்கு வழங்கப்பட்டாலுங் கூட, தனக்கு உரிய பட்டம் பறையர் என்ற அந்தப் பட்டம் தான் என்கின்ற அந்த உறுதியோடு வாழ்ந்த பெருமகன் ரெட்டைமலை சீனிவாசன் என்பதை மறந்துவிடக்கூடாது. ஒன்றை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சென்னை அடையாறில் இந்து தியாசாபிகல் சொசைட்டி இருக்கிறதே, அந்த சொசைட்டியிலேதான் உயர்சாதிக்காரர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு இயக்கத்தை உருவாக்க வேண்டுமென்று முடிவெடுத்து இயக்கத்தை உருவாக்கினார்கள். ஊ்யூம் என்பவர் தலைமையிலே, அப்போதுதான் காங்கிரஸ் பிறந்தது. அதிலே நீங்களும் சேரவேண்டுமென்று இவருக்கு அழைப்பு வந்தபோது அவர் சொன்னது இந்தக் காங்கிரஸ் இயக்கம் அரசியல் விடுதலைக்காக என்றால் அது சரிபட்டு வராது, நான் முதன்முதலாக நாட்டுக்குத் தேவை என்று கூறுவது சமுதாய விடுதலை. சமுதாய விடுதலைக்குப் பிறகுதான் அரசியல் விடுதலை. சமுதாயத்திலே மனிதனை மனிதனாக மதிக்காத ஒரு நிலைமை இருக்கும்போது எந்த மனிதனுக்காக சுதந்திரம் வாங்கப் போகிறீர்கள். மனிதனுக்காக சுதந்திரம் வாங்குங்கள். முதலிலே எங்களை மனிதனாக ஆக்குங்கள் என்கின்ற அந்தக் குரலைக் கொடுத்து அந்த அழைப்பைப் புறக்கணித்தவர் ராவ் பகதூர் ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள். சமுதாயத்திலே இருந்த அந்த அக்கிரமங்களைக் கண்டு அவர் எப்படி துடித்தார் என்பதற்கு அவரே எழுதியுள்ளதை படித்துக் காட்ட விரும்புகிறேன். அவர் சொல்லுகிறார் :

**தீண்டாமைக் கொடுமையால் ரெட்டைமலை சீனிவாசனுக்கு ஏற்பட்ட மனக்கொதிப்பு**

“கோயம்புத்தூர் கலாசாலையில் படிக்கும்போது, மொத்தம் 400 பிள்ளைகளில் 10 மாணவர்களைத் தவிர,

மற்றவர்கள் உயர்சாதி மாணவர்கள். இப்பள்ளியில் சாதிக் கோட்பாடுகள் மிகவும் கவனமாக கடைப்பிடிக்கப்பட்டன. இந்த மாணவர்களுடன் பழகுவதால் சாதி, குடும்பம், இருப்பிடம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டால் என்னைத் தாழ்ந்தவனாக நடத்துவார்கள் என்பதற்காகவே பயந்து, பயந்து படித்தேன். இதற்காக, நான் பள்ளியின் மணி அடிக்கும் வரை எந்த மாணவனின் கண்ணுக்கும் தெரியாத வண்ணம் எங்கேயாவது மறைவான இடத்தில் உட்கார்ந்து படித்துவிட்டு, மணி அடித்ததும் நேராக வகுப்புக்குச் சென்று இடத்தில் அமர்ந்து விடுவேன். மாலை நேரத்தில் மணி அடித்ததும் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து போகாமல் கிடுகிடுவென வீட்டிற்கு ஓடிவிடுவேன். நான் எப்பொழுதும் மற்ற பிள்ளைகளுடன் கூடி விளையாடுவது கூட இல்லை. இருந்தாலும் விளையாட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தும் அவர்களுடன் விளையாடக்கூட இந்த நாட்டிலே உரிமை இல்லையே என்று பல நாட்கள் நான் ஏங்கியதுண்டு"

என்று தீண்டாமைக் கொடுமை காரணமாக ஏற்பட்ட வேதனையை அவர் எவ்வளவு அச்சத்தோடு அன்றைக்கு மாணவப் பருவத்தை நகர்த்த வேண்டியிருந்தது என்கின்ற மனக் கொதிப்பை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

அது அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய புத்தகத்திலே படிக்கும்போது நம்முடைய நெஞ்சம் எல்லாம் எரிகிறது எவ்வளவு கொடுமை. இந்த நாட்டிலே இருந்திருக்கிறது? அந்த வேதனையை எண்ணுகிற நேரத்தில் அவ்வளவு கொடுமையும் இன்றைக்கு இல்லாவிட்டாலுங்கூட அந்தக் கொடுமைகளையெல்லாம் சாய்க்க வேண்டுமென்பதற்காக வெடி வைக்கப்பட்டது சுயமரியாதை இயக்கத்தால், திராவிட இயக்கத்தால், தந்தை பெரியாரால் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதனால்தான் இன்றளவும் திராவிட இயக்கத்திற்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உள்ள உறவை யார் யாரோ பிரிக்க எண்ணினாலுங்கூட அதைப் பிரிக்க முடியவில்லை.

**1884**–ஆம் ஆண்டு சென்னை அடையாறு தியாசாபிகல் சொசைட்டி ஆண்டு விழாவில் ரெட்டைமலை சீனிவாசனும் கலந்து கொண்டார். அப்போதுதான் தீர்மானம் போடுகிறார்கள். இந்தியர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு அரசியல் இயக்கம் தோற்றுவிப்பது என்ற முடிவு ஏற்பட்டது. அதன்படி 1885–ஆம் ஆண்டு க்யூம் தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் எனும் இயக்கம் தொடங்கியது. இதைப்பற்றி ரெட்டைமலை சீனிவாசன் சொல்கிறார்.

அப்போதைய நிலையில் இந்தியாவில் இரண்டு பிரச்சினைகள் இருந்தன. அவற்றுள்,

1. இந்தியர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து உரிமைக்காகவும், பூரண சுதந்திரத்திற்காகவும் போராட வேண்டிய பிரச்சினை,
2. இந்தியாவில் பிறந்து, வளர்ந்து பூர்வீகக் குடிமக்களாக வாழ்ந்து வரும் செட்டியூல்டு இனமக்கள், இந்து மதத்தில் இருக்கும் தீண்டாமையை எதிர்த்து விடுதலை அடையப் பாடுபடுவது.

இந்த இரண்டு பிரச்சினைகளில் சமுதாய விடுதலைக்கு முக்கியத்துவம் கொடுப்பதையே நான் விரும்புகிறேன். எனவே, காங்கிரஸ் இயக்கத்தில் இணைய இயலாது என்று திட்டவட்டமாக அன்றைக்குத் தெரிவித்தபோது இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இப்போது அவருடைய அஞ்சல்தலையை வெளியிட்டிருக்கிறோம். கலைவாணர் அரங்கம் நிரம்பி வழிகின்ற அளவிற்கு குழுமியிருக்கிறோம். ஆனால் நாட்டில் இன்றைக்கு என்னென்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் புகைச்சல், பூசல், போராட்டங்கள் இன்றைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்திலே இன்றைக்கு தென்றல் ஓரளவிற்கு வீசுகிறது என்றாலுங்கூட, கடந்த காலங்களில் அடிக்கடி பூகம்பங்களும் சாதிச்சண்டை என்ற புயல்களும் ஏற்பட்டதை நீங்கள் யாரும் மறந்திருக்க முடியாது. இவைகள் எல்லாம் சாதியின் பெயரால் தனிப்பட்ட ஒருவர் இருவர் தங்களை வளர்த்துக் கொள்ளச் செய்கின்ற முயற்சிகளால் ஒரு மொத்த உணர்வு, சமுதாய மக்கள் அனைவரும் விடுதலை அடையவேண்டும், சுயமரியாதை பெறவேண்டும், உரிமைகளைப் பெற வேண்டும் என்கின்ற அந்த உணர்வு அடிப்பட்டுப் போய்விடுகின்றது. யாரோ ஒரு சிலருக்காக சங்கங்கள், நிறுவனங்கள், இயக்கங்கள் என்கின்ற பெயரால் இன்றைக்கு ஏற்பட்டு சாதிப் பூசல்களின் காரணமாக அதை மற்ற எதிரிகள் பயன்படுத்திக் கொண்டு ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளும்போது இரண்டு ஆடுகள் மோதிக் கொள்ளும்போது சுலபமாக ரத்தம் குடிக்கின்ற ஓநாய்களைப் போல் இன்றைக்கும் சில சாதிகள் நாட்டிலே இருக்கின்றன என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. அவர்களிடத்திலே எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ராவ் பகதூர் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுடைய புகழ் ஓங்குக, பரவுக, அவருடைய எண்ணங்கள் வென்றிடுக, அவருடைய கொள்கைகள் உறுதியோடு வென்றிடுக, அதற்காக நாம் பரவலாக முயற்சிகளை மேற்கொண்டு பாடுபடுவோம், அந்த உறுதியை இங்கே மேற்கொள்வோம் என்று கூறிவிடை பெறுகிறேன்.

***– முதலமைச்சர் கலைஞர் அவர்கள்***
***15–8–2000 அன்று ரெட்டைமலை சீனிவாசன்***
***நினைவு அஞ்சல்தலையினை வெளியிட்டு***
***ஆற்றிய உரையிலிருந்து...***

• • •

# அரசின் அரும் செயல்களில் தொழிற்சாலைகள் பங்கேற்க வேண்டும்

**– முதலமைச்சர் கலைஞர்**

தமிழகத்தில் பிராக்ஸ்ஏர் கம்பெனி திருப்பெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் ஒரு நாளைக்கு 150 டன் எடையுள்ள வாயுக்களை காற்றிலிருந்து பிரித்தெடுக்கும் தொழிற்சாலையை அமைத்துள்ள நிகழ்ச்சி இன்றைக்கு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 60 கோடி ரூபாய் முதலீட்டில் அமைந்துள்ளது இந்தத் தொழிற்சாலை. இதற்கு மூலப்பொருள் எதுவும் தேவையில்லை. காற்று ஒன்றே போதும். காற்றுதான் இந்தத் தொழிற்சாலைக்கு மூலப்பொருள். காற்றிலிருந்து ஆக்ஸிஜன், நைட்ரஜன், ஹைட்ரஜன், கார்பன்-டை-ஆக்சைடு ஆகிய வாயுக்களையும், தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வேறுபிற வாயுக்களையும் காற்றிலிருந்து பிரித்து உற்பத்தி செய்வதுதான் இந்தத் தொழிற்சாலையினுடைய நிலை. எனவே தான் இத்தொழிற்சாலைக்கு மூலப்பொருள் எதுவும் தேவையில்லை என்று சொன்னேன்.

இத்தொழிற்சாலை முக்கியமாக இத்தொழில் வளாகத்தில் அமைந்துள்ள செயின்ட்கோபைன் கண்ணாடித் தொழிற்சாலையின் தேவையை நிறைவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அமைந்துள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் வாயுக்களை தயாரித்து வழங்கும். இத்தொழிற்சாலை ஆண்டுக்கு 43 ஆயிரத்து 200 டன் எடையுள்ள நைட்ரஜன் வாயுவையும், 12 ஆயிரம் டன் எடையுள்ள திரவ நைட்ரஜனையும், 36 ஆயிரம் டன் எடையுள்ள திரவ ஆக்ஸிஜனையும், 124 டன் எடையுள்ள ஹைட்ரஜன் வாயுவையும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டுள்ளது.

இத்தொழிற்சாலையும், இதன் இயக்கத்திற்காக அமைக்கப்பட்டுள்ள ஐந்து மெ.வா. உற்பத்தித் திறனுள்ள துணை மின்நிலையம் ஒன்றும் (21.8.2000) திறக்கப்படுகின்றன. இவைதவிர, ஓசூரில் ''சுந்தரம் ஃபாஸ்ட்னர்ஸ்'' தொழிற்சாலையில் ஒரு பிரிவையும், அம்பத்தூர், கோவை ஆகிய இடங்களில் மாதம் 40,000 சிலிண்டர்களில் வாயுக்களை நிரப்பும் தொழிற்சாலைகளையும் இந்நிறுவனம் அமைத்துள்ளது. கும்மிடிப்பூண்டியில் Dissolved acetylene தொழிற்சாலையையும் அமைத்துள்ளது.

சென்னையில் மட்டும் பிராக்ஸ்ஏர் கம்பெனிகள் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவமனைகளுக்கு உயிர்காக்கும் மருத்துவ ஆக்ஸிஜன் வாயு வழங்கப்படுகிறது. சென்னை அப்போலோ மருத்துவமனையில் உடனுக்குடன் ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் வழங்கப்படுவதற்காக பிராக்ஸ்ஏர் இருப்புக் கிடங்கு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது என்பது முக்கியமான செய்தியாகும். இந்நிறுவனம் தயாரிக்கும் வாயுக்களை விநியோகம் செய்வதற்காக தமிழகம் முழுவதும் பெரிய அளவிலான 25 விநியோகிப்பாளர்கள் உள்ளனர்.

பிராக்ஸ்ஏர் நிறுவனம் மொத்தம் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழகம் முழுவதும் பல்வேறு தொழிற்பிரிவுகளை அமைத்துள்ளது. இவற்றின் மூலம் தமிழகத்தில் ஏறத்தாழ 2000 தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

### விண்ணப்பம் கிடைத்த ஒரு மாதத்தில் 5 ஏக்கர் நிலத்தை சிப்காட் வழங்கியது

இந்தத் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழில் வளாகத்தில் பிராக்ஸ்ஏர் தொழிற்சாலையை அமைப்பதற்காக 28.4.1998 அன்று இந்நிறுவனத்தினால் முதல் விண்ணப்பம் அளிக்கப்பட்டது. அந்த விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய இதர விவரங்கள் விடுபட்டிருந்தமையால் அவற்றையும் சேர்த்து 17.7.1998 அன்று விண்ணப்பம் முழுமையாக சிப்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த விண்ணப்பம் கிடைத்த ஒரு மாத காலத்திற்குள், அதாவது 11.8.1998 அன்று சிப்காட் நிறுவனம் பிராக்ஸ்ஏர் தொழிற்சாலை அமைத்திட 5 ஏக்கர் நிலத்தினை வழங்கியது என்பதுதான் குறிப்பிடத்தக்கது. விரைவாக தொழில் வளர்வதற்கான ஆர்வம் கொண்ட அரசு இது என்பதற்கு அடையாளமாகத்தான் விண்ணப்பம் கிடைத்த ஒரு மாதக் காலத்திற்குள்ளாக இந்தத் தொழிற்சாலை அமைப்பதற்காக ஐந்து ஏக்கர் நிலத்தை அரசு வழங்கியிருக்கிறது. பிராக்ஸ்ஏர் கம்பெனிக்கு தினமும் தேவைப்படும் 65,000 லிட்டர் தண்ணீரையும் சிப்காட் நிறுவனம் வழங்குகிறது.

பிராக்ஸ்ஏர் கம்பெனி திருப்பெரும்புதூருக்கு அருகில் உள்ள போண்டூர் கிராமத்தினை தத்து எடுத்துக் கொண்டு அதன் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அதற்குரிய தொடக்க விழாவும் இன்று (21.8.2000) காலையில் நடைபெற்றுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பொது மருத்துவம், குடிநீர் வசதி, கல்வி வளர்ச்சி, துப்புரவு ஆகிய முக்கியமான பணிகள் இக்கிராமத்தில் பிராக்ஸ்ஏர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளன.

இது ஒரு நல்ல முன்னுதாரணம். இதைப் போல ஒவ்வொரு தொழிற்சாலையும் பக்கத்திலே உள்ள கிராமங்களைத் தத்து எடுத்துக் கொண்டு அந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கு துணை நிற்பார்களேயானால் அது பெரிதும் பாராட்டி வரவேற்கத் தக்க ஒன்றாகும்.



அரசாங்கத்தினுடைய பணியைப் பங்கிட்டுக் கொள்கின்ற இந்த அரும் செயலை நான் வரவேற்கிறேன். இது தொடரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இதைத் தொடர்ந்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையிலிருந்து...

இந்தியா உட்பட 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் பிராக்ஸ்ஏர் நிறுவனம் தொழிற்சாலைகளை அமைத்து வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்வது மகிழ்ச்சியளிக்கிறது.

உலகின் மிகச் சிறந்த 500 தொழில் நிறுவனங்களில் ஒன்றாக பிராக்ஸ்ஏர் கம்பெனி விளங்குவது பாராட்டுக்குரியதாகும். பிராக்ஸ்ஏர் நிறுவனம் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துகிறது. சுற்றுப்புறச் சூழல்களைப் பாதுகாக்கிறது. உற்பத்தியாகும் பொருள்களின் தரத்தினை உயர்த்துகிறது.

60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 150 டன் எடையுள்ள வாயுக்களை உற்பத்தி செய்யும் . இது குறிப்பாக, இந்த வளாகத்தில் அமைந்துள்ள செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலையின் தேவைகளை நிறைவு செய்வதுடன் வேறு பல தொழிற்சாலைகளின் தேவைகளையும் ஈடுசெய்கின்றது.

இந்த தொழிற்சாலைக்குத் தேவைப்படும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (SIPCOT) அளித்துள்ளது.

**தமிழக அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் இணைய தளம்**

தொழில் முனைவோர்களுக்கும், தொழில் முதலீட்டாளர்களுக்கும் வாய்ப்பளிக்கும் மிகச் சிறந்த இடமாகத் தமிழகம் விளங்குவது நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இது இந்த அரசின் தொழில் முன்னேற்றத்தை விரும்பும் ஒளிவு மறைவற்ற வெளிப்படையான கொள்கையின் மூலமே நிகழ்ந்துள்ளது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் ஏற்கெனவே முதலிடத்தைப் பெற்றுள்ளது. தொழில் முனைவோர் உலகம் முழுவதிலும் இருந்து தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதற்கு மேலும் ஒரு ஆதாரத்தை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (GUIDANCE BUREAU) இணைய தளம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

அதில், தமிழகத்தைப் பற்றிய புள்ளி விவரக் குறிப்புகள், உள்கட்டமைப்பு மேம்பாடுகள், மாநில அரசின் கொள்கைகள், தகவல் தொழில்நுட்பக் கொள்கை, பல்வேறு நிறுவனங்கள் வழங்கி வரும் உதவிகள், புதிய முதலீடுகள் விவரம், ஒற்றைச் சாளர வசதி, தொடர்புடைய பிற விவரங்கள் - ஆகியன இந்த இணையத்தளத்தில் இடம் பெற்றுள்ளன.

இந்த இணையத் தளத்தினை நாள்தோறும் உலகம் முழுவதிலும் இருந்து ஏறத்தாழ 1250 தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்கள் பார்வையிடுகின்றனர். இந்த எண்ணிக்கை ஒவ்வொரு மாதமும் அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் 37 நாடுகளைச் சேர்ந்த 29 ஆயிரத்து 22 தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களால் இத்தளம் பார்வையிடப்பட்டுள்ளது. சில முக்கிய நாடுகளிலிருந்து இந்த இணைய தளத்தினைப் பார்வையிட்ட தொழில் முனைவோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 6,759 |
| இந்தியா | 2,436 |
| சிங்கப்பூர் | 442 |
| சுவிட்சர்லாந்து | 326 |
| மலேசியா | 273 |
| ஜப்பான் | 172 |
| பிரான்ஸ் | 141 |
| ஜெர்மனி | 121 |
| இத்தாலி | 116 |

2000 ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்த இணையத் தளத்தை தொடர்பு கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இம்மாதம் 13-ஆம் தேதி வரை 15,377 பேர் இந்த இணையத் தளத்தினைப் பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு உலக அளவில் பெருகிவரும் ஆர்வத்தினை இந்தத் தகவல்கள் உறுதி செய்கின்றன.

**- திருப்பெரும்புதூர் சிப்காட் வளாகத்தில் 'பிராக்ஸ்ஏர்' நிறுவனத்தை 21-8-2000 அன்று தொடங்கிவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...**

தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு 1989–91 கால கட்டத்தில் அப்போதைய அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழகம் இந்தியாவில் மூன்றாம் இடத்தை அடைந்திருந்தது.

1991–96–ஆம் ஆண்டுகளில் கடந்த கால ஆட்சியின்போது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி, ஐந்தாம் இடத்திற்கு இறங்கிவிட்டது.

1996–இல் கலைஞர் அரசு மீண்டும் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர், தொழில் வளர்ச்சிக்குத் தொடர்ந்து அளித்து வரும் ஆக்கம், ஊக்கம் ஆகியவற்றின் காரணமாக தமிழகம் தொழில் வளர்ச்சியில் மீண்டும் தலைநிமிர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது.

22.5.2000 அன்றைய நிலையில் ''இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்" C.M.I.E. - Centre for Monitoring Indian Economy வெளியிட்ட அறிக்கையின்படி 1 இலட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது.

அண்மையில் 21.7.2000 அன்று ''இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்" C.M.I.E. - Centre for Monitoring Indian Economy இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ள அறிக்கையின்படி தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் என்னும் நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

1 இலட்சத்து 60 ஆயிரத்து 804 கோடியே 40 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று தமிழ்நாடு முதலிடம்

(இது ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ள இந்தியாவின் மொத்த முதலீட்டில் 12.07 சதவீதம் ஆகும்)

1 இலட்சத்து 58 ஆயிரத்து 410 கோடியே 30 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று மராட்டியம் இரண்டாம் இடம் (11.89 சதவீதம்)

1 இலட்சத்து 38 ஆயிரத்து 135 கோடியே 20 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று குஜராத் மூன்றாம் இடம் (10.37 சதவீதம்)

1 இலட்சத்து 32 ஆயிரத்து 44 கோடியே 40 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று ஆந்திரம் நான்காம் இடம் (9.11 சதவீதம்)

1 இலட்சத்து 12 ஆயிரத்து 373 கோடியே 40 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று ஒரிசா ஐந்தாம் இடம் (8.44 சதவீதம்)

99 ஆயிரத்து 564 கோடியே 45 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று கர்நாடகம் ஆறாம் இடம் (7.47 சதவீதம்)

அகில இந்தியாவினுடைய மொத்த முதலீடு 21.7.2000 அன்று 13 இலட்சத்து 32 ஆயிரத்து 54 கோடியே 85 இலட்ச ரூபாய். அதிலே தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் மட்டும் 1 இலட்சத்து 60 ஆயிரத்து 804 கோடியே 40 இலட்ச ரூபாய்.

1996, மே மாதத்தில் நிலவிய முதலீடுகளைக் கவனித்தால் அகில இந்தியாவிலும் முதலீடு 10 இலட்சத்து 72 ஆயிரத்து 753 கோடி ரூபாய். அப்பொழுது தமிழகத்தில் முதலீடு 90 ஆயிரத்து 650 கோடி ரூபாய். அது அப்பொழுது இந்தியாவின் மொத்த முதலீட்டில் 8.45 விழுக்காடு.

ஏறத்தாழ இந்த நான்காண்டுகளில் இந்திய அளவில் முதலீடுகளில் ஏற்பட்ட உயர்வு 2 இலட்சத்து 59 ஆயிரத்து 301 கோடியே 85 இலட்ச ரூபாய். இதில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள உயர்வு 70 ஆயிரத்து 154 கோடியே 40 இலட்ச ரூபாய்.

ஆக, ஏறத்தாழ நான்காண்டுகளில் அகில இந்தியாவிலும் தொழில் முதலீடுகளில் ஏற்பட்டுள்ள உயர்வில், தமிழகத்தின் பங்கு 27.06 விழுக்காடு ஆகும். இதன் மூலம் தொழில் முதலீடுகளில் தமிழகம் இந்திய அளவில் முதலிடம் என ஏற்கெனவே பெற்றுள்ள நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது விளங்கும்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

**தி எக்னாமிக் டைம்ஸ்**

'தி எக்னாமிக் டைம்ஸ்' நாளேட்டில் 8–ஆம் தேதி வந்துள்ள கட்டுரையின் தமிழாக்கம் :

தொழில் முதலீடு செய்வதில் மாநிலங்களுக்கிடையே கடும் போட்டி நிலவி வரும் இத்தருணத்தில், மகாராஷ்டிரர்வை முந்திக் கொண்டு பெரும் இடைவெளியுடன் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. மகாராஷ்டிராவைவிட தமிழகம் ரூ.2394 கோடி அதிக முதலீடு செய்துள்ளது.

இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் முதலீடுகள் குறித்து கடைசியாக ஒரு

# இந்தியப் பொருளாதார மையம் - 'எக்னாமிக் டைம்ஸ்' ஏடு தகவல்

அட்டவணையினை வெளியிட்டுள்ளது. அதில் இவ்வாண்டு ஜூலை 31 வரையிலான முதலீடுகள் உள்ளன.

அதன்படி, தமிழ்நாடு ரூ.1,60,804 கோடி முதலீட்டுடன் முதலிடத்தில் உள்ளது.

மகாராஷ்டிரா இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு அதன் முதலீடு ரூ.1,58,410 கோடி என்ற அளவில் உள்ளது. அதையடுத்து, குஜராத் உள்ளது. (அதன் முதலீடு ரூ.1,38,135 கோடி). ஆந்திர மாநிலம் தொடர்ந்து நான்காவது இடத்தில் உள்ளது. அதன் முதலீடு ரூ.1,33,535 கோடி. அதைத் தொடர்ந்து ஒரிசா மாநிலம் உள்ளது. அதன் முதலீடு ரூ.1,12,373 கோடி.

மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், கர்நாடகம் தனது முதலீட்டை ரூ.96,564 கோடியாக அதிகரித்துக் கொண்டுள்ளது.

பீகார் மாநிலம் ரூ.44,600 கோடியாகவும், கேரளாவில் ரூ.43,132 கோடியாகவும், உத்திரபிரதேசத்தில் ரூ.74,271 கோடியாகவும் அதன் முதலீடுகள் உள்ளன.

ஏப்ரல் 30–ஆம் தேதி இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தில் வெளியான பட்டியல்படி, மகாராஷ்டிரம் ரூ.1,57,236 கோடி முதலீட்டுடன் முதலிடத்தில் இருந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் ரூ.318 கோடி குறைவாக அதாவது ரூ.1,56,918 கோடி முதலீட்டில் இரண்டாவது இடத்தில் இருந்தது. அதை வைத்து பார்க்கும் போது தமிழகத்தின் இப்போதைய வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.

அப்போதிருந்து தமிழகமும், மகாராஷ்டிரமும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் முதலீடுகளை உயர்த்தத் தொடங்கின. அவைகளுக்கிடையே நடந்த இந்தப் போட்டியில் தமிழகம் வெற்றி பெற்று, ரூ.2,394 கோடி வித்தியாசத்தில் முன்னணிக்கு முதலிடத்திற்குச் சென்றுவிட்டது.

அதுவுமின்றி, நடைமுறைப்படி பார்த்தால் தமிழகத்தில் ரூ.3,886 கோடி கூடுதலாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதே சமயம், மகாராஷ்டிரா மாநிலம் ரூ.1,174 கோடியளவிற்கே கூடுதலாக முதலீடுகளைச் செய்துள்ளது.

கர்நாடாகவில் புதிய முதலீடுகள் ரூ.2,384 கோடியாகவும், ஆந்திராவில் ரூ.1,496 கோடியாகவும் உள்ளன.

அதேசமயம், ஏப்ரல் – ஜூலை மாதங்களுக்கிடையே முதலீடுகளைப் பொறுத்தவரையில் குஜராத்தில் ரூ.805 கோடியும், கேரளாவில் ரூ.1,266 கோடியும் குறைந்துள்ளது ஆச்சரியப்படக்கூடியதாகும்.

★ ★ ★

## மனிதனுடைய மதிப்பு எவ்வளவு?

ஒரு சிஷ்யன் தன் குருவிடம் சென்று, "குருவே! ஒரு மனிதனுடைய மதிப்பு எவ்வளவு என்பதை நீங்கள் கூறமுடியுமா?" என்று கேட்டுக் கொண்டான்.

குரு அந்த சிஷ்யனிடம் ஒரு விலையுயர்ந்த வைரக்கல்லைக் கொடுத்து, "இதை பல வியாபாரிகளிடம் காண்பித்து இதற்கு அவர்கள் எவ்வளவு விலை கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பதை கேட்டறிந்து வா. ஆனால் இதை யாருக்கும் விற்று விடாதே" என்று சொல்லி அனுப்பினார்.

அந்த சிஷ்யன் ஒரு ஆரஞ்சுப்பழ வியாபாரிடம் சென்று அந்த வைரக்கல்லை காண்பித்து, "இதை நான் விற்க விரும்புகிறேன். இதற்கு நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்?" என்று கேட்டான்.

"இதற்கு நான் இரண்டு ஆரஞ்சுப் பழங்களைக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்று அந்த ஆரஞ்சு பழ வியாபாரி கூறினார்.

ஒரு உருளைக்கிழங்கு வியாபாரி நான்கு கிலோ உருளைக்கிழங்குகளைக் கொடுப்பதாக கூறினார்.

சிறிய தங்க நகைகளைச் செய்து வரும் ஒரு சாதாரண ஆசாரி அதற்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்.

பலவிதமான விலையுயர்ந்த வைரக்கற்களை விற்றுவரும் மிகப் பெரிய வைர வியாபாரி அந்த வைரக்கல்லை நன்கு பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "இது அபூர்வமாகக் கிடைக்கும் ஒரு விலையுயர்ந்த வைரக்கல். இதற்கு எவ்வளவு விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம்" என்று கூறினார்.

அந்த சிஷ்யன் தன் குருவிடம் திரும்பிச் சென்று நடந்த அனைத்தையும் எடுத்துச் சொன்னான்.

குரு சிஷ்யனைப் பார்த்து, "இப்போது நீ மனிதனின் மதிப்பு எவ்வளவு என்பதைத் தெரிந்து கொண்டிருப்பாய். ஒருவன் தன்னை இரண்டு ஆரஞ்சுகளுக்கும் விற்றுக்கொள்ளலாம். நான்கு கிலோ உருளைக்கிழங்குகளுக்கும் விற்றுக்கொள்ளலாம், ஆயிரம் ரூபாய்க்கும் விற்றுக்கொள்ளலாம். ஆனால் மனிதன் விலைமதிக்க முடியாத ஒரு சிறந்த வைரம். அவன் தன்னை மலிவாக இழந்துவிடக்கூடாது" என்று கூறினார்.

தகவல் : பிரமிப்பூட்டும் அரிய தகவல்கள் நூலிலிருந்து...

இந்த விழாவில் மண்ணின் மைந்தனாகி நான் கலந்து கொள்கின்றேன் என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். மண்ணின் மைந்தன் என்பது நாகப்பட்டின மாவட்டத்திற்கும் அதிலே உள்ள திருக்குவளைக்கு மாத்திரம் உரியதல்ல. அப்படித்தான் என்று நான் சொன்னால், நான் நாகப்பட்டினத்திற்கும், திருக்குவளைக்கும் முதலமைச்சர் ஆவேனே தவிர, தமிழ்நாட்டு முதலமைச்சராகக் கருத முடியாது. எனவே தமிழ்நாட்டு மண்ணுக்கு மைந்தனாக இருந்து சிறப்பாக நாகை மண்ணையும் கவனித்துக் கொள்வேன் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கவி காளமேகத்திடம் இளைஞர்கள் செய்த குறும்பு**

கவி காளமேகம் ஒருமுறை நாகப்பட்டினத்திற்கு இரவு நேரத்தில் வந்து தனக்கு உணவு தேவை என்பதற்காக, எங்கே உணவு கிடைக்கும் என்று தேடி அலைந்த பொழுது யாரோ சொன்னார்கள், அந்தக் கோவிலில் உணவு வீற்கிறார்கள். அங்கே போய் வாங்கிச் சாப்பிடலாம் என்று. அதைக் கேட்ட காளமேகம் அந்தக் கோவிலுக்கு அருகே வந்தார். அங்கே நிலவு ஒளியில் நான்கைந்து பாலகர்கள், இளைஞர்கள் பாக்குகளை வைத்து கோலி விளையாடிக் கொண்டிருந்தார்கள். காளமேகத்தைப் பார்த்ததும் சிறுவர்களுக்கு இவர் கொஞ்சம் துடிப்பான புலவராயிற்றே இவரிடம் கொஞ்சம் குறும்பு செய்து பார்க்கலாம் என்று அவர்களும் தயாரானார்கள். காளமேகம் அந்தப் பையன்களைப் பார்த்து “தம்பீ, சோறு எங்கே விக்கும்?” (விற்கும்) என்று கேட்டார். அதற்கு ஒரு பையன் “சோறு தொண்டையில் விக்கும்” என்று சொன்னான்.

காளமேகத்திற்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அந்த மதில் சுவரில் எழுதினார். அதாவது சாபம் இட்டார். ‘பாக்கடிக்கும் பாலகருக்கு நாக்கு’ என்று எழுதும் பொழுது கோவிலிலே மணி அடித்து விட்டது. உடனே ‘பாக்கடிக்கும் பாலகருக்கு நாக்கு...’ என்று எழுதியதை அப்படியே விட்டுவிட்டு அவசர அவசரமாக கோவிலுக்குப் போய்விட்டார். உடனே அந்தப் பையன்கள் அவர் எழுதி இருப்பதைப் பார்த்தார்கள். ‘பாக்கடிக்கும் பாலகருக்கு நாக்கு’ என்று எழுதி இருந்தார் அல்லவா? அதை அந்தப் பாலகர்களே பூர்த்தி செய்தார்கள். “பாக்கடிக்கும் பாலகருக்கு நாக்கு...” “தமிழ் மணக்கும் நன்னாகை” என்று எழுதினார்கள். அதாவது பாக்கடிக்கும் பாலகரின் நாக்குகூட தமிழ் மணக்கும் என்று எழுதினார்கள். அப்படிப்பட்ட நாகப்பட்டினத்தில் நிஜாமுகைதீனைப் போன்றவர்கள் நல்ல தமிழில் பேசி ஆட்சியைப் பாராட்டியது ஒன்றும் வியப்பில்லை. எனவே அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன். அவரால் சட்டசபையிலே இப்படிப் பேச முடியாவிட்டால்கூட வாக்களித்த உங்களிடம் வந்து உண்மையைச் சொல்லித்தானே தீர வேண்டும் என்ற அளவில் அந்த உண்மைகளையெல்லாம் இங்கே சொல்லி இருக்கிறார். அவருக்கு மீண்டும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

# நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திறப்புவிழா

இன்றைக்கு தமிழகத்தில் 67–க்குப் பிறகு நான்காவது முறையாக இந்த ஆட்சி அமைந்த பிறகு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கான 10 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றது. இந்த ஆட்சி வந்த பிறகு எத்தனை மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன. அறிவிக்கப்பட்ட மாவட்டங்களுக்கெல்லாம் எவ்வளவு விரைவாக இந்த ஆட்சியிலே கட்டடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவும் ஆக்கபூர்வமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

உங்களுடைய மனதிலே எங்களைப் பற்றி வேறு எண்ணங்கள் இருந்தால் அதனைச் சற்று ஒதுக்கிவைத்துவிட்டு நல்ல காரியங்கள் நடைபெறுகின்றனவா? இல்லையா? என்று நடுநிலையோடு சிந்திக்க வேண்டும். இன்று காலையிலேயே தம்பி கோ.சி.மணி கடற்கரையைப் பார்த்துவிட்டு வரலாம் வாருங்கள் என்று என்னை அழைத்தார். எதற்கு என்று கேட்டேன். அதற்கு அவர் நமக்கு நாமே திட்டத்தின்படி அந்த கடற்கரை அழகுபடுத்தப்பட்டிருக்கிறது. அதனை வந்து பாருங்கள் என்றார். இந்த கடற்கரை சென்னை கடற்கரையைப் போல அவ்வளவு நீளமான, அழகான கடற்கரை இல்லை. உலகப் புகழ்பெற்ற கடற்கரை அல்ல. சிறிய அளவில் இருந்தாலும்கூட கடற்கரை கடற்கரைதான். அந்த கடற்கரைகூட எவ்வளவு அசிங்கமாக, ஆபாசமாக அருவருக்கத்தக்க வகையிலே ஒரு காலத்திலே இருந்தது என்பதை நானும் பார்த்திருக்கிறேன். நீங்களும் பார்த்திருக்கிறீர்கள்.



காரியங்களை இந்த அரசு மறவாமல் அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாமல் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும், தொடர்ந்து செயல்படுவது என்கின்ற அந்த எண்ணத்தோடு இந்த காரியங்கள் இன்றைக்குத் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாத்திரம், நிறைவேற்றப்பட்டுள்ள சில முக்கிய பணிகளை எடுத்துக் கொள்வீர்களேயானால், இன்றைக்கு உள்ள நிலையில் நான் சொல்லுகின்ற புள்ளி விவரம், இருபத்தேழு கோடியே அறுபத்து மூன்று இலட்ச ரூபாய் செலவில் 8,844 ஆதிதிராவிட குடும்பத்தினருக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நான் சொல்லுகின்ற கணக்கு தமிழ்நாடு முழுவதும் அல்ல, இந்த நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மாத்திரம் சொல்லுகின்ற கணக்கு. இந்த மாவட்டத்தில் 1996–ஆம் ஆண்டில், இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வெளியிடப்பட்ட முதல் ஆணை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். தரைவரி ரத்து செய்யப்பட்டதாகும். அதிலே இலாபம் அடைந்தவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திலே மாத்திரம் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 335 பேர். திருக்குவளை, கீழ்வேளூர் ஆகிய இடங்களைத் தலைநகரமாகக் கொண்டு புதிய வட்டங்கள் உருவாக்கப்பட்டது. புதிய வட்டங்களுடைய பயன்கள் மிக நன்றாக தெளிவாக உங்களுக்குத் தெரியும்.

இன்றைக்கு இந்த சிறிய கடற்கரையைக் கூட சிங்காரமாக, சுத்தமானதாக, தூய்மையானதாக வைத்திருக்கக்கூடிய ஒரு நிலை நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முயற்சியினால், நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ஏற்பட்டிருக்கிறதென்றால், இப்படித்தான் தமிழகத்திலே பல காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நடக்காததை சுட்டிக்காட்டி, இது நடக்கவில்லையே நடக்கவில்லையே என்று சுட்டிக்காட்டலாம். அதுவேறு விவகாரம். எவ்வளவு பரந்த விரிந்த மாநிலம் தமிழ்நாடு என்பது உங்களுக்குத் தெரியும். ஆறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழுகின்ற தமிழகத்தில் ஐந்து கோடி மக்களுடைய ஆசைகளை நிறைவேற்றுகின்ற நேரத்திலே, ஒரு கோடி மக்களுடைய ஆசைகள் நிறைவேறாமல் இருக்கலாம். அதற்காக எல்லாமே நிறைவேறவில்லை என்று யாரும் சொல்லமுடியாது. ஆறு கோடி மக்கள் வாழுகின்ற மாநிலத்திலே ஒரு கோடி மக்களுக்குக்கூட நல்லகாரியங்கள் செய்யாமல், ஐந்தரை கோடி மக்களைக் கஷ்டப்படுத்துகின்ற காரியங்களைச் செய்து கொண்டிருந்தால், அதற்குப் பெயர் ஆட்சி அல்ல. அந்த ஆட்சி நல்ல ஆட்சியாகாது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

### தொலைநோக்கோடு செய்ய வேண்டிய பணிகளை இந்த அரசு தொடர்ந்து செய்கிறது

எனவே தான் ஒரு சிறிய உதாரணமாகச் சொன்னேன், நாகப்பட்டினம் கடற்கரையிலே இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அழகு, அங்கே நடப்பட்டிருக்கின்ற செடிகள் எல்லாம் இன்னும் நான்கு ஐந்து ஆண்டு காலத்தில் மரங்களாக ஆனால், எவ்வளவு குளிர் தரும் சோலையாக அந்த இடம் மாறும் என்பதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று நடப்பதற்கு, நாளை நடப்பதற்கு அல்ல ஒரு அரசாங்கத்தின் காரியங்கள், ஆக்கபூர்வமான காரியங்கள் என்றால், தொலை நோக்கத்தோடு செய்யப்பட வேண்டிய

### அடிக்கல் நாட்டப்பட்ட 57 பணிகளும் உடனடியாகத் துவங்கும்

இன்றைக்கு இந்த விழாவில், 18 கோடியே 75 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 174 கட்டடங்களும், வேறு பல திட்டங்களும் இன்றைக்குத் தொடங்கி வைக்கப்படுகின்றன. 5 கோடியே 85 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கும், செயல்படுத்தப் படவுள்ள திட்டங்களுக்கும் 57 அடிக்கற்கள் இன்றைக்கு நாட்டப்படுகின்றன. இந்த ஆட்சியிலே அடிக்கல் நாட்டப்பட்டால் அது உடனடியாக வேலை துவங்குவதற்காக நாட்டப்படுவதே தவிர, அந்த அடிக்கல்லை எங்கேயாவது நட்டுவைத்து, எதிர்காலத்திலே அதை காத்தவராயன், முனியன் என்று வணங்கக்கூடிய அளவிற்கு அப்படி அந்தக் கல்லை நாங்கள் யாரும் பாவிப்பதில்லை. உடனடியாக இந்த 57 பணிகளும் துவங்கும். 4 கோடியே 97 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் 6,106 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆக

மொத்தம் இன்று மாத்திரம் 29 கோடியே 58 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகள் இம்மாவட்டத்தில் இன்றைய விழா மூலம் செயலுக்கு வருகின்றன என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன், அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி, வருவாய்த்துறை அமைச்சர் ரகுமான்கான், விளையாட்டுத்துறை அமைச்சர் பழனிச்சாமி, உணவுத்துறை அமைச்சர் நேரு ஆகியோர் இந்த ஆட்சியினுடைய நலத்திட்டங்களை எல்லாம் அவரவர்களுடைய துறையைப் பொறுத்துச் செய்யப்பட்ட காரியங்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இங்கே கோ.சி.மணி பேச எழுந்த பொழுது அனைவரும் கைதட்டி வரவேற்றீர்கள். நான் அப்பொழுது துரைமுருகனிடம் கோ.சி.மணிக்கு எவ்வளவு வரவேற்பு உள்ளது என்று பார்த்தாயா? என்று சொன்னேன். காரணம், அந்த அளவிற்கு உழைக்கின்ற மனிதராக இருக்கின்றார் என்று நான் சொன்னேன்.

அவருடைய உழைப்பின் காரணமாகத்தான் இன்றைக்கு தமிழகத்திலேயே சேரிப்பகுதியானாலும், காலனிப் பகுதியானாலும், குடிசைப் பகுதியானாலும், கோபுரங்கள் போல் வீடுகள் அமைந்திருக்கின்றன. மாடிவீட்டுப் பகுதியானாலும், நடுத்தர வர்க்கப் பகுதியானாலும், உயர்தரவர்க்கப் பகுதியானாலும், அடிமட்டத்தில் உள்ள பகுதியானாலும், அந்தப் பகுதிகளிலே எல்லாம் இன்றைக்கு குடிப்பதற்குப் பாதுகாக்கப்பட்டக் குடிதண்ணீர் 95 சதவிகிதம் பேருக்குக் கிடைக்கிற தென்றால், அது கோ.சி.மணியினுடைய அயராத உழைப்பு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த அளவிற்கு அவர் உழைத்துக் கொண்டிருக் கின்றார். நான் அதுகண்டு உள்ளூர மகிழ்ந்து கொண்டிருக்கின்றேன். வெளிப்படையாக சொல் வதில்லை. இன்றைக்குத் தான் வெளிப் படையாகச் சொல்லுகின்றேன். இதற்கு முன்னால் சொல்லி யிருந்தால், சுணக்கம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும் என்ற பயத்தில் சொல்லாமல் இருந்தேன்.



இந்த மாவட்டத்தில் கடந்த கால ஆட்சிக்கும் இந்த ஆட்சிக்கும் உள்ள ஒரு சில ஒப்பீட்டை மாத்திரம் சொல்கிறேன். யாரையும் குறைத்துப் பேச விரும்பவில்லை. முந்தைய ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில், 65 கி.மீ. தொலைவுள்ள சாலைகள் தான் மேம்படுத்தப்பட்டன. இந்த நான்கு ஆண்டுகளில், 632 கி.மீ. தொலைவுள்ள சாலைகள் மேம்படுத்தப் பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முந்தைய ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் நான்கு பாலங்கள் ஒரு கோடி ஐம்பத்து மூன்று இலட்ச ரூபாய் செலவிலே கட்டினார்கள். ஆனால் இந்த அரசு நான்கு ஆண்டுகளில், நாகப்பட்டினம் மாவட்டத்தில், பதினோரு கோடியே எழுபத்தாறு இலட்ச ரூபாய் செலவில் 21 பாலங்களைக் கட்டியுள்ளது.

பல்வேறு துறைகளுக்குக் கட்டடங்கள் கட்டியதில், கடந்த ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில், இரண்டு கோடியே ஐம்பத்தி இரண்டு இலட்ச ரூபாய் செலவில் முப்பத்து மூன்று கட்டடங்களைக் கட்டியுள்ளது. அப்பொழுது திருவாரூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்படவில்லை. அதனையும் சேர்த்து இந்த வேலைகள் நடைபெற்றுள்ளது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில், இருபத்தி இரண்டு கோடியே எழுபத்தைந்து இலட்ச ரூபாய் செலவில், நூற்று தொன்னூற்றாறு கட்டடங்களை நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் இந்த அரசு கட்டியுள்ளது என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தை நான் தான் துவக்கினேன் என்பது உங்களுக்குத் தெரியும். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் தமிழகத்திலேயே, திராவிட இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு பெரியாரின் தொண்டராக, அண்ணாவுக்கு அன்னையாக எங்களுக்கெல்லாம் தாயாக விளங்கி இந்த தமிழகத்திலே ஆற்றிய சமுதாயத் தொண்டு சாதாரணமானது அல்ல. எனவேதான், அவருடைய பெயரால், ஏழை எளிய வீட்டு பெண்களுக்குத் திருமண உதவி இலவசமாக

வழங்குவது என்ற திட்டத்தை தொடங்கி, அதற்கு மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் என்ற பெயர் சூட்டினேன். ஏழை வீட்டுப் பெண்களுக்குத் திருமணம் என்றால், அவர்கள் எட்டாவது வரை படித்திருந்தால், ஐந்தாயிரம் ரூபாய் நிதியுதவி என்றும், பின்னர் அதனை பத்தாயிரம் ரூபாய் என்றும் உயர்த்தினோம்.

கடந்த ஆட்சியில் அந்த திட்டத்தின்படி, ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து மூன்று பெண்களுக்குத்தான் உதவி அளிக்கப்பட்டது. இந்த நான்கு ஆண்டு காலத்தில், ஏழாயிரத்து நூற்று தொன்னூறு ஏழைப் பெண்களுக்குத் தலா பத்தாயிரம் வீதம் அந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பீடு ஒன்றிலிருந்து ஏற்றத் தாழ்வுகளைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். இதைவிட அதிகமாக நான் விளக்க வேண்டும் என்று விரும்பவில்லை. என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்பதையெல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

**நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்கள்**

இங்கே உழவர் சந்தை தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. தமிழகத்திலே இதுவரையில் 61 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுடைய பொருள்களை அவர்களே விளைவித்து அவர்களே நேரடியாக விற்பனை செய்து, இடைத் தரகர்கள் இல்லாமல் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் காரியம். இந்த உழவர் சந்தையை ஆரம்பித்து, இதுவரையில் 61 உழவர் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ள காய்கறிகளின் எடை மாத்திரம் பத்து கோடியே நாற்பத்தொரு இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து அறுநூற்று ஐம்பத்தெட்டு கிலோ. விற்பனை மதிப்பு அறுபத்தேழு கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து ஏழுநூற்று இருபது ரூபாய். கிட்டத்தட்ட அறுபத்தெட்டுக் கோடி ரூபாய். பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை இலட்சக்கணக்கில். பயனடைந்த நுகர்வோரின் எண்ணிக்கை கோடிக்கணக்கில். இந்த அளவிற்கு இந்த உழவர் சந்தை அனைவருக்கும் உவகை தருகின்ற அளவிற்கு உபயோகமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**வருமுன் காப்போம் –**
**கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

அதைப்போல் வருமுன் காப்போம் திட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில், பாடிய நல்லூரில், 29.11.99–இல் துவங்கப்பட்டுள்ளது. இதுவரையில் நடைபெற்றிருக்கின்ற மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை ஐயாயிரத்து ஐநூற்று நாற்பத்து நான்கு. அதிலே பரிசோதனை செய்து கொண்ட மக்களின் எண்ணிக்கை ஐம்பத்து மூன்று இலட்சம் பேர். இதில் தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து எழுபத்து மூவாயிரம் பேர். இவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு இரண்டு கோடியே அறுபத்து ஐந்து இலட்சத்து அறுபத்தாறாயிரத்து முன்னூற்று பதிநான்கு ரூபாய்.

மனிதர்களுக்கு வருமுன் காப்போம் திட்டம் இருந்தால் போதுமா? கால்நடைகளுக்கு வருமுன் காப்போம், வந்தபின் காப்பதும் நமது கடமையல்லவா? எனவேதான் கால்நடைகளுக்கும், இந்த திட்டத்தை விரிவுபடுத்தி, இதை காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் 18.1.2000 அன்று தொடங்கி இதுவரையில் நடைபெற்றிருக்கின்ற முகாம் இரண்டாயிரத்து முன்னூற்று எண்பத்தெட்டு. அதிலே பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை அறுபத்து நான்கு இலட்சத்து எழுபத்தாறாயிரம். இந்த அறுபத்துநான்கு இலட்சத்தில், பசுக்கள் பதினாறு இலட்சத்து எண்பத்து நான்காயிரம். எருமைகள் மூன்று இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம், செம்மறி ஆடுகள் பத்தொன்பது இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரம். வெள்ளாடுகள் பன்னிரண்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரம். கோழிகள் பன்னிரெண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரம். இதர கால்நடை இனங்கள் இருபத்து மூன்று ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்று. இந்த கால்நடைகளுக்கு இதுவரை இலவசமாக வழங்கப்பட்ட இந்த முகாம்களில் வழங்கப்பட்ட மருந்துகளின் மொத்த மதிப்பு ஒரு கோடியே பதினாறு இலட்சத்து ஏழாயிரத்து நூற்று ஐம்பத்தைந்து ரூபாய் இவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதைப்போல, பல திட்டங்களை இந்த அரசு அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இதிலே ஓர் அற்புதமான திட்டம் தான் பெரியார் நினைவு சமத்துவபுரத்திட்டம். அதுவும் நூறு என்ற எண்ணிக்கையை நெருங்கத் தொடங்கியிருக்கிறது. அந்த அளவிற்குப் பல்வேறு மாவட்டங்களில், பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உருவாகியுள்ளது. சமத்துவபுரத்தின் நோக்கமே, எல்லோரும் சமத்துவமாக வாழ வேண்டும் என்பதுதான். உயர்ந்த சாதி என்றும், தாழ்ந்த சாதி என்றும்ஒருவருக்கொருவர் பேதம் பாராட்டாமல் அனைவரும் ஒரே இடத்தில் சமமாக வாழவேண்டும் என்பதற்காகப் பாடுபட்ட தந்தை பெரியார் அவர்களின் நினைவாக அந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கின்றோம். இப்படி சமுதாயத் துறையிலும், அரசியல் துறையிலும் ஆக்கப்பூர்வமான காரியங்களைச் செய்கின்ற ஆட்சி இந்த ஆட்சி என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்தி இடையிலே யார் எதைச் சொன்னாலும், அதைக் காதிலே போட்டுக் கொள்ளாமல், காதிலே போட்டுக் கொண்டால் அதைப்பற்றி சிந்தித்து ஆராய்ந்து நல்லது எது கெட்டது எது என்கிற ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு இந்த இனிய விழாவிலே உங்கள் இன்முகங்களையெல்லாம் காண்பதற்கான வாய்ப்பு பெற்றமைக்காக மகிழ்ச்சி அடைந்து இந்த அளவில் விடை பெற்றுக் கொள்கின்றேன்.

*– நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை 27–8–2000 அன்று திறந்துவைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

★ ★ ★

# சங்க இலக்கிய உத்திகள்

□ தமிழரசி

சங்கப் பாடல்கள் அரசவைப் பாடல்களாக விளங்குபவையாகும். இவற்றில் உயர்குடி மக்களின் காதலும் வீரமும் பெரிதும் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. சங்க காலச் சமுதாயம் இனக்குழு வாழ்க்கை மறைந்து பேரரசுகள் உருவான காலகட்டப் பகுதியாகும். எனவே அரசனை மையமாகக் கொண்ட ஒரு சமுதாய அமைப்பாக இக்கால கட்டம் இருந்து வந்தது. அரசனுக்குத் தன் அரசை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டிய தேவையும், பேரரசாக உருவாக்க வேண்டிய தேவையும், இருந்தபடியால் போர் என்பது சமுதாய இயக்கத்தின் இன்றியமையாச் செயலாக இருந்தது. இனக்குழு வாழ்க்கையில் உணவு தேடுவதற்காகவும், தன்னைக் காத்துக் கொள்வதற்காகவும், மனிதன் போராட வேண்டியிருந்தது. ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தின் மேல் தனது தேவைகளுக்காக ஆதிக்கம் செலுத்துவது என்பது இந்த வாழ்க்கையில் இயல்பான ஒன்றாக இருந்தது. இந்தப் பண்பின் மாற்று வடிவத்தையே சங்ககாலப் பகுதியில் காண்கிறோம். ஒரு அரசன் இன்னொரு அரசனின் மேல் ஆதிக்கம் செலுத்துவது; அதற்கு உதவியாக ஒரு கூட்டத்தினரைப் பயன்படுத்திக் கொள்வது என்ற நிலையை இக்காலத்தில் காண்கிறோம்.

இனக்குழு வாழ்க்கையில் வலிமைமிக்கவனும் அனைவர்க்கும் உணவைப் பகிர்ந்தளிக்கக் கூடிய திறன் படைத்தவனும் தலைவனாகக் கருதப்பட்டான். இதன் தொடர்ச்சியாக ஒப்பில்லாத வீரமும் ஆற்றலும் உடையவன் சங்க காலத்தில் சிறந்த அரசனாகக் கருதப்பட்டான். இதன் விளைவாக உடல் வலிமைக்கு இன்றியமையாமை அளிக்கப்பட்டது.

இதனால் போர், வீரம், வலிமை என்பதற்கும் இவற்றையுடைய தலைவனைப் போற்றுதற்கும் முதலிடம் அளிக்கும் சமுதாயமாகச் சங்ககாலச் சமுதாயம் விளங்கியது. மேலும், அரசன் புலவர் உறவு முறையும் அரசு அமைப்பினுள் ஒன்றாக இயங்கியது. புலவரின் வாழ்க்கையியக்கத்திற்கும், அரசனின் செயலியக் கத்திற்கும் அரசனும், புலவரும் ஒருவரையொருவர் சார்ந்து இயங்கினர். அரசனை மையப்படுத்திய இத்தகைய சமுதாய அமைப்பில் அதற்கேற்ற இலக்கிய வடிவத்தையும் உத்தி முறைகளையும் சங்கப் பாடல்கள் பெற்று விளங்குகின்றன.

தலைவனை, அரசனை முன்னிறுத்திப் பாடுவது இப்பாடல்களின் தலையாய உத்தியாக விளங்குகிறது. இந்த முன்னிலைப்படுத்தும் உத்தியின் உடன் விளைவாக உரையாடல் உத்தி அமைகின்றது. இந்த உரையாடல் உத்தியைக் களமாகக் கொண்டே பிற உத்திகள் அனைத்தும் செயற்பட்டுள்ளன. அகம், புறம் என்ற இருவகைப் பாடுபொருளுக்கும் இத்தன்மை அடிப்படையாய் உள்ளது.

சங்க இலக்கிய உத்திகளனைத்தையும் சொல்நிலை உத்திகள், தொடர்நிலை உத்திகள், வருணனை உத்திகள், பொருளமைப்பு உத்திகள் என்ற நிலைகளில் பகுத்துக் காணலாம்.

ஒலிக்குறிப்புச் சொற்கள், தனித் தன்மை வாய்ந்த சொல்லாட்சிகள், எதிர்மறைச் சொல்லுணர்வு, சொற் பொருளுணர்வு மாற்றம், புதிர்ச் சொற்கள், குறியீட்டுச் சொற்கள், இரட்டுற மொழிதல் முதலானவை சொல் நிலையில் கையாளப்படும் உத்திகளாக விளங்குகின்றன.

இவை அனைத்தையும் அடிப் படையில் குறிப்புப் பொருளையும், உணர்வு நிலையையும் விளக்கும் சொற்கள், காட்சிப்படுத்தும் திறனும் உணர்வு நிலையும் கொண்ட சொற்கள் என்று இரண்டாகப் பகுத்துக் காணலாம்.

வினைமுற்றுத் தொடர்கள், வினையெச்சத் தொடர்கள், உம்மைத் தொடர், தொடரமைப்பு மாற்றம், தொடர் மடக்கு, பொருள் மயக்கத் தொடர், மரபுத் தொடர், அந்தாதித் தொடரமைப்பு ஆகிய அனைத்தும் தொடரமைப்பில் கையாளப்படும் உத்திகளாக விளங்குகின்றன. இவை குறிப்பாகவும் வெளிப் படையாகவும் பொருளை உணர்த்துகின்றன.

உவமை, உருவகம், மிகைவருணனை, மிகைக்கற்பனை, பின்புல வருணனை, உருக்காட்சி வருணனை, பொருள் மடக்கு ஆகியன வெளிப்படையாகப் பொருளையுணர்த்தும் வருணனை உத்திகளாகின்றன. இறைச்சி, உள்ளுறை, படிமக் காட்சி, தொகுநிலைக்கிளவி, இனமொழி, குறிப்பெச்சம், இகழ்ச்சிக்குறிப்பு, குறிப்பு முரண் ஆகியன குறிப்பாகப் பொருளையுணர்த்தும் வருணனை உத்திகளாகின்றன.

இவற்றுள் இறைச்சி, உள்ளுறை, படிமக்காட்சி தொகுநிலைக்கிளவி ஆகியன அகப்பொருளுக் குரியவையாகின்றன. இன்மொழியும், குறிப்பெச்சமும் புறப்பொருளுக்குரியவையாகின்றன. இகழ்ச்சிக் குறிப்பு, குறிப்பு முரண் ஆகியவை அகம், புறம் என்ற இரண்டிற்கும் உரியவையாகின்றன.

பாடலின் தொடக்கம், முடிவு, யாப்பமைப்பு, பத்துப்பாட்டுப் பாடல்களின் நீண்ட அமைப்பு ஆகியனவும் உத்திகளாகச் செயல்படுகின்றன. ஆற்றுப்படுத்தும் முறை, முன்னிலைப்படுத்தும் முறை, நிகழ்ந்தது நினைத்தல், நிகழ்வது நினைத்தல், நிகழ இருப்பது நினைத்தல், நிகழ்ந்தது கூறல், சார்த்திக் கூறுதல், கனவு ஆகியன பொருளமைப்பு உத்திகளாகின்றன.

புறப்பாடல்களைக் காட்டிலும் அகப்பாடல்களில் குறிப்பு உத்திகள் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன. காரணம் அகப்பாடல்களில் 'உரையாடல்' என்ற மொழிக்கூறு படைப்பாக்கக் கூறாக உருப்பெற்றுள்ளது. தோழி, தலைவி ஆகியோருக்கும், தலைவனுக்கும் நடக்கும் உரையாடலில் இருவருக்குமிடையே மொழித்தளத்தில் உண்டாகும் இடைவெளி பல்வேறு குறிப்புப் பொருள்கள் தோன்றுதற்குரிய களமாகவும் அமைகின்றது.

புறப்பாடலில் அமையும் உரையாடல் ஆதிக்க சக்தியின் குரல் சார்ந்ததாக உள்ளது. எனவே, உரையாடும் இரு களங்களுக்கிடையே உள்ளது. எனவே உரையாடும் இரு களங்களுக்கிடையே உள்ள இடைவெளி குறைகிறது. இதனால், பாடலின் வழி பெறப்படும் பொருட்களத்தில் வெளிப்படைப் பொருள், குறிப்புப் பொருள் என்ற இருவேறு நிலைகளுக்கு இடமில்லாமல் போயிற்று. ஆயின் ஆதிக்க சக்தியைக் கேள்வி கேட்பதாக அமையும் பாடல்களில் மட்டும் வெளிப்படைப் பொருள், குறிப்புப் பொருள் என்ற இருநிலைகள் உள்ளன.

அகப்பாடல்களில் கையாளப்படும் குறிப்பு உத்திகளில் இறைச்சி, உள்ளுறை என்பன தலையாய இடத்தைப் பெறுகின்றன. இவையே சங்கப்பாடல்களுக்குத் தனித்தன்மையை அளிப்பனவாகவும், உரையாசிரியர் காலம் முதல் இன்று வரை தொடர்ந்த ஆய்வுக்குரியதாகவும் விளங்குகின்றன. கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு உரிப்பொருளை உணர்த்தும் வகையில் உள்ளுறை, இறைச்சி இரண்டும் ஒன்றுபடுகின்றன. ஆயின் பொருளை உணர்த்தும் வகையில் இரண்டும் நுட்பமாக வேறுபடுகின்றன.

உள்ளுறையில் பொருளை உணர்த்தற்குக் கருப்பொருட்கள் ஒரு கருவியாக, ஊடகமாகக் கொள்ளப்படுகின்றன. இறைச்சி எனச் சுட்டப்படுவதில் கருப்பொருட்கள் நேரடியாகத் தாமே நின்று அதற்குப் புறம்பான ஒருபொருளை உணர்த்தும். இப்பொருள் நுட்பமாக உணரும் தன்மையுடையது. உள்ளுறை உட்பொருளை உணர்த்த, சுருங்கச் சொல்லி விளக்க, இலக்கியச் சுவை பயக்க என்ற மூன்று நிலைகளில் செயல் புரிவதாக உள்ளன. இயற்கை வருணனை உள்ளுறையை உணர்த்தும் களனாய் உள்ளது.

அகப்பொருளுக்கேற்ப செய்திகளை மறைமுகமாக உணர்த்தவும், நிகழ்ச்சியோட்டத்திற்கும், கூறிவரும் செய்தியோட்டத்திற்கும் தடையில்லாதவாறும், அதே நேரம் கூறவேண்டிய எல்லாக் கருத்துக்களையும் உணர்த்தற்கும் உள்ளுறை பயன்படுத்தப்படுகின்றது. உள்ளுறைகள் மிகுதியாகத் தோழி கூற்றிலும், அடுத்து தலைவி, தலைவனின் கூற்றுகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாத்திரங்களின் ஆளுமை, செயற்பாடுகள் என்பவற்றிற்கேற்ப இவை அமைந்துள்ளன.

சங்கப் பாடல்களில் அமைந்த உள்ளுறை உவமைகள் அனைத்தையும் தொகுத்துக் காணும் பொழுது அவை அமைப்பு முறையில் நுட்பமான சிறு வேறுபாடுகளைக் கொண்டு விளங்குகின்றன. உள்ளுறைப்படுத்தப்படுதற்கான காரணம் எளிதில் தெளிவாக விளங்கும் வகையில் அமைந்தது ஒரு வகையாக உள்ளது. காரணத்தை உய்த்துணரும் வகையில் அமைந்திருப்பது இரண்டாவது வகையாக உள்ளது.

இறைச்சி தலைவனின் பண்பு தொடர்பாகவும், தோழி தலைவியை ஆற்றுவிப்பதாகவும், தோழி தலைவனைச் செலவழுங்குவிப்பதாகவும், தலைவி தன் ஆற்றாமையை வெளிப்படுத்துவதாகவும், தலைவியை விரைந்து காணவேண்டுமெனும் நெஞ்ச உணர்வை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. தோழி, தலைவி, தலைவன் என்ற மூவரது கூற்றுகளே இவற்றில் இடம் பெற்றுள்ளன. அன்புறு காட்சிகளை விளக்கி அதன் வழி இறைச்சிப் பொருளை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்க தன்மையாக உள்ளது.

அகப்பாடல்களில் கையாளப்படும் உள்ளுறையுவமத்திற்கு இணையாகப் புறப்பாடல்களில் இவ்வரையறை இல்லை, அகப்பொருள் செய்திகளைப் பாத்திரங்கள் தங்களுக்குள் குறிப்பாக உணர்த்திக் கொள்ளும் தன்மையது உள்ளுறை உவமம். புறப்பொருளில் புலவன் தான் மறைமுகமாக உணர்த்த நினைக்கும் எண்ணங்களை இதன் வழி வெளிப்படுத்துகின்றான்.

தமிழிலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தில் பின்பற்றப்பட்ட உள்ளுறையும் பின்வந்த இலக்கியங்கள் எவற்றிலும் பின்பற்றப்படாதது சிந்திக்கத்தக்கதாக உள்ளது. உள்ளுறையும் இறைச்சியும், 'நாட', 'ஊர' என்ற சொற்களுக்கு அடைச்சிறப்பாக அமையும் நாட்டுச்சிறப்பையும், ஊர்ச்சிறப்பையும் மையப்படுத்தி அமைந்துள்ளன. 'போர்ச் சமுதாய' அமைப்பில் தலைவனை ஏற்றிப்பாடும் பண்பின் வெளிப்பாடாக இவ்வாறு முன்னிலைப்படுத்திப் பாடுவது அமைந்துள்ளது. எனவேதான் போர்ச் சமுதாய அமைப்பு மாறிய பின் தோன்றிய இலக்கியங்களில் முன்னிலை விளி இந்த நோக்கத்தில் பயன்படவில்லை. செயல்படவில்லை. சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டதைப் போலவே இறைச்சியும் உள்ளுறையும் பின் வந்த இலக்கியங்களில் பின்பற்றப்படவில்லை. ஆனால், 'உள்ளுறைப் பொருள்' என்பதன் தொடர்ச்சி பல மாற்று வடிவங்களில் பின் வந்த இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது.

சங்க இலக்கியத்தில் காணப்படும் உத்திகள் அனைத்தும் 'உரையாடல் அமைப்பு' என்பதை நிலைக்களனாகக் கொண்டே வினைபுரிகின்றன. முன்னிலைப்படுத்திப் பாடுவது இப்பண்புக்கு அடிப்படைக் காரணமாகின்றது.

தொடர்ந்து வந்த சமுதாய அமைப்பில் சங்க காலத்தில் போற்றப்பட்டது போல காதலும் வீரமும் உயர் சமுதாய மதிப்புகளாகக் கருதப்படவில்லை. போர்ச் சமுதாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அடுத்து வந்த காலகட்டப் பகுதியில் சமண, பௌத்த

சமயசக்திகள் துறவு என்பதற்கு இன்றியமையாமை அளித்ததால், 'வீரம்' என்பது தன்னை ஒறுத்துக் கொள்ளும் வைராக்கிய உணர்வாக மடைமாற்றம் பெற்றது. துறவுக்கு இன்றியமையாமை அளிக்கப்பட்ட மையால் இல்லற வாழ்க்கையும் பெண்ணும் இழிவாகக் கருதப்பட்டனர். ஆக காதல், வீரம் என்ற அடிப்படைச் சிந்தனை மாற்றப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் அதற்கேற்ப இலக்கிய வடிவம், உத்திகள் அனைத்துமே மாற்றம் பெற்றன.

தமிழிலக்கிய வரலாற்றில் பாடுபொருள் விளக்குதல், புலமைத் திறனை விளக்குதல் என்ற இருநோக்கங்களில் உத்திகள் கையாளப்படுகின்றன. சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை பாடுபொருளை விளக்கும் நோக்கிலேயே உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

சங்கப் பாடல்கள் பல புலவர்களால் பாடப்பட்டதாக இருப்பினும் உத்திகளின் பயன்பாட்டில் ஓர் ஒருமைப்பாடு புலனாகின்றது. இலக்கியம், அது அமைய வேண்டிய தன்மை என்பது ஒரு தெளிவான வரையறையைப் புலவர்கள் தங்களுக்குள் கொண்டிருந்தமை இதனால் பெறப்படுகின்றது. கருத்தும் வடிவமும் இயைந்திருக்க வேண்டும் என்ற ஒருமைக் கொள்கை சங்கப் புலவர்களின் தலையாய கொள்கையாக இருந்தது என்பதை உணர முடிகின்றது.

பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோரும் கலை ஒருமையை முதலில் ஒரு கொள்கையாக நிலைநாட்டினர். தொல்காப்பியரும் இதனையே மையச் சிந்தனையாகக் கொண்டிருந்தார். உவம வகைகள், உவமையின் தோற்றம், அதற்கான நிலைக் களன்கள், உள்ளுறை, இறைச்சி முதலானவற்றிற்குக் கொடுக்கப்படும் விளக்கம், ஆகியன இச்சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. தொல்காப்பியரின் இந்த ஒருமைக் கொள்கையை அடியொற்றி சங்கப்பாக்களும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சங்கப் பாக்களில் அகப்பொருளுக்கேற்பச் செய்திகளை மறைமுகமாக உணர்த்தவும், நிகழ்ச்சி யோட்டத்திற்கும், கூறிவரும் செய்தியோட்டத்திற்கும் தடையில்லாதவாறு, அதே நேரம் கூறவேண்டிய எல்லாக் கருத்துக்களை உணர்த்துவதற்கும் உள்ளுறையுவமமும் இறைச்சியும் கையாளப்பட்டுள்ளன. இவை வடிவத்தே இயைந்து பாடலுக்குச் சுருக்கத்தையும், செறிவுத் தன்மையையும் அளிப்பதாக விளங்குகின்றன. பாடலின் தொடக்க, முடிவு ஆகியவற்றுக்கும் இன்றியமையாமை அளிக்கப்பட்டிருப்பதால் அதன் செறிவுத்தன்மை மேலும் கூடுவதாக இருக்கின்றது.

இவ்வாறு பாடுபொருளும் வடிவமும் இயைந்து நிற்றல் வேண்டும் என்பது அவற்றின் தலையாய கொள்கையாக இருப்பதைத் தெளிவாக உணரமுடிகின்றது. சங்கப் பாக்களில் காணப்படும் இந்த 'ஒருமைப்' பண்பே அவற்றைச் 'செவ்வியல் இலக்கியம்' எனக் கருதுவதற்கும் அடிப்படைக் காரணமாகின்றது.

பொதுவாகச் சமன் செய்யும் முறை, நிறைவு, ஒருமைப்பாடு, அளவுத்திட்டம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளைக் கொண்ட இலக்கியத்தைச் சுட்டிக்காட்ட 'செவ்வியல்' என்ற கலைச்சொல் பயன்படுவதாகக் கூறுவர்.

இந்த உத்திகள் அனைத்தும் பொருளை எளிதாக உணர்த்தி கேட்பவர்க்குப் பயன் தருதல் என்பதை மட்டுமே மைய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டமையால் படைப்பவர்க்கும், நுகர்பவர்க்கு மிடையே முரண்பாடற்ற நிலை நிலவியது. பாடலின் பொருளுக்கும் வடிவத்திற்குமிடையே முரண்பாடற்ற நிலையைத் தோற்றுவித்தது.

சங்கப் புலவர்கள் அனைவரும் அரசரைச் சார்ந்து இயங்கினர். உயர்குடி மக்களின் காதலையும் வீரத்தையும் பாடினர். அரசர், புலவர் உறவுமுறை என்பது அரசு அமைப்பினுள் ஒரு கூறாக இணைந்து இயங்கியது. இந்தப் பின்புலத்தின் காரணமாக சங்கப் புலவர் அனைவரிடமும் ஒரு தன்மையாக வெளியீட்டு வரையறைகளைக் காணமுடிகின்றது.

பாடுபொருளுக்கும் வெளிப்பாட்டு முறைக்கும் ஒருமைப்பாடு அமைய வேண்டும்.

பொருளைச் சுருக்கமாகவும், செறிவாகவும் வெளிப்படுத்த வேண்டும்.

நுட்பமான வெளிப்பாட்டு முறைகளைக் கையாள வேண்டும்.

என்பன இவர்களது வெளியீட்டுக் கொள்கைகளாய் அறியக்கிடக்கின்றன.

***நன்றி : சங்க இலக்கியம்***
***வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்***

## நாட்டின் சட்டங்களை மதித்து செயல்பட்டவர்

ஏதென்ஸ் நகர நீதிமன்றம் புகழ்பெற்ற தத்துவ ஞானியான ஸாக்ரடீஸுக்கு (Socrates) மரண தண்டனை வழங்கிவிட்டது.

அவருடைய சீடர்கள் அவரை சிறையில் சந்தித்து அவரை தப்பி ஓடிவிடும்படி கேட்டுக் கொண்டார்கள்.

"நாட்டின் சட்டங்களை மதித்து செயல்பட வேண்டுமென்பதில் நான் முழு நம்பிக்கைக் கொண்டவன். நாட்டின் சட்டங்களை மதித்து செயல்படுபவன்தான், ஒரு நல்ல நாட்டுப் பிரஜையாக இருக்க முடியும். ஏதென்ஸ் நாடு பின்பற்றிவரும் சட்டங்களின் அடிப்படையில் எனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல நாட்டுப் பிரஜை என்ற முறையில் நான் இறக்கத்தான் வேண்டும்" என்று தன் சீடர்களிடம் சொல்லி தப்பி ஓட மறுத்துவிட்டார்.

அவர் விஷம் அருந்தி சாவைத் தழுவினார்.

*தகவல் :* பிரமிப்பூட்டும் அரிய தகவல்கள் நூலிலிருந்து...

# திருவாரூரில் முதல்வர் கலைஞர்

திருவாரூரில் நடைபெறுகின்ற இந்த மகத்தான விழா ஒரு மாநாட்டைப் போல நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் எண்ணிப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று காலையிலே நாகப்பட்டினத்திலே மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத்தைத் திறந்துவைத்துவிட்டு மாலையிலே திருவாரூர் மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைக்கின்ற பெரும்பேறு பெற்றமைக்காக நான் பெரிதும் நன்றி உடையவனாக் இருக்கின்றேன். மகிழ்ச்சி உடையவனாகவும் இருக்கின்றேன்.

இன்று இந்த மாவட்டத்தில் 33 கோடியே 85 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பெரிய கட்டடங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உட்பட நிறைவேற்றப்பட்டுள்ள புதியத் திட்டங்கள் என மொத்தம் 778 பணிகள் மக்கள் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. 37 கோடியே 52 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள 2 ஆயிரத்து 219 கட்டடங்களுக்கும் திட்டப்பணிகளுக்கும் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

மேலும், ஐந்து கோடியே 50 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் 8 ஆயிரத்து 413 பயனாளிகளுக்கு இந்த அரசின் பல்வேறு துறைகள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆக மொத்தம் 76 கோடியே 88 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் இந்த மாவட்டத்தில் இன்றைக்குச் செயல்பாட்டிற்கு வருகின்றன.



தஞ்சை மாவட்டம் இன்றைக்கு தஞ்சை, நாகை, திருவாரூர் என்று மூன்று மாவட்டங்களாகப்



பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட, ஒட்டுமொத்த தஞ்சை மாவட்டம் மூன்று மாவட்டங்களும் இணைந்த தஞ்சை மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதி முக்கியமான பகுதி. இந்தப் பகுதியில் தவழ்ந்து வருகிற காவிரி நதி நல்ல முறையிலே பாதுகாக்கப்பட்டால்தான், பயன்படுத்திக் கொள்ளப்பட்டால்தான் நீண்ட நாட்களுக்கு அதனுடைய பயனை நாம் நுகர முடியும். விரைவாகவும் நுகர முடியும்.

### காவிரி முகத்துவாரத்தில் நடைபெற்ற தூர்வாரும் பணி

ஏறத்தாழ 50 ஆண்டு காலமாக காவிரி முகத்துவாரத்தில் டெல்டா பகுதியில் தூர்வாரப்படாத காரணத்தால் என்னதான் தண்ணீர் மேட்டூருக்கு வந்தாலும்கூட, மேட்டூரிலே இருந்து வெளிவிடப் பட்டாலும்கூட, கல்லணையிலிருந்து வெளியே வந்தாலும்கூட, அது வந்து சேருவது வகைப்படுத்துவதில் ஏற்பட்ட சிரமங்களை இந்தத் தரணியிலே, இந்தப் பூமி யிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிக நன்றாக அறிவீர்கள். அதற்கு ஒரு ஏற்பாடாகத்தான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தூர்வாருகிற பணியினை இந்த அரசு ஏற்றுக் கொண்டு இதுவரையிலே 108 கோடி ரூபாய் செலவில் அந்தப் பணிகள் நடைபெற்று 7,800 கிலோ மீட்டர் நீளமுள்ள ஆறுகள், கால்வாய்கள், வடிகால்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் மேலும் 50 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இப்படி தூர்வாரப்பட்ட காரணத்தால்தான் தண்ணீர் சிக்கனம் தண்ணீர் கிடைக்குமா? என்ற ஏக்கத்திற்கு இடையே கூட, தூர்வாரப்பட்டதின் பயனாக ஏற்பட்டுள்ள ஒரு ஆறுதல் இவைகளையெல்லாம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. நான் இதைச் சொல்வதால் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக வரும் போலிருக்கிறதே என்று யாரும் கருதத் தேவையில்லை.

நம்முடைய பழனிச்சாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், நான் சென்னைக்குச் சென்றேன், முதலமைச்சரைப் பார்த்தேன். அங்கே காவிரியில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு வரும் போலிருக்கிறதே என்ற எச்சரிக்கைச் செய்தேன் என்றெல்லாம் சொன்னார். நான் அப்பொழுதே அவரிடத்திலே சொன்னேன். ஊருக்குத் திரும்பிச் செல்லுங்கள். மழையும் வரும். தண்ணீரும் வரும் என்று சொன்னேன். அதைப்போல மழை நேற்றைக்கு நாகப்பட்டினம் பகுதியில் 2 மணி நேரம் பெய்திருக்கிறது. பழைய காலமாக இருந்தால் மகான் வந்தான், மழை பெய்தது என்று சொல்வார்கள். நான் சாதாரணமானவன்தான். மகான் அல்ல. ஆனாலும் மழை பெய்திருக்கிறது.

இன்னொரு நல்ல செய்தியையும் தஞ்சைத் தரணியிலே விவசாயிகளுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேட்டூரிலே காவிரியிலே விடப்படுகின்ற தண்ணீர் கர்நாடகத்திலிருந்து விடப்படுகின்ற தண்ணீர் ஒவ்வொரு நாளும் குறைந்து வருகிறது என்கிற கவலைக்கு மாறாக இன்று முதல் ஏறத்தாழ 37 ஆயிரம் கன அடி தண்ணீர் வரத் தொடங்கியிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

எனவே, விவசாயிகளுடைய கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்கிற அரசு இந்த அரசு. அதைப்போல, இதை,

இயற்கையினுடைய தொல்லைகளை இந்த அரசோடு சேர்ந்து பகிர்ந்து கொள்கிற கடமை உணர்ச்சி, பொறுப்புணர்ச்சி விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் அவர்களை வழி நடத்துகின்ற தலைவர்களுக்கும் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு இந்த அரசு தொடர்ந்து வழங்கிய நன்மைகளை விவசாயிகள் நிரம்பியுள்ள இந்தப் பெருங்கூட்டத்தில் உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

1990–ஆம் ஆண்டில் தான் இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினோம். அந்த இலவச மின்சாரத்திற்குப் பல நேரங்களில் ஆபத்து வந்தது. இலவசமாக மின்சாரம் வழங்கக்கூடாது. அது முறையல்ல என்று உலக வங்கி கூட கொஞ்சம் உறுமிப் பார்த்தது. ஆனால் அதற்கெல்லாம் இடம் தராமல் இன்றளவும் நாம் இந்த இலவச மின்சாரத்தைக் காப்பாற்றி வருகிறோம். தொடர்ந்து காப்பாற்றுவோம். இடையிலே வந்த கடந்த கால ஒரு அரசு கூட, அதைவிட்டுத் தருவதற்கு முன்வந்து உடனடியாக நாமெல்லாம் சேர்ந்துதான் போராட்டம் நடத்தி நாம் கொண்டு வந்த இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து காப்பாற்றுகின்ற அந்தப் பணியை நாம் நிறைவேற்றி முடித்திருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். 1996–ஆம் ஆண்டிற்குப் பிறகு விவசாயிகளுக்கு 8 இலட்சம் உர அடையாள அட்டைகள் பதினொன்னரை இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1.9.2000 முதல் திறக்கப்படுகின்றன. அதைப்பற்றிய விவரத்தை தம்பி நேரு இங்கே பேசும் போது குறிப்பிட்டார். 95–96–ஆம் ஆண்டு கடந்த கால ஆட்சியில் நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகம் 360 ரூபாய் என்றிருந்தது. சன்ன ரகம் 375 ரூபாயாக இருந்தது. இது 1996–க்குப் பின் படிப்படியாக ஏற்றப்பட்டு 99–2000–த்தில் நெல்கொள்முதல் விலை மோட்டா ரகம் 490 ரூபாய், சன்ன ரகம் 520 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படுகிறது. இன்னும் மத்திய சர்க்கார் விலை நிர்ணயம் செய்த பிறகு இன்னும் கொஞ்சம் இந்த விலை உயரும் என்ற நம்பிக்கையை நான் தருகின்றேன்.

காவிரிப்பாசனப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையைவிட குவிண்டாலுக்கு 35 ரூபாய் இடைநிலை செலவாக அரசு சார்பில் வழங்கப்படுகிறது. தர வெட்டுத் தொகை ரூபாய் 15–லிருந்து 5 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. தமிழக விவசாயிகளின் நலத்தினை முன்னிட்டு கருப்பு மற்றும் கிரே பகுதிகளிலும்கூட (Dark and Grey) ஏற்கெனவே கிணறுகள் வெட்டி மின்இணைப்பு கோரி விண்ணப்பம் செய்து பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு மின்இணைப்புகள் வழங்கிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மைய அரசின் நிர்ணய விலையை விட முந்தைய அரசினால் 8.5 சதவீதம் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பு டன் ஒன்றுக்கு 50 ரூபாய், 60 ரூபாய் என்ற அளவிலேயே அதிகரித்து விலை பரிந்துரைக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த அரசுதான் மைய அரசின் நிர்ணய விலையை விட டன் ஒன்றுக்கு 175 ரூபாய் கூடுதலாகப் பரிந்துரை விலையை நிர்ணயித்தது என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது.

### 10 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய்

அதன்படி 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 95–96–இல் கடந்த கால ஆட்சியில் நிர்ணயம் செய்த பரிந்துரை விலை வெறும் 560 ரூபாய் தான். இது 96–க்குப் பின் இந்த அரசால் படிப்படியாக உயர்த்தப்பட்டு 99–2000–த்தில் 740 ரூபாய் என்று பரிந்துரைக்கப்பட்டது என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது. தற்பொழுது 10 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வழங்கப்படும் என இந்த அரசு அறிவித்துள்ளது. ஆயிரம், ஆயிரம் என்று சொன்னாயே, எங்கே ஆயிரம் என்று கேட்டவர்களுக்கு பத்து சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு நிச்சயமாக 1000 ரூபாய் தரப்படும் என்று சொல்லி அப்படி இரண்டு, மூன்று ஆலைகளில் இன்று தரப்படுகின்ற அந்த சான்றையும் நாம் காட்டியிருக்கிறோம்.

நில உச்சவரம்பு சட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக வரும் என்று ஒரு காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நில உச்சவரம்பு சட்டம் வரபோகிறது என்ற எதிர்பார்ப்பு மிகையாக இருந்தது உங்களுக்குத் தெரியும். 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று 1960–ஆம் ஆண்டு உச்சவரம்பு கொண்டுவரப்பட்டது. ஆனால் அது வருவதற்கு முன்பே பெரிய பெரிய நிலச் சுவான்தார்களுக்கெல்லாம் அந்த செய்தி தெரிந்து அது வருவதற்கு முதல்நாள் அல்லது முதல் மாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு முன்பு தன் நிலங்களையெல்லாம் பிரித்து பிரித்து யார் யாருக்கு எழுதிவைக்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம், பிறந்தவர்களுக்கும் பிரித்துவைத்து, பிறக்கப் போகிறவர்களுக்கும் எழுதிவைத்து ஏமாற்றிவிட்ட காரணத்தால், காமராஜருடைய ஆட்சியையே சிலபேர் ஏமாற்றி விட்டார்கள். அப்படிப்பட்ட காரணத்தினாலே ஒரு ஏக்கர் நிலம்கூட அந்த உச்சவரம்பு சட்டத்தால் உபரி நிலமாக எடுக்கப்பட முடியவில்லை என்பதையும் நாடு மிக நன்றாக அறியும்.

### நில உச்சவரம்பு சட்டம்

அதனால்தான் அண்ணா அவர்கள் சட்டசபையிலே "இங்கே நீங்கள் கொண்டு வந்திருப்பது உச்சவரம்பு சட்டம் அல்ல, மிச்ச வரம்பு சட்டம்'' என்று வேடிக்கையாகவும், வேதனையோடும் சொன்னார்கள். அதற்குப் பிறகு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு குறிப்பாக அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு 69–ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்ற பிறகு 70–ஆம் ஆண்டில் 15.2.70 அன்று 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்ச வரம்பை திடீர் என்று மாற்றி, முன்கூட்டியே யாருக்கும்

சொல்லாமல் உச்சவரம்பு சட்டத்தை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராதான் ஒருவர் வைத்துக் கொள்ள முடியும் என்று உத்தரவு போட்டதின் காரணமாக ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 900 ஏக்கர் நிலம் உபரி நிலமாக எடுக்கப்பட்டது. அப்படி எடுக்கப்பட்டதில் மிச்ச சொச்சம்தான் வடபாதி மங்கலம் கரும்பு பண்ணையில் கரும்பு பயிர் செய்த நிலங்களைக்கூட பழனிச்சாமி போன்றவர்களெல்லாம் வைத்துக் கொண்டு அதை பிரித்துக் கொடுத்த நிகழ்ச்சியை நீங்களெல்லாம் யாரும் மறந்திருக்க முடியாது. இதன்மூலம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று உச்சவரம்பு கொண்டு வந்ததின் மூலம் நமது ஆட்சி கொண்டு வந்த காரணத்தினால் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 1 இலட்சத்து 37 ஆயிரத்து 236 பேர். இதிலே ஆதிதிராவிடர்கள் மாத்திரம் 61 ஆயிரத்து 985 பேர்.

அதைப் போலவேதான் குடியிருப்புமனைச் சட்டம். இந்தச் சட்டம் விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்கிற இடத்தில் அவன் கட்டிய வீடு அவனுக்குச் சொந்த மில்லாமல் அதை நிலச்சுவான்தார் என்றைக்குப் பிடுங்கிக் கொண்டு விடுவாரோ என்ற சூழ்நிலையில் இருந்த நிலையை மாற்றி குடியிருப்பு மனைகளையெல்லாம் அதிலே குடியிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கே சொந்தம் என்று அதை செயல்படுத்திகாட்டிய அரசும் இந்த அரசு தான்.

## விவசாயிகளுக்குச் செய்யப்பட வேண்டிய நல்ல காரியங்களை அரசு செய்யும்

புரட்சிகரமான இந்தத் திட்டத்தின் பயனாக அன்றைக்கு 1 இலட்சத்து 75 ஆயிரம் பேர் குடியிருக்கும் மணையில் இருந்த விவசாயத் தொழிலாளர்கள் இலாபம் பெற்றார்கள். பயனடைந்தார்கள். இவைகளெல்லாம் விவசாயிகளுக்காக, விவசாயத் தொழிலாளர்களுக்காக, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்காக இந்த அரசு செய்த நற்காரியங்கள். நேரமில்லை எடுத்துச் சொல்வதற்கு. அவ்வளவு காரியங்கள் விவசாயிகளுக் காக செய்யப்பட்டிருக்கிறது. அது போதுமானதா என்றால் இல்லை. முழுமையாக நாங்கள் எதையும் செய்துவிட்டோம் என்று நான் சொல்லவில்லை. அதிலே குறைபாடுகள் இருக்கலாம். அதைச் சுட்டிக்காட்ட நல்ல எதிர்க்கட்சிகள் இருக்கும்போது அதை ஏற்றுக் கொள்ள ஒரு தரமான ஆளுங்கட்சி முன்வரவேண்டுமென்பதை நான் அறியாதவன் அல்ல. அந்த வகையிலே மேலும் விவசாயிகளுக்கு நாங்கள் கடன் பட்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு செய்யப்பட வேண்டிய நல்ல காரியங்களை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும். அவர்களுக்காகச் செய்யப்பட்டுள்ள காரியம்தான் இன்றைக்குப் புதிதாக, பொதுவாக இந்த மாவட்டத்தில் நல்ல நிர்வாகம் நடைபெறவேண்டும். என்னதான் மாவட்ட ஆட்சித்தலைவர் உமாசங்கர் அவர்கள் திறமையான மாவட்ட ஆட்சித்தலைவர் என்றாலும்கூட, அவர் அமர்ந்து வேலை பார்க்க – அலுவல் நடத்த வருகின்ற புகார்களை எதிர்கொள்ள ஒரு இடம் தேவை. அந்த இடம் நல்ல இடமாக, வசதியான இடமாக, வாய்ப்புள்ள இடமாக, அனைவரும் சென்று தங்களுடைய எண்ணங்களை வெளியிடக்கூடிய இடமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த இடம் இங்கே மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

பத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள் இந்த நான்கு ஆண்டுக்காலத்தில் இந்த ஆட்சியில் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் எழிலோடும், அழகோடும் கட்டப்பட்டிருப்பதற்குக் காரணம் இங்கே தம்பி பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன் சொன்னார். நாங்களெல்லாம் இதைச் செய்தாலும்கூட, கலைஞர் எந்தத் தூண் எங்கே இருக்கவேண்டும் என்பது போன்றவைகளையெல்லாம் கூட அவர் சொல்லித்தான் நாங்கள் செய்தோம் என்று சொன்னார்.

இது தலைவரைப் பாராட்டுவதற்காக அவர் காட்டிய அடக்கமே தவிர, வேறல்ல. பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனுடைய ஆற்றல், அவருடைய அயராத உழைப்பு இந்த அழகான கட்டடங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்காக தம்பி துரைமுருகனுக்கு எனது நன்றியை, பாராட்டுதலை உங்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ்நாட்டில் குடிநீர் பற்றாக்குறை பெருமளவு குறைந்திருக்கிறது

அதைப் போலவேதான் காலையில்கூட நாகையில் சொன்னேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் குடிநீர் பற்றாக்குறை என்ற அந்தக் கவலை பெருமளவு குறைந்திருக்கிறது. முழுமையாக குறைந்திருக்கிறது என்று சொல்லமாட்டேன். பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்றைக்கு 95 சதவீத மக்களுக்கு கிடைக்கிறதென்றால் சென்னையிலேதான் கொஞ்சம் குறைவாக இருந்தது. இப்போது கிருஷ்ணாநீரும் வர ஆரம்பித்துவிட்டது. எனவே அந்தக் குறைகளையும் நீக்கி முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்றைக்குத் தமிழக மக்களுக்குக் கிடைக்கிறதென்றால் அதற்கு அரும்பாடுபட்டு அல்லும், பகலும் உழைத்துக் கொண்டிருப்பவர் என்னுடைய தம்பி உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி என்பதை நானும் மறக்க முடியாது, நீங்களும் மறக்க முடியாது. அதைப்போலவே பணியாற்றுகின்ற அத்தனை அமைச்சர்களும், இங்கே வீற்றிருக்கின்ற அமைச்சர்கள் உள்பட அனைத்து அமைச்சர்களும் தங்களுடைய துறையை ஒழுங்காக கவனிக்கிறார்கள். நன்றாக கவனிக்கிறார்களா? என்று பார்க்க நான் ஒரு ஒற்றர் குழு வைத்திருப்பதாக தம்பி கோ.சி.மணி சொன்னார். அது ஒற்றர் குழு அல்ல. ஒற்றுமைக் குழுவே தவிர ஒற்றர் குழு அல்ல.

*– திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை 27–8–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...*

★ ★ ★

# இருதயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

உடலெனும் உலகின் போக்குவரத்துச் சாதனம் இரத்தம். இதில் உலா வரும் நெடுஞ்சாலைகள் இரத்தக் குழாய்கள். ஆக்ஸிஜனையும் ஊட்டச் சத்துக்களையும் ஏற்றிச் சென்று உடலிலுள்ள எல்லா செல்களுக்கும் ஊட்டுகிறது. அவைகள் வெளியிடும் கழிவுப் பொருள்களை அவ்வப்போது அகற்றியும் வருகிறது. இரத்தமெனும் போக்குவரத்துச் சாதனம், பொதுவாக எல்லோரும் இதைப் போக்குவரத்துச் சாதனம் என்றே குறிப்பிடுகிறார்கள். ஆனால் உண்மையில் உடலெனும் உலகம் வளம் பெற்று வாழ, வளர உதவும் "உயிர்ப் பாசனம்" இது. இந்த உயிர்ப்பாசனம் செய்ய உதவுவது எது? இருதயம் எனும் தசை உறுப்பு மார்புக் கூட்டினுள் சற்றுச் சாய்வாக நுரையீரல்களுக்கிடையே இது அமைந்துள்ளது.




இருதயமும் அதையொட்டி அமைந்துள்ள உறுப்புகளும்
1. மூச்சுக்குழல், 2. உணவுக்குழல், 3. இடது பிராகியோ செபாலிக் சிரை, 4. நுரையீரல் தமனி, 5. மகாதமனி, 6. இடது நுரையீரல் சிரை, 7. இருதயம், 8. இடது நுரையீரல் (உள்ளிழுக்கப்பட்ட நிலை), 9. மகாதமனி, 10. உணவுக்குழல், 11. கீழ்ப்பெருஞ்சிரை, 12. உதரவிதானம், 13. மேற்பெருஞ்சிரை, 14. வலது பிராகியோ செபாலிக்சிரை, 15. காரையெலும்பு, 16. நுரையீரல் சிகரம்.

இருதயம் ஒரு பம்பு. இதை இரட்டைப்பம்பு என்றும் சொல்லலாம் அல்லது இரண்டு மின்சுற்றுகளை இயக்கும் ஒற்றை பம்பு என்றும் சொல்லலாம். ஒருமுறை துடிக்கும் போது நுரையீரலிலிருந்து ஆக்ஸிஜனூட்டம் பெற்ற இரத்தம் இடதுபுறம் வழியாக உடலெங்கும் செல்லுகிறது. அதே சமயம் ஆக்ஸிஜனூட்டம் பெற வலதுபுறமாக அசுத்த இரத்தம் நுரையீரலுக்குள் செல்லுகிறது.

இருதயம் நான்கு அறைகளைக் கொண்டது. மேற்புறம் இரண்டு அறைகள், கீழ்ப்புறம் இரண்டு அறைகள். இவைகள் வலதுபுறம், இடதுபுறம் என்று பிரிக்கப்பட்டுள்ளன. மேற்புற அறைகள் "வரவேற்புக் கூடங்கள்'' கீழ்ப்புற அறைகள் ''வழி அனுப்பு நிலையங்கள்". மேற்புற அறைகளுக்கு ஏட்ரியங்கள் என்று பெயர். கீழ்ப்புற அறைகளுக்கு வெண்ரிக்கிள்கள் என்று பெயர். ஏட்ரியங்கள் பணி சற்று இலகுவானது. எனவே தசைச்சுவர்கள் மெல்லியதாக இருக்கும். வெண்ரிக்கிள்கள் பணி சற்றுக் கடினமானவை. இவைகளின் தசைச்சுவர்கள் பருமனாகவும் வலிமை உடையதாகவும் இருக்கும். இடது ஏட்ரியத்திலிருந்து இரத்தம் இடது வெண்ரிக்கிளுக்குச் செல்ல முடியும். அதேபோல் வலது ஏட்ரியத்திலிருந்து வலது வெண்ரிக்கிளுக்குச் செல்ல முடியும். இருதயத்தை இடது புறம் வலது புறம் என்று பிரிக்கும் குறுக்குத் தடுப்புச் சுவர்கள் உள்ளன. இதனால் ஒரு புறம் வரும் இரத்தம் அடுத்த புறமுள்ள இரத்தத்துடன் கலப்பதில்லை. பிறவியிலேயே இருதயத்தில் ஏற்பட்டுள்ள நோய்கள், வளர்ச்சிக் குறை காரணமாக இருபுறமுள்ள இரத்தமும் கலக்கும் வாய்ப்பு ஏற்படுவதுண்டு.

ஆக்ஸிஜனற்ற அல்லது குறைந்த இரத்தம் உடலின் எல்லா பகுதிகளிலிருந்தும் (இருதயச்சுவர் தவிர) மேற்பெருஞ்சிரை, கீழ்ப்பெருஞ்சிரை வழியாக வலது ஏட்ரியத்தை அடைகிறது. இருதயப் பகுதியிலிருந்து இரத்தத்தை இங்கு கொண்டு வருவது கரோனரி சைனஸ். இங்கிருந்து மூவிதழ்களைக் கொண்ட ஒரு தடுக்கிதழ் வழியாக வலது வெண்ரிக்கிளை அடைந்து நுரையீரல் தமனி வழியாக நுரையீரல்களை அடைகிறது. அங்கு வளிய பரிமாற்றம் நடைபெறுகிறது. இந்த இரத்தத்திலுள்ள கரியமில வாயுவை வெளியேற்றி விட்டு ஆக்ஸிஜனூட்டம் பெறுகிறது. பின்னர் ஆக்ஸிஜனூட்டம் பெற்ற இரத்தம் நுரையீரல் சிரைகள் வழியாக இடது ஏட்ரியத்தை அடைகிறது. அங்கிருந்து மிட்ரல் வால்வு (ஈரிதழ் தடுக்கிதழ்) வழியாக இடது வெண்ரிக்கிளை அடைந்து மகாதமனி மூலமாக உடலெங்கும் வினியோகிக்கப் படுகிறது.

இருதயம் நல்ல, நிலையிலிருந்து சரிவரச் செயல்பட்டால்தான் "இந்த உயிர் பாசனம்" உடலை ஊட்டி

● என். ஸ்ரீநிவாசன்

வளர்க்கும். வாழவைக்கும். இருதயம் சரிவர செயல்படாவிட்டால் அல்லது வேறு ஏதேனும் கோளாறுகள் இருந்தால் "உயிர்ப்பாசனம்" சரிவர நடைபெறாது. இருதயத்தின் கட்டமைப்புப் பணிகள் பின்வருமாறு உள்ளன.

இருதயம் நான்கு தசை மடிப்புகளைக் கொண்டது. அவைகள் 1. உள்நோக்கிய பெரிகார்டியம், 2. எபிகார்டியம் 3. மையோகார்டியம் 4. என்டோகார்டியம் என்பன.

இருதயம் தனது பணிகளைச் சுருங்கி விரிவதன் மூலம் செய்கிறது. இருதயம் சுருங்குவது சிஸ்டோலி, இருதயம் விரிவது டயஸ்டொலி. இருதயம் 0.8 வினாடிகளுக்கு ஒருமுறை சுருங்கி விரிகிறது. இதற்கு இருதய வட்டணை என்று பெயர். ஒரு நிமிடத்தில் 75 இருதய வட்டணைகள் நடைபெறுகின்றன. உடலின் இரத்த சுழற்சி இருதயம் சீராக இயங்குவதில்தான் உள்ளது.

இரத்த சுழற்சியில் இரத்தம் ஒரே திக்கில் செல்ல வழி வகுக்கும் தடுக்கிதழ்கள் இருதயத்தில் நான்கு உள்ளன. அவைகள் :

1. ஈரிதழ் வால்வு, இதை மிட்ரல் வால்வு என்பர். இடது ஏட்ரியத்திற்கும் இடது வெண்ரிக்களுக்கு மிடையேயுள்ளது.
2. மூவிதழ் வால்வு இதை டிரைகஸ்பிட் வால்வு என்பர். வலது ஏட்ரியத்திற்கும் வலது வெண்ரிக்களுக்கும் இடையே உள்ளது.
3. அர்த்தசந்திர வடிவமுடைய மூன்று மடல்களைக் கொண்ட மகாதமனி வால்வு. இது இடது வெண்ரிக்களுக்கும் மகாதமனிக்கும் இடையே உள்ளது.
4. நுரையீரல் வால்வு. இதுவும் அர்த்தசந்திர வடிவம் கொண்டது. வலது வெண்ரிக்களுக்கும் நுரையீரல் தமனிக்கும் இடையே உள்ளது.

இந்த தடுக்கிதழ்கள் சரியாக இயங்காவிட்டாலோ, அல்லது இவைகளில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டாலோ இருதயத்தின் பணி பாதிக்கப்படுகிறது. இதன் விளைவாக இரத்த சுழற்சியிலும் பாதிப்பு உண்டாகிறது.

இருதயம் இரத்தத்தை விசையுடன் செலுத்தும் பொறி என்று வைத்துக் கொள்ளலாம். இந்தப் பொறியை இயக்க ஒரு விசை வேண்டுமே. நமது வீட்டு பம்ப்பை இயக்க மின்சக்தியைப் பயன்படுத்துகிறோம். அதேபோல் இருதயப் பணியை இரத்தத்தை விசையுடன் ஒரே சீராக ஒரே வேகத்துடன் செலுத்தும் பணியை நிரலொழுங்கு செய்வதும் உயிரி மினியியல் விளைவுதான். சினோ ஏட்ரியல் கணு எனும் இருதய துடிப்பு நிர்மாணி உருவாக்கும் மின் அலைகள் ஒவ்வொரு இருதயத் துடிப்பையும் உண்டாக்குகிறது. இது உண்டாக்கும் கிளர்த்தல் ஏட்ரியங்களைச் சுருங்கச் செய்கிறது. இந்தச் சுருங்கலியக்கம் ஏட்ரிய–வெண்ரிக்கிள் கணுவைத் தூண்டுகிறது. இதிலிருந்து உருவாகும் கிளர்த்தல் சிறப்பு ஊடு கடத்து சாதனங்கள் மூலம் பரவி வெண்ரிக்கிளைச் சுருங்கச் செய்கின்றன.

தவிர இருதயப்பணி ஒரே சீராகவும் வேகத்துடனும் இயங்க துணை புரிபவை பரிவு நரம்புகளும், துணைப்பரிவு நரம்புகளும். பரிவு நரம்புகள் சுருங்கலியக்கத்தின் வேகத்தையும் வலிமையையும் அதிகரிக்கின்றன. துணைப்பரிவு நரம்புகள் அடங்கல் செய்கின்றன. மேலும் சில குறிப்பிட்ட கட்டங்களில் வேதிப்பொருள்களும் இருதய நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்றன. நாளமில்லா சுரப்பிகளான அட்ரினல் சுரப்பி சுரக்கும் அட்ரினலைன் எனும் ஹார்மோன் இரத்தத்தில் கலந்து சென்று இருதயத்தை அடைகிறது. இருதயத் துடிப்பின் வேகத்தையும் திறனையும் அதிகரிக்கிறது.

ஏறக்குறைய 300 கிராம் எடையுள்ள மிகச்சிறிய அமைப்பு இருதயம். கருவிலிருந்து கடைசிவரை இது செய்யும் பணியோ இமாலயச் சாதனைகள் தான். உடலெனும் உலகம் உயிர்ப்புடன் இயங்க வேண்டுமென்றால் இது ஒரே சீராகத் தொடர்ந்து இயங்கவேண்டும்.

**இருதய நோய் வகைகள், அறிகுறிகள்**

உடலுக்கு "உயிர்ப்பாசனம்" செய்வது இரத்தம். இரத்தம் செல்லும் பாதைகள் இரத்த நாளங்கள், அதாவது தமனிகள் சிரைகள் தந்துகிகள் முதலியன இரத்தத்தை இப்பாதைகளில் உந்திச் செலுத்தும் விசைப் பொறி இருதயம். இவைகள் ஒன்றையொன்று சார்ந்து இணைந்து செயல்படும் இரத்த சுழற்சி கூறமைவு. இவைகளில் ஏதேனும் ஒன்றில் பழுது ஏற்பட்டாலோ, நோய் பற்றினாலோ இந்தக் கூறமைவு முழுவதுமே பாதிக்கப்படும்.

இருதய நோய்களைப் பொதுவாக "மௌனநோய்கள்" என்று சொல்லலாம். சில குறிப்பிட்ட நோய் வகைகளைத் தவிர மற்றவைகள் இருப்பதற்கான அறிகுறிகளே தெரியாது. "நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை" என்ற பெருமையை மனிதனுக்கு கொடுத்தவற்றுள் இருதய நோயையும் முக்கிய காரணமாகச் சொல்லலாம். சிறு வயதிலிருந்து சில கோளாறுகள் இருந்திருக்கலாம். ஆனால் வயது முதிர்ந்த உடன் தான் அவைகள் "விஸ்வரூபம்" எடுக்கும்.

இருதய நோய் இருக்கும் அல்லது ஆரம்பமாகும் அறிகுறிகள் அவ்வளவு எளிதாகத் தெரிவதில்லை. தற்செயலாகத்தான் கண்டு பிடிக்கப்படுகிறது. வேறு ஏதேனும் நோய்க்காகவோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ மருத்துவ சோதனை செய்யும் போதுதான் இது பெரும்பாலும் கண்டுபிடிக்கப்படுகிறது. டாக்டர்கள் பரிசோதிக்கும் போது பல உண்மைகள் வெளிவரும். நாடித்துடிப்பு, இருதயத் துடிப்பு முதலியன பல இரகசியங்களை டாக்டர்களுக்குத் தெரிவித்துவிடும்.

நாடித் துடிப்பு உடலில் பல இடங்களில் தொட்டுப்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். தமனிச் சுவர்களில் விட்டுவிட்டு ஏற்படும் ஏற்ற தாழ்வுகளே நாடித்துடிப்பு. நாடித்துடிப்பை மேலார்ந்த தமனிகளில் தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். பொதுவாக மணிக்கட்டுப் பகுதியில் ரேடியல் தமனியில் தொட்டுணர்ந்து கணக்கிடப்படுகிறது. தவிர முழங்கை, அக்குள், கழுத்து, பொட்டு, அரை முதலிய இடங்களிலும் கண்டுணரலாம். இருதயத் துடிப்பின் வேகம், விகிதம், லயம் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை இது தெரிவித்துவிடும். மகாதமனி – தடுக்கிதழ் குறுகலாக இருந்தால் அதன் வழியாக வரும் இரத்தத்தின் அளவும் வேகமும் குறையும். அதற்கேற்ப நாடித்துடிப்பிலும் மாறுதல்கள் தென்படும்.

இரத்த அழுத்தத்தை கண்டறிய ஸ்பிக்மோமானோ மீட்டர், டோனோ மீட்டர் கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. தவிர இருதய மின்னலை வரைபடம், இருதய எக்ஸ்ரே, இருதய எதிரொலி வரைபடம் முதலான கருவிகள் துணையுடன் இருதயம் இரத்த நாளம் தொடர்பான நோய்கள் கண்டறியப்படுகின்றன. மருத்துவ சோதனையின் போது இருதய ஒலியில் வழக்கத்திற்கு விரோதமான ஒலிக்குறிப்பு உண்டாவது தெரிந்து விடுகிறது. இந்த புதிய ஒலிக்கு இருதய முணுமுணுப்பு என்று பெயர். இருதய முணுமுணுப்பு மட்டுமே ஒருவனை இருதய நோயாளி என்று முத்திரை குத்திவிடாது. இருதய நோய்களுக்கு என்று சில நோய்க்குறிகள் உள்ளன. எனினும் அந்த நோய்க்குறிகளை மட்டுமே கொண்டு இருதய நோய்தான் என்று முடிவாகக் கூறிவிட முடியாது. எனினும் பெரும்பான்மையான சூழ்நிலைகளில் இந்த நோய்க்குறிகள் இருதய நோய்களின் அறிகுறிகளாகவே விளங்குகிறது.

1. தீராத சோர்வு அல்லது அசதி
2. மூச்சிறைப்பு
3. மார்புவலி
4. கணுக்கால் வீக்கம்
5. இடது கையில் வலி
6. மயக்கம் அல்லது கிறுகிறுப்பு
7. குறைந்த அளவு சிறுநீர் பிரிதல்–என்பன.

உடல் சோர்வு அடிக்கடி ஏற்படுவதும் இருதய நோய்களின் அறிகுறியே. இரத்தத்தில் போதுமான ஆக்ஸிஜன் இல்லாததே இதற்குக் காரணம். எனினும் இதை ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு இருதய நோய் என்று கூறிவிடமுடியாது.

மூச்சிரைப்பு என்பது மூச்சு விடுவதில் ஏற்படும் சிரமம். இது இருதய நோயின் மிக முக்கியமான அறிகுறியாகும். மூச்சுவிடுவதில் சிரமம் பலருக்குப் பல விதங்களில் ஏற்படுகிறது. சாதாரணமாக உட்கார்ந்து கொண்டு ஓய்வெடுக்கும் போதே சிலருக்கு மூச்சிரைப்பு வரும். மாடிப்படி ஏறி இறங்கினால் மூச்சிரைப்பு வரும். வேறு சிலருக்கு அதிக உடலுழைப்பினால் இது ஏற்படும்.

மார்பு வலியும் இருதய நோயின் அறிகுறிதான். எனினும் மார்பு வலியைக் கொண்டு மட்டும் இருதய நோய் என்று நிர்ணயித்து விடமுடியாது. இரைப்பையில் ஏற்படும் நலிவு, மார்புத் தசை அழற்சி மற்றும் பல நோய்களின் காரணமாகவும் மார்பு வலி ஏற்படலாம்.




**இருதயத்திற்கு நரம்பூட்டம் அளிக்கும் நரம்புகள்**

1. இடது வேகஸ் நரம்புகள், 2. பரிவு நரம்புகள், 3. துணைப் பரிவு நரம்புகள், 4. இடது நுரையீரல் தமனி, 5. பரிவு நரம்புத் தொடர், 6. இடது வெண்ட்ரிக்கிள், 7. கீழிறங்கு மகாதமனி, 8. உணவுக்குழல் நரம்புத் தொகுதி, 9. வலது வேகஸ் நரம்பு, 10. கீழ்ப்பெருஞ்சிரை, 11. பரிவு நரம்புத் தொடர், 12. நுரையீரல் கிளை, 13. மகாதமனி, 14. வலது நுரையீரல் தமனி, 15. இருதய நரம்பு தொகுதி, 16. வலது வேகஸ் நரம்பு

சிலருக்கு மார்பு படபடப்பு இருக்கும். லயம் தவறிய இருதயத் துடிப்பை வெளிப்படுத்துவது. இருதயத் துடிப்பு சீராக லயத்தோடு இல்லாமல் வேகமாகவோ, மெதுவாகவோ இருக்கும் வழக்கத்தைவிட அதிகமான நாடித் துடிப்புகளும் இருக்கும்.

கணுக்கால்களில் வீக்கம் ஏற்படுவது. இடது கையில் வலி, கிறுகிறுப்பு, குறைந்த அளவு சிறுநீர் போதல், அளவுக்கு அதிகமாக வியர்த்தல், தூக்கமின்மை, அஜீர்ணம், அடிக்கடி வாந்தி எடுத்தல் முதலானவைகளும் இருதய நோயின் அறிகுறிகள். இருதய நோய் என்று குறிப்பிடுவது இருதயத்தைப் பற்றிய நோய்களை மட்டும் அல்லாமல் இரத்த நாளங்களின் நோய்களைப் பற்றியும் குறிப்பிடுவதுதான்.

**இருதய நோய்க் காரணங்கள்**

இருதய இரத்த நாள வியாதிகளினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை இப்போது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நம் நாட்டில் டில்லி நகரில் மட்டும் 1000க்கு 32 பேர்கள் இருதய நோய்களின் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் 1000க்கு 111 பேர்களுக்கு இரத்த மிகை அழுத்தம் உள்ளதாம். நாம் முன்னுக்கு வரவேண்டும் என்ற பரபரப்பு

ஓய்வில்லாமல் உழைத்தல், போதிய தேகப் பயிற்சி செய்யாமை முதலியன இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் இருதய வியாதிகள் பெரும்பாலும் நாமாக வரவழைத்துக் கொள்வது தான். நாம் என்ன சாப்பிடுகிறோம்? நாம் என்ன செய்கிறோம்? நாம் எப்படி நடந்து கொள்கிறோம்? என்பனவெல்லாம் இருதய நோயின் காரணிகளாக விளங்குகின்றன. தேகப் பயிற்சியின் அவசியம் பற்றியோ, ஊட்ட உணவின் முக்கியம் பற்றியோ அறியாதது ஒரு காரணம். புகை பிடித்தல், குடி முதலியன மற்றொரு காரணம். இருதய நோய்கள் ஏற்படுவதற்கு இவைகளைப் போல் இன்னும் எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை :

1. பிறவி இருதய நோய்கள்
2. முடக்கு வாதக்காய்ச்சல்
3. காக்காய் வலிப்பு வகை
4. கிரந்தி, சோகை, பெரிபெரி முதலான நோய்கள்
5. உணர்ச்சிகள் உருவாக்குபவை
6. இரத்த மிகை அழுத்தம்
7. கரோனரி நாள அடைப்பு முதலியன.

கருவிலே குழந்தை வளரும் போதே ஏற்படும் இருதயக் கோளாறுகள் பின்னர் இரத்த சுழற்சி சரிவர நடைபெறமுடியாதவாறு தடுக்கிறது. இதனால் இருதயம் பெரிதும் பாதிக்கப்பட்டு பல இருதய நோய்கள் உண்டாகின்றன.

முடக்கு வாதக் காய்ச்சலும் இருதயத்தைப் பாதிக்கின்றன. இருதய தடுக்கிதழ்கள், எண்டோகார்டியம் எனும் உள்ளுறை, மையோகார்டியம் எனப்படும் நடு உறை முதலியன முடக்குவாதக் காய்ச்சலினால் பாதிக்கப்படுகிறது. இதனால் இருதயப்பணியில் கோளாறுகள் ஏற்படுகின்றன.

காக்காய் வலிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் முடக்குவாதம். இருதய நோய்கள் உண்டாவதற்கான முக்கிய காரணங்களில் முடக்கு வாதமும் ஒன்றாகும். எனவே காக்காய் வலிப்பு நோயினால் இருதயம் பாதிக்கப்படுவதில் வியப்பு ஒன்றுமில்லை. காக்காய் வலிப்பினால் முதன் முறையாக இருதயம் பாதிக்கப்படும் போது நாடித்துடிப்பு துரிதமாக இருக்கும். இருதயம் சற்று விரிவடைந்து, இருதயத் துடிப்பு வழக்கமாக ஏற்படும் இடத்தை விட்டுச் சற்று விலகி ஏற்படும். இருதய முதல் ஒலியின் ஓசை வழக்கத்தை விடக் குறைவாக இருக்கும். அத்துடன் மிட்ரல் தடுக்கிதழ் பகுதியில் லேசான முணுமுணுப்பு ஒலியும் உண்டாகும். இந்த அறிகுறிகள் மையோகார்டிட்டிஸ் எனும் இருதய தசை அழற்சியைக் குறிப்பவை. முடக்குவாதக் காய்ச்சலினால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட இருதயத்தில் இந்த நோயின் தாக்கம் ஏற்பட்டால் அது தடுக்கிதழ்களைப் பாதித்துவிடும்.

கிரந்தி, சோகை, பெரிபெரி போன்ற நோய்களும் இருதயப் பணியைப் பாதிக்கின்றன. இருதய தடுக்கிதழ்களில், கோளாறு, மையோகார்டியம் எனும் இருதயத் தசையில் நலிவு, இருதயத்தின் வலது பக்கம் விரிவடைதல் முதலியன இதனால் ஏற்படுகின்றன.

சில நோயாளிகளைப் பரிசோதிக்கும்போது இருதய நோய்க்கான எந்தவித அறிகுறிகளும் தென்படுவதில்லை. எனினும் இருதய இரத்த நாள நோய்கள் அவர்களைப் பாதித்துள்ளன. இதற்குக் காரணம் உணர்ச்சிகள் – பயம், பதட்டம், மனதில் கட்டுப்படுத்தி வைக்கப்பட்ட உணர்வுகள், எதிர்பாராமல் கேள்விப்படும் பெருமகிழ்ச்சியான செய்தி அல்லது அதிர்ச்சி தரும் செய்திகள் இருதயத்தைப் பாதித்து விடுகின்றன. திடீரென்று லாட்டரியில் பெரும் பணம் கிடைத்த மகிழ்ச்சியைத் தாங்க முடியாத சிலருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. மரணமும் சம்பவித்திருக்கிறது. இதே போல் அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேட்டு நிலை குலைந்து இருதய நோய்க்குள்ளானவர்களும் உண்டு.

இரத்த மிகை அழுத்தத்தினாலும் ஆஸ்துமா, மூச்சு கிளைக்குழல் அழற்சியினாலும், வெண்ரிக்கிளின் வேலைப்பளு அதிகரிக்கிறது. இதனால் இருதயத்தின் எல்லா பகுதிகளும் நாளடைவில் சீர்கெட்டுப் போய்விடுகின்றன.

இருதயத் தசை சரிவர இயங்க அதற்குத் தேவையான இரத்த ஊட்டம் வேண்டும். ஒரு வங்கியின் காசாளர் போல இருதயம். நாள் முழுவதும் இலட்சக் கணக்கான ரூபாய்களை வங்கிக் காசாளர் எண்ணிக் கொண்டிருந்தாலும் அவரது வாழ்க்கைச் செலவுக்குத் தேவையானதை அவர் ஊதியமாகத்தான் பெற்றுக் கொள்கிறார். நேரடியாக எடுத்துக் கொள்வதில்லை. அதே போல்தான் இருதயமும். இது முழுவதும் இரத்தம் எப்போதும் நிரம்பியிருந்தாலும் தனக்குத் தேவையானவற்றை நேரிடையாக எடுத்துக் கொள்ள முடியாது. இருதயத்திற்கு இரத்த ஊட்டம் அளிப்பது கரோனரி நாளங்கள். இதில் ஏற்படும் அடைப்புகள் இருதயத் தசைகளைச் சிதைவுறச் செய்கின்றன. இதனால் இருதயம் பாதிக்கப்படுகிறது. இதனால் மாரடைப்பு ஏற்படுகிறது.

இருதய நோய்களின் முக்கிய காரணங்கள் இவை.

– *"உடலியல் கலைக் களஞ்சியம்"*
*புத்தகத் தொகுப்பிலிருந்து...*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927

# கலைஞர் அரசில்

# மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்

**ஜனவரி 99 முதல் ஜூலை 2000 வரை**
**வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 12.84 கோடி**



**பலன்பெற்ற மகளிர் ஒரு லட்சத்து பதினெட்டாயிரம்**








## சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்

மகளிர் மேம்பாட்டிற்காக உருவான இந்தத் திட்டம், கந்துவட்டி தொல்லையிலிருந்து மகளிரை விடுவிக்கவும், அவர்கள் வியாபாரம் பல்கிப் பெருகவும், சேமிப்பு வளரவும் நியாயமான வட்டியில் கடன் வழங்கும் திட்டமாகும். இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில்தான் நகரங்களிலும் கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் இத்திட்டத்தினைப் பற்றி அறிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை அணுகலாம்.

பதிவு எண். M.8676
Licence No.TN/MS/(C)/PP-23.

# தமிழரசு

